சிறகு

Sirahu Monthly Free Issue | January 2012 | 647 - 866 - 9464 | பறவை 5 சிறகு 59

Dr. கோபால் கோபாலகிருஸ்ண
குடும்ப பல் வைத்தியர்
எல்லாவிதமான பல் வைத்தியத்திற்கும் முக்கியமாக கிளிப்புப் போடுதல் சேவைக்கும் நாடுங்கள்
பல் வலித்தால் பிடுங்கத் தேவையில்லை வேர் அடைத்தல் மூலம் உறுதியாக்கலாம்
1910 Kennedy Road, Unit #7
Scarborough, ON.
www.kennedydentaloffice.com
416.299.7080

அரசு – கூட்டமைப்பு பேச்சுவார்த்தை இக்கட்டான நிலையில்!

LOSING WEIGHT AFTER BABY
647-893-1219
facebook Jesmy Ruban
Drop 3 sizes in 3 minutes

JRS College மேலதிக விபரம் 9ம் பக்கம்

HomeLife/Future Realty Inc. Brokerage
Cyril Rajakumar B.Sc
Sales Representative
Cell: 416-721-5063
cyril.rk@gmail.com
Bus: 905-201-9977 Fax: 905-201-9229
7 Eastvale Dr., Suite 205 Markham, ON, L3S 4N8

HomeLife Landmark Realty Inc.
Brokerage
Ponniah Sarvathayaparan
Sales Representative
Cell: 647-866-9464
Email: sirahu_news@yahoo.ca
5200 Finch Ave. E, Suite 206
Toronto, ON M1S 4Z4
Tel: 416-386-1200
Fax: 416-386-1500

Homelife GTA realty INC., Brokerage
THANA SUSEENDRA
Sales Representative
Cell 416-893-4376
Off 416-321-6969

DENTAL CLINIC
DR. IRU VIJAYANATHAN
3150 Eglinton Ave East
Scarborough
(Markham & Eglinton)
416-264-3232
3151 Markham Road #129
Scarborough
(Markham & Steels)
416-609-2022

நீங்கள் என்னிடம் வாகனம் வாங்கவில்லையென்றால் அதிக பணம் கொடுத்தே வாங்கியுள்ளீர்கள்
HOGAN chev.com
Any Brand you Want.
1-877-496-8264

வீடு,வியாபார நிறுவனங்கள்,நிலம் வாங்க.விற்க..முதலிட....முன்னேற....
என்றும் உங்கள் நண்பன்
தனா யோகநாதன்
Thana Yoganathan AMP
Sales Representative
416.418.5749
Full time 24/7
HomeLife Landmark Realty Inc., Brokerage

றிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
1109 Bay St., Toronto,
Tel: 416-975-9674
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
COPY from 3¢
STUDENTS GET 5% OFF (min $10)
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
OPEN 7 DAYS

RE/MAX
மகேன் சிங்கராஜா
RE/MAX VISION REALTY INC.,REALTOR
வீடு வாங்க விற்க
Direct :416.302.7283(SAVE)
2210 MARKHAM ROAD, UNIT -1,TORONTO, ONTARIO M1B5V6

HomeLife Superstars
Real Estate Ltd. - Brokerage
Independently owned & Operated
Fax : 416 - 740 - 8314
THILLAINATHAN PARIMALAKANTHAN
Broker
Residential & Commercial
email : thillap@yahoo.ca
Off : 416 - 740 - 4000
Dir : 416 - 471 - 8297
23, Westmore Drive, Unit - 102
Rexdale, ON, M9V 3Y7

HELEN E.ANTHONIPILLAI
SALES REPRESENTATIVE
Cell: 416 830 5724, Bus: 905 201 9977
Email: helen.exatina@gmail.com
Homelife Future Realty INC Brokerge
7 East Vale Drive, Unit 205
Markham, Ont, L3S 4N8
HOMELIFE HIGHER STANDARDS

அமைதியான
வாழ்க்கைக்கு
ஓர் அருமையான
தீர்வு காப்புறுதி

Life Insurance • Critical Insurance • Long Term Coverage • Disability Insurance
Final Expenses • Dental & Hospital Expenses • Travel Insurance

All your Insurance Needs

Thaya Balan
Licensed Insurance Broker
Dir: **416.831.4725**
Morning Star Financial Service
5050 Dufferin St., Suite 218, Toronto, ON M3H 5T5
Tel: 416.661.9155 ext. 340

Industrial Alliance Insurance and Financial Services Inc. · Medavie Blue Cross · Transamerica Reinsurance · Canada Life · Manulife Financial · RBC Insurance

Jeeva Pearl Ratnarajah Dip. in Acc
Sales Representative
HomeLife Higher Standards
Direct: 416-722-5338
Bus : 416-264-0101
Fax : 416-261-1519
jratnarajah@yahoo.ca
HomeLife/Future Realty Inc., Brokerage
262 Markham Road,
Scarborough, ON, M1J 3C5
Higher Standards Agents......Higher Results!

RANJANI THIRUKESWARAN
(BARRISTER & SOLICITOR)

REAL ESTATE (Residential /Commercial)
IMMIGRATION LAW
BUSINESS LAW
FAMILY LAW
LAST WILLS/POWER OF ATTORNEY
AFFIDAVITS
NOTARIZATION

3850 FINCH AVENUE EAST,
#202 SCARBOROUGH, ON M1T3T6
(KENNEDY & FINCH)
Tel: 416 291 2242
Fax: 416 291 2243

APEX ADVANCED ACTION LTD.
· REAL ESTATE · LIFE - HOME & AUTO INSURANCE · TAX & ACCOUNTING
· MORTGAGES · INVESTMENTS 416-291-3600 · TRAVELS & TRAFFIC TICKETS

One Stop Solution AAA
Our Team offer Friendly & Professional Services

80 Nashdene Rd. B-27,
Toronto, ON. M1V 5E4
Tel : 416-291-3600
Fax : 416-291-3601

25 Karachi Dr. Unit 26,
Markham, ON. L3S 0B5
Tel : 416-418-5749

Thana Yoganathan AMP
Mortgage Agent / President
Direct : 416-418-5749
Email : thanaever@gmail.com

Team Work That Works

HomeLife Higher Standards

Hilda Valentine
Sales Representative
HomeLife/Future
Realty Inc., Brokerage*
Bus: (905) 201-9977
Cell: (416) 821-4140
Fax: (905) 201-9229
E-mail: hildavalentine@gmail.com
204-7 East Vale Drive,
Markham, ON L3S 4N7
Higher Standard Agents...Higher Results!
Toll Free: 1-866-216-0487

வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

மோட்கேஜ் கிளினிக்

சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை

2 Yr Fixed Rate - 2.59%

(OAC)

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ்
செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட்
எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை
வீட்டுக்குளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக்
பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன் சீதனகாசுக்கடன்

மகளின்ர அரங்கேற்ற கடனை மறந்திட்டேனா ? ?

வந்துபேசிப்பாருங்கோ!! பிடிச்சிருந்தா .... மேல பேசுவம்

அழையுங்கள்

416-644-3555

22 ⇐ Ext ⇒ 28

CENTUM Rapid Mortgages Inc.

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

தயா PK கந்தையா BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO License # M 08001083
T.P : 416-716-8707

ஜெ. இராசதுரை (Jey) MBA, BBA (Hons), AMP
Team Leader & Agent
FSCO License # M 09001428
T.P : 416-624-4843

Home Trust | Equitable Trust | FirstLine | TD

வீடு வாங்க விற்க
Buying or Selling, for all your Real Estate needs Please Call

Ponniah Sarvathayaparan
Sales Representative
Cell: 647-866-9464

Kenney & Eglinton
Sale Price $389,000
4 Bedrooms, 2 Bedroom Basement Apartment with separate entrance

HomeLife Landmark Realty Inc.

Email: siraku_news@yahoo.ca
www.HomeLifeLandmark.com
5200 Finch Ave. E., Suite206
Toronto, ON M1S 4Z4
Tel: 416-386-1200
Fax: 416-386-1500

Selling Price $399,000
3 bedroom semi-detached raised bungalow with 3 full washrooms
3 bedroom walk-out basement apartment
Walk to TTC, minutes to Hwy 401& 404, close to schools, shopping mall, and library
Birchmount & Finch

பெத்தேல் அற்புத தமிழ் திருச்சபை

EL BETHEL MIRACLE GOSPEL CHURCH
1, King Street, Weston, Ontario, M9N 1K8
(WESTON & LAWRENCE)

Branch

EL BETHEL MIRACLE GOSPEL CHURCH
50, Gervais Dr. Suit 510
(CANADA CHRISTIAN COLLEGE)
Don Mills Ontario
(DON MILLS & WYNFORD DR)

Sunday Service
10:30 A.M

1st & Last Saturday
Fasting Prayer -10:30 A.M

2nd & 3rd Friday
Night Prayer
10:30 P.M-2:00 A.M

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டு கொள்வது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும் யோவான் 15;7

ஞாயிறு ஆராதனை	Sunday Service
தமிழில்	in English
மாலை 5.00 -6.00	4.00 PM-5.00 PM

முயற்சிகளில் தோல்வியா?
கடன் தொல்லையா?
தீராத வியாதியா?
சமாதானம் இல்லையா?
கண்ணீரா?
வெளிபாடுகள், தரிசனங்கள் இல்லையா?
பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இல்லையா?

Contact (416) 724 9333, (416) 624 5760

சிறகு

Sirahu Monthly free Issue
January 2012

பறவை 5 சிறகு 59

ஆசிரியர்
தயாபரன் பொன்னையா

செய்திகள் தகவல்
S.R.ராஜபாலன்
ப்ளாசம் J.
ரூபன்

விளம்பரம், விநியோகம்
தேவபாலன்
ராஜன்

சிறகு பத்திரிகையில் வெளிவரும் ஆக்கங்கள் யாவும் எழுத்தாளர்களின் சொந்தக்கருத்தே. இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட விளம்பரதாரர்களே பொறுப்பாவார்.

எமது முகவரி
Milliken Wells Postal Outlet
P.O.Box 17618
250 Alton Towers Cirle
Scarborough, Ont. M1V 5M5

உங்கள் தொடர்புகளுக்கு
தொலைபேசி : 647 - 866 - 9464
Email : siraku_news@yahoo.ca
website : www.siraku.net

மொன்றியல் தொடர்புகட்கு
நாதன் ஜோசுவா
1514 - 898 - 9095

ஆணைக்குழுவின் குறைந்தபட்ச பரிந்துரைப்புகளையாவது நடைமுறைப்படுத்துவதில் அரசு அக்கறைகாட்டுமா?

இந்திய வெளிநாட்டமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளாரென அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இது அவரது இரண்டாவது விஜயமாகும். தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாக அழுத்தம் கொடுப்பார் என்றும் அறிக்கைகள் கூறுகின்றன. இது



ஒன்றும் புதியது அன்று, கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன கதையாகும். கிருஷ்ணா தனது விஜயத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்திப்பார் என்றொரு அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. இந்திய அரசின் ஆதரவு இலங்கைத் தமிழர் சார்பாக உண்டு என்று இனிமேலாவது யாரும் மணப்பால் குடிக்க வேண்டியதில்லை.

ஜனாதிபதி ராஜபக்ஷ 2006 இல் தெரிவித்த கருத்துகள் காற்றோடு காற்றாகிவிட்டன. பிராந்தியங்களுக்கு அதிகாரப் பகிர்வு அவசியம். அவ்வப் பகுதி மக்கள் தத்தம் தலைவிதியை நிர்ணயிப்பதற்கும், பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்குமான அதிகாரம் தேவையல்லவா என்றெல்லாம் 2006 ஜுலை மாதம் சர்வகட்சி மாநாடு அங்குரார்ப்பணம் செய்த போது ஜனாதிபதி கூறிவைத்த போது அவர் அடுத்த தேர்தலைப் பற்றி அன்றி, நாட்டின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளார் என்று பலர் எண்ணியிருக்கக்கூடும். ஆனால், அதே ஜனாதிபதி ராஜபக்ஷ தான், பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு வழிசமைக்கவல்லதொரு முனைப்பு வெளிப்படுத்தப்பட்ட போது அதனைப் புறந்தள்ளிவிட்டவர். அதாவது அப்போது நியமிக்கப்பட்டதான நிபுணர் குழு சமர்ப்பித்த அறிக்கையை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. பெரும்பான்மை அறிக்கை சமர்ப்பித்த 11 பேர் கொண்ட பிரிவில் 1995 முதல் 2000 ஆண்டு வரைக்கும் சந்திரிகா பண்டாரநாரயக்க குமாரதுங்க மேற்கொண்ட தீர்வுத் திட்ட முயற்சிகளுக்கு இலைமறைகாயாகக் கைகொடுத்தவரும் தலைசிறந்த முற்போக்கு சிந்தனையாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன அடங்கலாக மூவினங்களையும் கொண்ட நிபுணர்கள் இடம்பெற்றிருந்தனர். மற்றும் இருவேறு சிறுபான்மை அறிக்கைகள் சமர்ப்பித்தவர்களில் இருவர் முன்னாள் அரச அதிகாரிகள் ஆவர். ஒருவர் எம்.டி.டி.பீரிஸ் ஒரு காலத்தில் அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் செயலாளராயிருந்தவர். மற்றவர் கே.எச்.ஜே.விஜேதாச மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் செயலாளராயிருந்தவர்.

சர்வகாட்சி பிரதிநிதிகள் குழு விழலுக்கிறைத்த நீர் அதே ஜனாதிபதி ராஜபக்ஷ தான் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையையும் கிஞ்சித்தும் கிலேசமின்றிப் புறந்தள்ளயவர். அக்குழுவின் பங்குபற்றுமாறு தமிழர்



தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்காத படியால் அதனை எப்படி சர்வகட்சிப் பிரதிநிதிகளென்று அழைக்க முடியுமென்ற விமர்சனங்களும் அன்று எழுந்தன. அது ஒருபுறமிருக்க, குறித்த சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவானது 2 வருடங்களுக்கு மேலாக நூற்றுக்கு மேற்பட்ட அமர்வுகளை நடத்திய பின் வெளியிட்ட அந்த அறிக்கையானது ஏறெடுத்தும் பார்க்காமல் புறந்தள்ளப்பட்டது. பின்பு, பிரதானமாக இந்திய அரசின் அதிகளவு உதவியோடு யுத்தம் நடத்தப்பட்டுக் கொண்டிருந்தபோது, இனப் பிரச்சினைக்கு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் (13+) அரசியல் தீர்வு முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி ராஜபக்ஷ இந்திய அரசுக்கு உறுதியளித்தார். அதெல்லாம் யுத்தத்தில் வெற்றியீட்டிய பின் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. ஆறு கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி என்ற கதையாகிவிட்டது. இருந்த போதும் இந்தியா தான் எமது சொந்த நாடு, ஏனையவை நட்பு நாடுகள் என்றவாறான பிரசாரத்திற்குப் பஞ்சமில்லை. □

அரசு – கூட்டமைப்பு பேச்சுவார்த்தை இக்கட்டான நிலையில்!

அரசாங்கத்திற்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை இக்கட்டான நிலையை அடைந்துள்ளது.

இதற்கு அரசின் விட்டுக்கொடுக்காத குணமும் ஏமாற்றும் தன்மையுமே என தமிழ்த்தேசிய கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசு பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற தேவை அரசுக்கு



இருப்பதாகத் தெரியவில்லை என்றும் கூட்டமைப்பு கூறுகின்றது. □

CAR FOR SALE

1995 Toyota Camry $500

647-866-9464

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு பின்னால் பரமேஸ்வராக் கல்லூரி வீதியில் 11/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

647–763–5274

campusland1@gmail.com

Tamil Christian Church of Canada

Celebrates 25th anniversary and now a new beginning

20.11.2011 looks like a special number in numerology. But for the members of the Tamil Christian Church of Canada (TCCC), it was a symbolic date in the history of their church. It not only marked the 25th anniversary of their church, but they also became partners with the Bridletowne Park Church (BPC) as 50% owners of the church property.

The service of Thanksgiving to mark this occasion was well attended by members and well wishers. There were many clergy (representing various churches) in attendance; and some of the fellow pastors who could not attend, sent their greetings in writing. Pastor Trevor Seath and the Board of Elders of BPC were in attendance to mark this historic occasion as well. The service was officiated by minister-in-charge of TCCC, Rev. Dr. Vinson Samuel. The message titled 'Dwelling in God's house' was delivered by Dr. Howard Snyder of Tyndale Bible College. Rev. Dr. Vinson Samuel ensured that the service maintained its serenity, amidst specific moments of thanksgiving, **Thanksgiving** was in the form of instruments and vocals.

The TCCC choir and musicians, under the direction of Mr. Christy Watson are well known for their musical skill-set, and they proved beyond doubt- that they are in a league of their own. The younger generation trained by the multi talented Children's & Youth Co-ordinator Mr. Joel Joseph Sang their hearts out with zeal and flair. Not o be out done, the Senior's choir, trained by Mrs. Sharmini Thambyrajah, sang like nightingales, portraying that their vocal talents don't grow old with age.

Reflection was in the form of a historic review of their humble beginnings. These memories were shared by one of TCCC's founding members, Mr. Gunam Hunt. He noted that although 1986 was the year of incorporation, periodic services and events were held beginning in 1971. He explained that in the intial years, where computers and even access to a type writer were not available, manual resources for service orders and hymns was the norm. he thanked the various pastors who had served TCCC, with special mention of the Late Rev. Bobby Mather, Rev. Dr. Nesamany Lysander, Rev. Isaac Selvaratnam and the incumbent Rev. Dr. Vinson Samuel.

Aspiration was in the form of the vision and future direction of TCCC. This was articulated by the Chairperson of the Board of Administration, Mr. Tony Balasingham, The vision of the church was labeled as, Towards a Christ Centered Community(same acronym as the name of the church).

He broke down the future direction into 3 pillars of the church(the 3 E's). the first E is for Edification, that the church needed to continue their focus on God's teachings, spiritual fulfillment and leaning towards God's plans in their lives. The second E is for Empowering the younger generation to learn about God, become active in the life of the church and to ensure that their opinions are heard.

Consistently, the third E is for Evangelism. He noted that the church has been planted in the Scarborough neighbourhood to create an Impact in the community and that the church members need to step it up. He emphasized that any future action plans that would be undertaken(i.e. property ownership and future expansion) will be done to support the functioning of the 3 pillars.

He thanked the leaders of BPC for giving TCCC and opportunity to work side by side with them in community work and building partnership. Last but not least, on behalf of the members, he thanked Rev. Dr. Vinson Samuel for his dedication and for being the facilitator pf the building partnership with BPC.

Rev. Dr. Vinson Samuel introduced a new approach in the church's history for partaking in the holy sacrament. With the help of the visiting clergy and the deacons, the bread and wine were distributed amongst the seated congregation and then concurrently these were consumed, to symbolize togetherness and one body.

Towards the end of the thanksgiving service, the partnership agreement was signed by the leaders of TCCC and BPC and this was greeted with a loud round of applause from the congregation. The thanksgiving service ended with refreshments severed in the fellowship area.

25years may not seem long in the life of a church. But migrating as strangers to a foreign land decades ago, torn over the years between the eastern culture and the western influence, adhering to the need for multilingual worship and ensuring that Christ was the constant focus at all times is indeed a noteworthy achievement.

As TCCC embarks on a new platform with building ownership- we are confident that they will execute well on their future plans and will be a true witness to the Lord Jesus Christ. □

(தேவனே, சம்பூரண...)

அவசியம். இந்நாட்களில் அநேக குடும்பங்களில் உண்மைகள் காணப்படுவது இல்லை, கணவனுக்கு மனைவி உண்மையாக நடப்பதில்லை, மனைவிக்குக் கணவன் உண்மையாக இல்லை, பிள்ளைகள் பெற்றோருக்கு உண்மைகள் பேசுவதில்லை.

அன்பானவர்களே, ஆண்டவர் நம் இருதயங்களை ஆராய்ந்து அறிகின்ற தேவன், மற்றவர்களுக்கு மறைக்கலாம், ஆனால் தேவன் சகலத்தையும் அறிகின்றவர். தேவனுடைய பணிகளைக் கூட சிலசமயங்களில் கர்த்தருக்குப் பயந்து உண்மையாய்ச் செய்யாமற் போவோர் அநேகர் உண்டு. மனிதர்கள் நம்மைப் பார்த்து பாராட்ட வேண்டும் என்கிற வகையினில் அவர் ஊழியங்களைச் செய்வோர் பலர்.

பிரியமானவர்களே, கர்த்தருடைய ஊழியங்களை உண்மையாய் செய்யாதிருப்பின் அவர் அளிக்கும் பலனை இழந்து போகும் சூழ்நிலைகள் உருவாகலாம். உலகத்தின் புகழ், பாராட்டு வெறும் அற்பம் மட்டுமல்ல, நிரந்தரமற்றது. எல்லாக்காரியத்திலும் கர்த்தருக்கு முன்பாக உண்மையாக நடப்போம். ஏனெனில், "பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள், உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம்". (நீதிமாழிகள் 12:22) தேவனுக்குப் பிரிமுள்ளவர்களாய், சகல காரியங்களிலும் உண்மையாய் நடப்போம், மரணபரியந்தம் உண்மையாயிருந்து, ஜீவகிரீடத்தை சுதந்தரிப்போம்.

"ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்" (வெளிப்படுத்தல் 2:10)

சகலகாரியங்களிலும் உண்மையாய் வாழும் போது, இப்புதிய வருடத்தினில் நம் வாழ்க்கையில் தேவன் சம்பூரணமான மழையைப் பெய்யப்பண்ணுவார் என்பது நிச்சயம்.

"தேவனே சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்". (சங்கீதம் 68:8) அன்பானவர்களே, சம்பூரணம் எனறால் திருப்தியாக நாம் பெற்றுக்கொள்கின்றோம். அடைமழையினால் அழிந்து போகும் நிலை அல்ல, அன்றியும், மழை இல்லாததினால் வறட்சியான சூழ்நிலையாக இல்லாதவண்ணம் நம் வாழ்வினில் ஒரு சம்பூரணமான நிறைவை தேவன் அருளுவார்.

இப்புதிய வருடத்தினில், புதுத்தீர்மானங்கள்களாக, அவர் வார்த்தையின்படி நடந்து, ஜெபத்தில் தரித்திருந்து, அவர் வழியினில் நடந்து, உண்மையாக ஜீவிக்கும் போது நம் வாழ்வினில் எந்தக் குறையும் ஏற்படாது சம்பூரணமான மழை பெய்வது மட்டுமல்ல, தேவன் முன்மாரியையும், பின்மாரியையும் பொழியச் செய்வார். □

அழகான... நேர்த்தியான வடிவமைப்புக்கும்,
குறித்த நேரத்தில் வேலையை செய்து முடிப்பதற்கும்...
HM prints
416—319—4340

கூடங்குளம்

- ராகவி -

தமிழக திருநெல்வேலி மாவட்ட த்தில் கூடங்குளம் அமைந்திருக்கிறது. அங்கு இந்திய அணுமின் கழகம் ரஷ்ய உதவியுடன் அணுமின்நிலையம் ஒன்றை உருவாக்கியிருக்கிறது. 1988ம் ஆண்டு அப்போதைய பாரதப் பிரதமர் ராஜிவ் காந்தியும் அப்போதைய சோவியத் ஒன்றிய தலைவர் மிகைல் கோபர்சேவ்வும் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ரஷ்யா சிதறியதாலும் அணுசக்தி மையத்திடம் இந்தியா ஒப்பந்தம் செய்யாததாலும் அதனால் அமெரிக்கா எதிரப்புத் தெரிவித்ததாலும் பத்தாண்டுகள் இத்திடம் செயல்படாமல் கிடப்பில் போடப்பட்டது. மீண்டும் 2001 இல் இத்திட்டம் செயற்படுத்தப்பட புது ஒப்பந்தம் கையெழுத்தானது. சுமார் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவாகுமென மதிப்பிடப்பட்டது. முதலில் கடற்படை துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டு அதனூடாக இந்த அணுமின்நிலையத்திற்கான பாகங்கள் கொண்டு செல்லப்பட்டன. முதலில் கூடங்குளத்தில் இரு அணு உலைகள் அமைக்கத்திட்டமிடப்பட்டன. பின் 2008ம் ஆண்டு மேலும் 6 அணுமின் உலைகள் நிறுவ ரஷ்யாவுடன் உடன்படிக்கை செய்தது. அதனடிப்படையில் 1170 மெகாவொற் அணுமின் திறன் கொண்ட 4 நான்காம் தலைமுறை ருநுசு1200 உலைகளை ரஷ்யா வழங்க இந்த உடன்படிக்கை வகை செய்கிறது. இதன் மூலம் இந்தியாவில் அதிக செயல் திறனுடன் இம்மின்னிலையம் செயல்படுமென கணிக்கப்பட்டது.

அமெரிக்காவுடன் அணு ஒப்பந்தம் செய்யப்பட்டதையடுத்து அணுக்கரு வழங்குவோரின் குழுமத்தின் ஒப்புதல் கிடைத்தது. இதனால் அணுஉலைகளை செயற்படுத்த இந்தியாவிற்கு சிரமம் கிடையாது. பாரிய வளர்ச்சி பெற்று வரும் இந்தியா பாரிய மின்தேவையை எதிர் கொள்வதால் அதன் நீர் மின்சார மூலங்களோ அனல் மின்சாரத்திற்கான நிலக்கரிசுரங்கங்களோ போதுமானதாக இல்லை. அதனால் அது அணு உலைகள் மூலம் மின்சாரம் பெறுவதை பெரிதும் விரும்புகிறது. அதையே நம்பியிருக்கிறது. 2010 மார்ச் மாதம் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமியால் ∴புகுஷிமா அணுஉலை பாதிக்கப்பட்டு அணுக்கசிவு ஏற்பட்டது இதைக்காரணமாக வைத்து கூடங்குளம் அணு ஆலைக்கு எதிராக பேராட்டம் புதிதாக மீண்டும் தீவிரமாக ஆரம்பமானது. 2011 செப்டெம்பரில் கூடங்குளம் மற்றும் அண்டைக் கிராம மக்கள் தொடர் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர். ஒரு போராட்ட குழு அமைக்கப்பட்டு அதன் தலைவராக உதயகுமார் செயற்பட்டுவருகிறார். இந்த போராட்ட குழு தங்கள் போராட்டத்திற்காக பல்வேறு காரணங்களைக் கூறுகிறது.

1. கூடங்குளம் அணு உலை மக்கள் நெருக்கம் மிகுந்த பகுதியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பெரிய அணுஉலைகள் அமைக்கப்படும்போது 16 கிலோமீற்றர் சுற்றளவு பகுதியில் மிகக் குறைவான மக்கள் வசிக்க வேண்டும் ஆனால் இங்கு 1லட்சத்துக்கும் அதிமான மக்கள் வசிக்கின்றனர்.அணுஉலை நல்ல நிலையில் இயங்கினால் கூட இவர்களுக்கு நோய் ஏற்படும்.

2. ஜப்பானில் நிகழ்ந்ததைப்போலொருவிபத்து நேர்ந்தால் அணுஉலையைச்சுற்றி 3016 கிலோமீற்றர் சுற்றளவு பகுதியில் உள்ள 10 லட்சத்துக்கும் அதிகமான மக்களை 24 மணித்தியாலயத்தில் வெளியேற்றுவது சாத்தியமில்லை.

3. ஊக்ரைன் சேர்பினால் விபத்து போலொரு விபத்து நேரந்தால் தமிழகம் முழுவதும் பாதிக்கப்படும் .ஏன் வட இலங்கையும் பாதிக்கப்படும்

4. கூடங்குளம் கட்டிடம் பலமற்றது.

5. அணுஉலையிலிருந்து வெளியாகும் கதிரியக்க நீர் கடலில் கலப்பதால் கடல்வளம் அழியும்

6. அணுஉலையில் பயன் பட்ட எரிபொருள் கழிவு மண்ணுக்கடியில் புதைக்கப்படுவதால் நிலத்தடி நீர்பாதிக்கும். இவற்றை24000 ஆண்டுகள் பத்திரமாக பாதுகாக்க வேண்டும்

7. அணுஉலைகள் கடல்மட்டத்திலிருந்து 7 மீற்றர் உயர்த்தில் மட்டுமே அமைக்கப்பட்டதால் எளிதில் தாக்கும் ஆபத்திருக்கிறது. ஜப்பானில் 20 மீற்றர் உயரசுனாமி அலைகள் தாக்கியது.

8. தீவிரவாதிகளின் முதல் இலக்கு அணுஉலைகள் . இலங்கையில் சீன நடமாட்டம் அதிகரித்திருப்பதும் அணுஉலைக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புண்டு

9. 450 மெகாவொற் உற்பத்தி செய்யும் கல்பாக்கம் அணு உலையைச்சுற்றியுள்ள பகுதியில் புற்று நோய்ப்பாதிப்பிருக்கிறது. அப்படியானால் 2000 மெகாவொற் உற்பத்தி செய்யும் அணு உலையிலிருந்து அதிக கதிர்வீச்சு ஏற்படும்.

என தெரிவிக்கும் போராட்ட குழுவினர் அரசு சொல்வதைப்போல் விபத்து நடக்காதென்றால் அணுவிபத்து இழப்பீட்டு சட்டம் எதற்க்கு? விபத்து ஒத்திகை எதற்க்கு?அணுஉலையை அண்டிய கடல் பகுதியில் 500 மீற்றர் தூரத்துக்கு மீன் பிடிக்க வேண்டாமென்பது எதற்காக? ∴புகுஷிமா அணுஉலைக் கசிவின் பின் சுவிற்சலாந்து 2020க்குள்ளும் ஜேர்மனி 2022க்குள்ளும் அணுஉலைகளை மூடவிருக்கின்றன. உலக நாடுகள் ஏன் அணுஉலைகளை மூடிவருகின்றன? இந்திய அரசு போபால் இரசாயண ஆலை அமைத்த போது அதுபாதுகாப்பானதென்றது அங்கு விபத்து நிகழவில்லையா? சேர்பினால் மற்றும் ∴புகுஷீமா அணுஉலைகள் பாதுகாப்பானவை என்று கூறப்படவில்லையா? எனக் கேள்வி எழுப்புகின்றனர். இந்திய மத்திய அரசு இந்தியாவின் மின் தேவையை பூர்த்தி செய்யவும் அணு உலையை பெரும் பொருட் செலவில் கட்டிமுடித்திருப்பதால் அதை இயங்கவைக்காவிடின் பாரிய இழப்பு ஏற்படுமென கூறுகிறது. பிரதமர் டொக்டர் மன்மோகன் சிங் ஒரு குழுவை அமைத்து போராட்டக்காரருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். எனினும் ஒரு இணக்கப்பாடும் எட்டப்படவில்லை. அமைச்சர் நாராயணசாமி மீண்டும் மீண்டும் அணுஉலை கட்டாயம் இயக்கப்படும் எனக் கூறிவருகிறார்.தமிழக அரசும் மத்திய அரசும் கூடங்குளம்

1. அணுமின் நிலையம் நிலநடுக்கம் ஏற்படாத இரண்டாம் மண்டலத்திலிருக்கிறது.

2. அணுமின்நிலையத்தில் சிறந்த மிகவும் பாதுகாப்பான அணு குளிர்விப்பு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது ஒரு வகை குளிர்விப்பு முறை போதுமான நிலையில் இங்கு 4 குளிர்விப்பு தொடர்முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

3. அணுஉலைகள் கடல்மட்டத்திலிருந்து 7.5 மீற்றர் உயர்த்தில் இருப்பதால் சுனாமி ஏற்பட்டாலும் சாதாரண இயற்கைச் சீற்றத்தாலும் பாதிப்பு ஏற்படாது. 2004 இல் சுனாமி தாக்கியபோது பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

4. அணுஉலை இயக்கதிலிருந்து நிறுத்தும் போது போது உலைகளை குளிரவைக்க ஒரு டீசல் மின்னாக்கிக்குப் பதில் 4 மின்னாக்கி பொருத்தப்பட்டிருக்கிறது. மின்னாக்கிகள் வெள்ளம் மற்றும் சுனாமியிலிருந்து பாதுகாப்பாக இருக்க கடல்மட்டத்திலிருந்து 9 மீற்றர் உயர்த்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன என சுட்டிக்காட்டி மக்கள் அச்சமடையத் தேவையில்லையென கூறுகின்றன. முன்னாள் ஜனாதிபதியும் அணுவிஞ்ஞானியுமான டொக்டர் அப்துல்கலாம் அணுமின் நிலையத்தை முழுவதுமாக சுற்றிப் பார்வையிட்டு அணுஉலை பூரணபாதுகாப்புடன் இருப்பதாக உறுதியளித்தார். போராட்டக்குழு அவரின் உறுதிமொழியையும் ஏற்கவில்லை. சில தமிழக அரசியல்வாதிகள் இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்து வந்தனர். தற்போது முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தில் இந்த கூடங்குளம் விவகாரம் மங்கிப்போயிருக்கிறது. அரசியல்வாதிகளின் பார்வை கேரளாப்பக்கம் திரும்பியிருக்கிறது. மத்திய அரசு போராட்டக் குழுவிற்கு நிதியுதவி எங்கிருந்து கிடைக்கிறதென்ற வழிமுறைகளையும் ஆராய்கிறது. போராட்டக்குழுத் தலைவர் உதயகுமார் முல்லைப்பெரியாறு அணை விவகாரத்தை வேண்டுமென்றே பெரிதாக்கி தங்கள் போராட்டதை மழுங்கடிப்பதாக கூறுகிறார். அரசா? இவர்களா? போராட்டம் எவ்வளவு நாள் தொடரும் என்பதே கேள்வி அரசு அணு உலையை இயக்குவதில் உறுதியாக இருக்கிறது. □

சிறகில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள்
647 866 9464

போராட்டங்களால் உருவாகும் புதிய அடையாளம்!

> ஈழத்தில் 3 லட்சம் தமிழர்களையும் தமிழகத்தில் 600 மீனவர்களையும் நம் காலத்திலேயே சிங்கள இனவெளிக்குப் பலிகொடுத்தபோது என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது தமிழ் இளைஞர்களின் முக்கிய கேள்வியயிற்று. நம் அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் இவற்றுக்காக என்ன செய்தார்கள் என்னும் கேள்வியும் எழுந்தது.

அராபிய வசந்தம் தொடங்கிய ஓராண்டுக்குள் பல கண்டங்களின் பூகோள அரசியலை மக்கள் போராட்டங்கள் மாற்றிக் கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு டிசம்பர் 18-ம் தேதி டுனீசியாவின் அதிபர் பென் அலியை எதிர்த்துத் தொடங்கப்பட்ட இப்போராட்டம் டுனீசியாவைக் கடந்து எகிப்து, லிபியா, ஏமன், சிரியா, பக்ரைன், அல்ஜீரியா, மொராக்கோ, லெபனான், குவைத், சூடான் மற்றும் சவூதி அரேபியா உள்ளிட்ட ஆசிய, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வரை தொடர்ந்து சென்றது.

இப்போராட்டங்கள் அராபிய மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கத் தடையாக இருக்கும் அரசுகளைத் தூக்கி எறிய மேற்குலகம் மற்றும் அமெரிக்க அரசுகள் செய்யும் சதியென அரசியல் விமர்சகர்களால் சொல்லப்படுகிறது. என்றாலும் அராபிய வசந்தத்தின் நீட்சியாகவே அமெரிக்காவில் செப்டம்பர் 17-ல் தொடங்கிய வால் ஸ்ட்ரீட்டைக் கைப்பற்றும் போராட்டமும் பார்க்கப்படுகிறது.

மக்கள் லட்சக்கணக்கில் நேரடியாக அரசியல் மாற்றத்தையோ மறுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளையோ கேட்டு வீதிக்கு வருவதைக் காட்சி ஊடகங்களிலும் தினச்செய்தித்தாள்களிலும் திரைப்படங்கள் மற்றும் மகாதொடர்களின் விளம்பர இடைவேளைகளுக்கிடையே கண்ணுற்ற தமிழ்ப் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் உளவியல் ரீதியாக சில மாற்றங்கள் உருவாகியுள்ளன.

அராபிய தேசங்களில் பெண்களுக்குச் சுதந்திரமே இல்லை. பெண்கள் பர்தா போட்டுக்கொண்டு வெளிஉலகமே தெரியாமல் வாழ்கிறார்கள். பெண்களுக்குப் பேச்சுரிமை கிடையாது. படிக்க முடியாது, வேலை பார்க்க முடியாது என்கிறார்கள். ஆனால், லட்சக்கணக்கில் முஸ்லிம் பெண்கள் தெருவில் வந்து நீதி கேட்டுப் போராடியது எங்களைச் சிந்திக்கத் தூண்டியது என்கின்றனர்.

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூன்று பேரின் தூக்குத் தண்டனையை நீக்கக் கோரி ஆகஸ்டு 26-ம் தேதி உண்ணாநிலைப் போராட்டத்தைத் தொடங்கிய அங்கயர்கண்ணி, வடிவாம்பாள் மற்றும் சுஜாதாவின் போராட்டத்துக்கு ஆதரவு தரவந்த கல்லூரி மாணவர்களிடம் இந்த எழுச்சியைக் காண முடிந்தது.

ஈழத்தில் 3 லட்சம் தமிழர்களையும் தமிழகத்தில் 600 மீனவர்களையும் நம் காலத்திலேயே சிங்கள இனவெளிக்குப் பலிகொடுத்தபோது என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது தமிழ் இளைஞர்களின் முக்கிய கேள்வியயிற்று. நம் அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் இவற்றுக்காக என்ன செய்தார்கள் என்னும் கேள்வியும் எழுந்தது.

சேது கால்வாய்த் திட்டம் வந்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று மீனவர்கள் தொடர்ந்து போராடியபோது 2005-ல் திமுக அரசு திட்டத்தைச் செயல்படுத்தியே தீருவோம் என்று உறுதி காட்டியது. பாட்டாளி மக்களுக்கான கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் எந்த விளக்கமும் அற்று சேதுகால்வாய்த் திட்டம் வந்தால் தமிழகம் சொர்க்கமாகிவிடுமென பொய்களைப் பரப்பிக் கொண்டிருந்தன. ராமர் பாலம் பிரச்னையால் சேதுகால்வாய்த் திட்டம் எளிதாக முடக்கப்பட்டது. வங்கக்கடலில் 4,000 கோடி ரூபாய்க்கு மேல் அளந்து கொட்டிவிட்டு கோப்புகள் மூடப்பட்டன. கூடங்குளம் அணுமின் திட்டத்திலும் இதே இழிவான நிலைப்பாடுதான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு.

1989-லிருந்து தொடர்ந்து கூடங்குளம் அணுமின் திட்டத்தை எதிர்த்துப் போராடிவரும் மீனவ மக்களையும் இயக்கங்களையும் புறக்கணித்துவிட்டு அணுமின் திட்டத்தைச் செயல்படுத்தியே தீருவோம் என மத்திய அரசு தன் வேலைகளைத் தொடர்ந்தது.

காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு போன்றவற்றிலிருந்து தண்ணீர் பெறுவதில் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழக மக்கள் வஞ்சிக்கப்பட்டனர். நமது நியாயமான உரிமைகளைக்கூட தமிழகத்தை ஆண்ட திமுக மற்றும் அதிமுக அரசுகள் இதுவரை போராடிப் பெற்றுத் தரவில்லை என்ற கோபம் முழுவடிவம் பெறத் தொடங்கியுள்ளது.

செம்மொழி குடும்ப மாநாடுகள் நடத்தி ஆண்ட இனம் எமது என்று பெருமை பேசிக் கொள்கிறோம். ஆனால், தமிழகத்தைத் தூண்டி பிற மாநிலத்தவர் நம்மை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என்பதைத்தான் நதிநீர்ப் பிரச்னைகள் உணர்த்துகின்றன.

ஒவ்வோராண்டும் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நீரைப் பிற மாநிலங்களிடமிருந்து முற்றாக நம்மால் பெற முடிந்ததில்லை. ஆனால், தமிழகத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை விவசாயத்துக்குக் கூடப் பயன்படுத்தாமல் மின்பற்றாக்குறையைத் தாங்கிக் கொண்டு அண்டை மாநிலங்களுக்குப் பங்கு வைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழக ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கைத்திட்டங்களால் விவசாயம் மற்றும் கைத்தொழில்கள் அழிந்து பஞ்சம் பிழைக்கக் கூலிகளாக அண்டை மாநிலங்களுக்குச் சென்ற தமிழர்கள் தொடர்ந்து அவமானப்படுத்தப்படுவதும் தாக்கப்படுவதும் தமிழர்களின் மறதியைக் கடந்து வெளித்தெரியத் தொடங்கியுள்ளன.

வரலாறு காணாத ஊழல், ஏகபோக குடும்ப அரசியல், காட்சி-செய்தி ஊடகங்கள், தொழில் முதலீடுகள், வர்த்தக நிறுவனங்கள் என எல்லாவற்றிலும் ஒரு குடும்பத்தின் ஆதிக்கம், தமிழகமெங்கும் அரசியல்வாதிகளால் கொள்ளையடித்துக் குவிக்கப்பட்ட சொத்துகள், ஈழவிடுதலைப் போருக்கு ஆட்சியாளர்கள் தங்கள் பதவி சுகத்துக்காக இழைத்த அவமானகரமான துரோகம் என நீண்டு செல்கிறது தமிழக மக்களின் துயரக் கணக்குகள், திரைப்படங்களும், கிரிக்கெட்டும், தொலைக்காட்சியும் தவிர வேறெதுவும் தமிழர்களுக்குத் தேவையில்லை என்று முடிவுகட்டினர் ஆட்சியாளர்கள்.

இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் உள்துறை அமைச்சகத்தால் மூன்று பேரின் தூக்குத் தண்டனை உறுதிசெய்யப்பட்டபோது தமிழ் உணர்வாளர்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து எழுச்சியுடன் போராட்டங்களை நடத்தத் தொடங்கினர். தமிழர்கள் மூன்றுபேரின் தூக்குத் தண்டனையை நீக்கக்கோரி மூன்று பெண் வழக்கறிஞர்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து தமிழகமெங்கும் இளைஞர்கள் கிளிர்ந்தெழுந்தனர். ஈழப்படுகொலையின்போது தமிழர்கள் இதுபோன்ற எழுச்சியை, எதிர்ப்பைக் காட்டியிருந்தால் இழப்புகள் குறைந்திருக்குமோ எனத் தோன்றியது.

ஜப்பான் புகுஷிமா பகுதியின் அணுஉலைகள் வெடித்துச் சிதறியபோது தங்கள் வீட்டை, உடைமைகளை, நிலத்தை, கடற்கரையைவிட்டு 16 லட்சம் மக்கள் வெளியேறியதை ஊடகங்கள் வழியாகத் தமிழக மக்கள் கண்டனர். நிலம், நீர், காற்று, கடல் அனைத்தும் கதிர்வீச்சால் பாதிக்கப்பட்டது. அப்பகுதி தண்ணீர், பால், மீன், பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்கள் அனைத்தும் மக்கள் பன்படுத்த முடியாமல் பாழானது. 16 லட்சம் பேரில் எத்தனை லட்சம் பேர் கதிர்வீச்சு மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டனர் தமிழகக் கடலோர மக்களின் மனங்களில் அச்சத்தையும் மற்றொரு வகையில் தெளிவையும் உருவாக்கின. ஆகஸ்டு மாதம் நடத்தப்பட்ட கூடங்குளம் அணுஉலைகளின் சோதனை ஓட்டத்தில் எழுந்த பேரோசை, அணுஉலை நிர்வாகம் வெளியிட்ட விபத்துகால ஒத்திகை குறித்த அறிவிப்பு இரண்டும் கூடங்குளம் சுற்றுப்புறக் கிராம மக்களின் அச்சத்தை உறுதிப்படுத்தின.

ஊர்மக்கள் ஆயிரக்கணக்கில் தன்னெழுச்சியாக மாதா கோயிலின் முன் திரண்டு கூடங்குளம் அணுஉலையை மூடுவதற்கான போராட்டத்தை ஆகஸ்டு-16ம் தேதி தொடங்க வேண்டும் என முடிவெடுத்தனர். இந்தப் போராட்டம் தமிழக வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலேயே முன்னோடித்தன்மை கொண்டது.

செப்டம்பர் 11-ல் இடிந்தகரையில் ஒரு நாள் அடையாள உண்ணாநிலைப் போராட்டமாகத் தொடங்கிய மக்கள் போராட்டம் கூடங்குளம் அணுஉலைகளை மூடும்வரை தொடரும் வலிமையுடன்

கூடங்குளம் போராட்டம்

இப்போது முன் சென்ற கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டம் வெறும் உணர்வெழுச்சியின் அடிப்படையில் நடந்து கொண்டிருக்கவில்லை. அறிவுப்பூர்வமான அரசியல் தெளிவுடன் மக்களால் நடத்தப்படுகிறது. இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வயது பாகுபாடின்றி சிறுவர்கள் முதல் முதிய பெண்கள் வரை அணுஉலைகளின் ஆபத்தைப் பற்றி அறிவியல் பூர்வமாகப் பேசுகின்றனர். அணுக்கழிவுகளால் உண்டாகும் சுற்றுச்சூழல் கேடு, நோய், கதிரியக்கப் பொருள்களால் தங்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாவது என்பவை குறித்து மிகுந்த அக்கறையும் கவலையும் அவர்களின் பேச்சில் வெளிப்படுகிறது.

கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டம் மற்றும் தமிழர்கள் மூன்றுபேரின் தூக்குத் தண்டனையை நீக்கக் கோரும் போராட்டம் என இரண்டு போராட்டங்களை விலகி நின்று பார்த்துக் கொண்டிருந்த தமிழகத்தின் சில பகுதி மக்களின் அரசியல் உணர்வுக்கும் சோதனை தரும் வகையில் வந்து சேர்ந்தது முல்லைப் பெரியாறு அணை பிரச்னை.

வழக்கம்போல் தமிழக அரசியல் கட்சிகள் அறிக்கைவிட்டு விட்டு அமைதி காத்துவிடுவர். தமிழர்கள் கூடங்குளத்தை மறந்துவிட்டு முல்லைப் பெரியாறுக்கு போராட வந்துவிடுவர். ஒருவாரம் கழித்து மீண்டும் வழக்கம்போல் திரைப்படம்-தொலைக்காட்சி பார்க்கப் போய்விடுவார்கள் என்ற தேசிய சக்திகளின் கணக்கை தமிழர்கள் இப்பொழுது பொய்யாக்கியிருக்கிறார்கள்.

முல்லைப் பெரியாறு அணையை தமிழகத்திடம் இருந்து பறிக்க கேரளக் கட்சிகள் செய்யும் சதிச்செயல்கள் தமிழக மக்களை பல காலத்துக்குப் பிறகு ஒன்றுபடுத்தியுள்ளதுடன் போராடவும் தூண்டியுள்ளது. இந்தித் திணிப்பு எதிர்ப்புக்குப் பிறகு தமிழக மக்களின் இந்த மூன்று போராட்டங்களும் தமிழ் அடையாளம் சார்ந்த வாழ்வுரிமை மற்றும் வாழ்வாதாரத்துக்கான பேரெழுச்சி என்ற வகையில் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது.

அரசியல் கட்சிகளின் அழைப்புக்கு மக்கள் ஓடிவந்த நிலைமாறி மக்கள் களத்தில் முன்செல்ல அனைத்துக் கட்சிகளும் அவர்கள் பின் செல்லவேண்டிய நிலையை அடைந்துள்ளன. இன்னும் தமிழகத்தில் தீண்டாமை நடைமுறையில் உள்ளது என்பதற்காக வெட்கப்படும். இனி தமிழகத்தில் தீண்டாமை இல்லை என்ற நிலையை உருவாக்க நினைக்கும் இளைஞர்களின் கையில் இன்றுள்ள போராட்டங்கள் சென்று சேரும் எனில், தமிழகத்தின் அரசியல் எதிர்காலம் மட்டுமன்றி, பண்பாட்டு, எதிர்காலமும் ஒளிபொருந்தியதாக அமையும் என்று நம்பலாம். அதற்கு முன்னோட்டமாக இன்று நடக்கும் இந்த மூன்று போராட்டங்களும் அமைந்துள்ளன. □

(இருட்டில்...)

தளும்பி நின்ற நீரைக் கஷ்டப்பட்டுத் தேக்கிக் கொண்டான். அழக்கூடாது, அழக்கூடாது என்று தீர்மானமாய்ப் பல்லைக் கடித்துக் கொண்டு நின்றான்.

'பாடியை என்ன பண்ணுவாங்க?'

'போஸ்ட் மார்ட்டம் பண்ணிட்டுத்தான் குடுப்பாங்க. லயன்ல விழறதுக்கு முன்னாடியே அவன் செத்துப் போயிட்டானா இல்லையான்னு கண்டுபிடிப்பாங்க.'

'நாளை பேப்பர்ல இந்த நியூஸ் வருமா?'

'ம்....கண்டிப்பாய் வரும். கொட்டை எழுத்தில் நாலு காலத்துல போடுவான்!

'பாவம். சாகறதுக்கு முன்னாலே என்ன நெனச்சுக்கிட்டானோ. இருவத்தஞ்சு வயசு ஆள் மாதிரிதான் தெரியுது. கல்யாணம் ஆயிடுச்சோ என்னமோ!'

இதற்குள் கார்டின் விஸில் சத்தம் கேட்டது. எல்லோரும் விழுந்தடித்துக்கொண்டு தங்கள் பெட்டிகளை நோக்கி ஓடினார்கள். என்ஜினின் ஹாரன் ஓசை ஒரு முறை நீளமாய் அலறியது. கதவு வழியில் அதிகக் கூட்டம் இருந்ததால் சிலர் ஜன்னல் வழியே தங்களைத் திணித்துக் கொண்டார்கள்.

ஒரு வழியாய் எல்லோரும் ஏறிய பின் ரயில் மெதுவாய் நகர்ந்தது. கணேசன் மட்டும் கீழேயே நின்று கொண்டிருந்தான். ரயில் வேகமாய் நகர ஆரம்பித்தபோது இன்னும் சிலர் கதவு வழியில் உள்ள கைப்பிடியில தொங்கிக் கொண்டிருந்தார்கள். ரயில் முழு வேகத்தில் அவனைக் கடந்து போயிற்று. அவன் கடைசிப் பெட்டியின் பின்னால் தெரியும் சிவப்பு விளக்கு மறையும்வரை பார்த்திருந்து விட்டு இன்னொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். □

JRS College
of Business and Health Care Inc.
"Committed to Provide Quality Training"

சிறந்த வேலைவாய்ப்புக்களுக்கான பயிற்சிநெறிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா? நீங்களும் தகுதியுடையவராகலாம்.

DIPLOMA COURSES

Accounting and Payroll Administration
-Tuition fee
-Books fee
-Living Expenses(for 36 weeks)
-Day care (for 36 weeks)
-Transportation (for 36 weeks)

Health Office Administrator (HOA)
-Tuition fee
-Books fee
-Living Expenses (for 33 weeks)
-Day care (for 33 weeks)
-Transportation (for 33 weeks)



OTHER DIPLOMAS
-Personal Support Worker
-Computerized Accounting
-Office Assistant

Food Handler Training
Starts on . Jan. 14, 2012@ 10.00am (Saturday)

Cashier Training
Starts on Mar. 10, 2012@ 9.00am (Saturday)

Computer Basic Class
February 2012

Free Ms office Class
January 2012

Other Certificate Courses
-Food Service Worker -Cashier -Quickbooks
-Food Handling -Accpac -MS Office
-Bank Teller -Simply Accounting

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)
Some Courses are not available in Etobicoke Campus

SCARBOROUGH CAMPUS
(Midland & Finch)
330-4168 Finch Ave East
Scarborough, ON M1S 5H6
416-292-2455

ETOBICOKE CAMPUS
(Kipling & Dundas)
300-5359 Dundas St West
Etobicoke, ON M9B 1B1
416-207-9975

நல்ல பொக்கிஷசாலை

ஆக்கம் : சகோதரன் கோபி இராஜகோபால்



கிறிஸ்துவுக்குள் அன்பான சிறகு பத்திரிகை வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இப்பத்திரிகைக்கூடாக மீண்டும் உங்களை சந்திப்பதற்கு கர்த்தர் கொடுத்த தருணத்திற்காக அவருக்கு நன்றிகளை செலுத்துவதோடு, 2011 ஆம் ஆண்டு முழுவதும் கர்த்தர்தாமே எங்கள் அனைவரோடுங்கூட இருந்து எங்களை வழிநடத்தி, மீண்டும் ஒரு நல்ல புதிய ஆண்டுக்குள் நம்மை பிரவேசிக்கச் செய்தமைக்காக எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு எப்பொழுதும் துதி, கனம், மகிமை யாவற்றையும் செலுத்துவோமாக.

பரிசுத்த வேதாகமத்திலே ''கர்த்தர் உனக்கு தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்'' என்பதாக உபாகமம் 28:12இல் ஒரு நல்ல பொக்கிஷசாலையைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பொக்கிஷசாலையின் சொந்தக்காரர் பிதாவாகிய கர்த்தர் என்பதாகும். எபிரெயர் 11:26 இல் எகிப்திலுள்ள பொக்கிஷங்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. எகிப்து என்பது பாவத்தையும், உலகத்தையும் குறிக்கின்றது. அதன் சொந்தக்காரன் பிசாசு என்பவன். இந்த இருவேறுபட்ட பொக்கிஷங்களையும் குறித்து சற்று நாம் ஆழமாக பார்ப்போமானால் நம்முடைய வாழ்வின் பொக்கிஷங்களைக் குறித்த தெளிவான விளக்கங்களை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

உலக பொக்கிஷங்கள்

நாம் இன்றைய நடைமுறையில் உலக ஜனங்களை நோக்கிப் பார்ப்போமானால்! எல்லாரும் எப்படியாவது தங்களுக்கும், தங்கள் பிள்ளைகளுக்கும், செல்வங்களை சேர்க்கவேண்டுமென்ற நோக்கத்தோடு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். சிலர் இரண்டு மூன்று வேலைகளைச்செய்து செல்வங்களை சேர்க்கிறார்கள். வேறு சிலர் தவறான வழிகளிலே செல்வங்களைச் சேர்க்கிறார்கள். இன்னும் சிலர் ஜனங்களையும், அரசாங்கத்தையும் ஏமாற்றி செல்வங்களைச் சேர்க்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது? ''துன்மார்க்கனுடைய வீட்டிலே துன்மார்க்கத்தினால் சம்பாதித்த பொக்கிஷங்களும், அருவருக்கப்படத்தக்க குறைந்த மரக்காலும் இன்னும் இருக்கிறதல்லவோ? (மீகா 6:10) என்பதாக சொல்லப்பட்டுள்ளது. இப்படியாக சேகரிக்கப்பட்ட பொக்கிஷங்களை கர்த்தர் விரும்புகிறவரல்லவே. தவறான வழிகளில் சேகரித்த பொக்கிஷங்கள் நமக்கு நல்ல பலனைத் தருவதில்லை.

உன்னதத்தின் பொக்கிஷங்கள்

கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளுக்குச் சொல்லுவது என்ன வென்றால், ''பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம், பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள், உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்' (மத்தேயு 6:19-20) என்பதாக சொல்லுகின்றார். ஆம்! இந்த பூமியிலே எதுவும் நமக்கு நிரந்தரமல்ல. அன்பான தேவ பிள்ளைகளே! நம்முடைய பிதாவாகிய கர்த்தர் தான் சிருஷ்டித்த மனித குலத்திற்காக தன்னிடமிருந்த விலைமதிப்பில்லாத பொக்கிஷமாகிய தன்னுடைய சொந்தக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே நமக்காக இவ்வுலகத்திற்கு அனுப்பி, அவர் நம்மேல் வைத்த அன்பினை வெளிப்படுத்தினார் (ரோமர் 8:32, யோவான் 3:16). இயேசு இந்த உலகத்திற்கு மனிதனாக வந்திராவிட்டால் நாம் எல்லோரும் பாவத்திலேயே அழிந்திருப்போம். அவரை விசுவாசிப்போருக்கு அவர் நல்ல பொக்கிஷங்களைக் கொடுக்க விரும்புகிறார். அவை நல்வழியில் கிடைக்கும் பொக்கிஷங்களாகும்.

நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

பரிசுத்த வேதாகமத்திலே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து கூறிய வார்த்தைகளைப் படித்தப்பார்ப்போமானால் நாங்கள் செய்ய வேண்டிய காரியங்களை அறியமுடியும். '' முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்'' (மத்தேயு 6:33) நாம் கர்த்தரையும் அவருடைய ராஜ்யத்துக்கான காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றபோது, அவர் நமக்கான அனைத்தையும் கூடவே சேர்த்துத்தருவார் என்பதாக இந்த வசனம் நமக்குப் போதிக்கின்றது. மட்டுமல்லாமல், ''பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்'' (கொலோசெயர் 3:2) என்பதாக பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அன்பான தேவப்பிள்ளையே! நீ எதை நாடுகிறாய்? சற்று சிநதித்துப்பார்ப்பாயா? உன் வாழ்வுக்கு விடுதலை தரமுடியாதவைகளையா? உன் வாழ்வை அழிவைநோக்கி இழுத்துச் செல்லும் காரியங்களையா? அல்லது உன் வாழ்க்கைக்கு பிரயோஜனமற்ற காரியங்களையா? ஏதை நீங்கள் நாடுகிறீர்கள்? தினமும் எதை நீங்கள் தேடுகிறீர்கள்? சற்று நீங்களே ஆராய்ந்துப் பாருங்கள்.

கிறிதவனுக்கான மெய்யான பொக்கிஷம் எது?

பரிசுத்த வேதாகமத்திலே தீர்க்கதரிசியான ஏசாயாவின் தீர்க்க தரிசனப் புத்தகத்திலே சொல்லப்பட்டுள்ளது ''கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்'' (ஏசாயா 33:6) என்பதாக. கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது: அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடத்தலாகும். யார் யாரெல்லாம் அவர் வார்த்தைக்கு செவிகொடுத்து அதன்படி நடக்கிறார்களோ! அவர்களுக்கு உபாகமம் 28:12 இல் கூறப்பட்டுள்ள படியே ''தேவன் தனது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்''. அருமையான தேவப்பிள்ளையே! கடந்த ஆண்டு நீ எப்படியிருந்தாய்? என்பதை யாரும் அறியமுடியாது. பிறந்திருக்கும் புதிய ஆண்டிலே கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்றால் நீ கர்த்தருக்கு முன்பாக உன்னை சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தர் எனக்காகத் தன்னுடைய பொக்கிஷசாலையைத் திறக்கமாட்டாரா? என்று நீ ஏங்கிக்கொண்டிருப்பாயானால், உன்னை ஒருவிசை ஆராய்ந்துபார். நீ கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து, அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறாயா? அவருடைய வார்த்தைக்குப் பயந்து நடக்கிறாயா? அழிந்துபோகும் உலகத்துப் பொக்கிஷங்கள்மேல் உன்னுடைய கண்களை வைக்காமல், அழியாத பொக்கிஷமாகிய கர்த்தருடைய வார்த்தையின்மேல் உன் கண்களை வைப்பாயாக. அவருடைய வார்த்தையைக் குறித்து சங்கீதக்காரன் இப்படியாகச் சொல்லுகிறார்'' ''அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம் (சங்கீதம் 119:72) என்பதாக. மட்டுமல்லாமல், '' நான் பொன்னிலும் பசும்பொன்னிலும் அதிகமாய் உமது கற்பனைகளில் பிரியப்படுகிறேன் (சங்கீதம் 119:127) என்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டிலே மத்தேயு எழுதின சுவிசேஷத்திலே இப்படியாகச் சொல்லப்படுள்ளது: ''நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான்'' (மத்தேயு 12:35) என்பதாக.

ஆம் அருமையானவர்களே! நீங்களும் உங்கள் இருதயத்தில் தேவனுடைய வார்த்தைகளை பொக்கிஷமாக சேர்த்துவைத்து, அதை மற்றவர்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் காண்பிப்பீர்களானால், கர்த்தர் உங்களுக்காக தனது நல்ல பொக்கிஷசாலையைத் திறப்பார். அவர் உங்களுக்காக அதைத் திறக்கும்போது, அதிலிருந்து உபாகமம் 28:1-14 வரையான பகுதியில் சொல்லப்பட்டுள்ள அத்தனை ஆசீர்வாதங்களும் உங்கள் மேலும் உங்கள் பிள்ளைகள் மேலும் உங்கள் குடும்பத்தின்மேலும் வந்துதங்கும்.

ஆதலால், பிறந்திருக்கும் புதிய ஆண்டைக்குறித்துப் பலரும் பலவிதமாய்ப் பேசினாலும் நானும் நீங்களும் கர்த்தருடைய வார்த்தையின்படி வாழ்ந்து, அவரால் சொல்லப்பட்ட காரியங்களை நமக்கு பொக்கிஷங்களாக பெற்றுக்கொள்ளுவோம். இவ்வாண்டு முழுவதும் நாம் பூமிக்கானவைகளையல்ல மேலானவைகளை நாடி அந்த ஆசீர்வாதங்களை அனுபவிக்க கர்த்தர்தாமே நமக்கு கிருபை அருளுவாராக.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

□□

பரிசுத்த வேதாகமத்திலே தீர்க்கதரிசியான ஏசாயாவின் தீர்க்க தரிசனப் புத்தகத்திலே சொல்லப்பட்டுள்ளது ;;கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்;; (ஏசாயா 33:6) என்பதாக. கர்த்தருக்குப் பயப்படுதல் என்பது: அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடத்தலாகும். யார் யாரெல்லாம் அவர் வார்த்தைக்கு செவிகொடுத்து அதன்படி நடக்கிறார்களோ! அவர்களுக்கு உபாகமம் 28:12 இல் கூறப்பட்டுள்ள படியே ;;தேவன் தனது நல்ல பொக்கிஷ சாலையாகிய வானத்தைத் திறப்பார்;;.

□□

பணம் பண்ணலாம்

சி. முருகேஷ்பாபு

உலகமெங்கும் ஒரே பேச்சு... அணு உலையில் எவ்வளவு ஆபத்தானவை என்பதுதான் அது. அதற்கான அவசியத்தை உண்டாக்கிவிட்டது ஜப்பானில் நிகழ்ந்த பேரழிவு. அணு உலை வெடித்துப் பரவிய கதிர்வீச்சு ஆபத்து, சுமார் 30 கிலோமீட்டர் தூரம் வரையில் மக்களே இல்லை என்னும் அளவுக்கு ஊரையே காலி செய்ய வைத்திருக்கிறது. தலைமுறைகளைத் தாண்டியும் பாதிப்பு இருக்கும் என்பது அச்சத்தை அதிகமாக்கி இருக்கிறது.

நாட்டில்கூட அணு உலைகள் பற்றிய விவாதங்கள் தொடங்கிவிட்டன. ஆனால், வளர்ந்துவரும் நாட்டுக்கு அதன் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையாக இருக்கும் மின் சக்தியைக் கொடுப்பதில் அணுமின் உற்பத்திக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. நாம் 2 சதவீதம் என்ற அளவில் தான் அணு சக்தியை மின் தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறோம். இது அமெரிக்காவில் 20 சதவீதம். இப்போது மிகப் பெரிய சிக்கலைச் சந்தித்திருக்கும் ஜப்பானில் இந்த அளவு 30 சதவீதம். இன்னும் பத்தாண்டுகளில் இதை 40 சதவீதமாக உயர்த்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போது சுனாமியும் நில அதிர்வும் எச்சரிக்கை மணி அடித்திருக்கிறது.

ஜப்பானின் நடந்திருக்கும் இந்தப் பேரழிவால் அதிர்ந்து போயிருப்பது பிரான்ஸ்தான். அந்த நாட்டின் 75 சதவீத மின் தேவையை நிலைவேற்றுவது அணு உலைகளில் உற்பத்தியாகும் மின்சாரம்தான். ஆபத்தை மடியில் கட்டிக்கொண்டு மின்சாரம் எடுப்பது தேவையா என்ற அச்சம் அந்த நாட்டு மக்களுக்கு வந்திருக்கிறது. எல்லோருடைய சிந்தனையிலுமே இதற்கு என்னதான் தீர்வு... என்னதான் மாற்று வழி என்பது ஓடிக் கொண்டே யிருக்கும். அப்படி ஓடும் சிந்தனையை ஒருமுகப்படுத்தி முதலீட்டு வாய்ப்பை நோக்கிச் செலுத்துவதுதான் முதலீட்டாளரின் முக்கியமான குணமாக இருக்க வேண்டும்.

நான் சொல்லப் போகும் உதாரணம் கொஞ்சம் கடக்மொடக் என்று இருந்தாலும் அதில் உள்ள கருத்தை மட்டும் பாருங்கள்... சில நேரங்களில் கல்யாண வீடுகளில் மாப்பிள்ளையோ மணப்பெண்ணோ கடிதம் எழுதி வைத்துவிட்டு காணாமல் போவதோ அல்லது திருமணம் பிடிக்கவில்லை என்று காதலித்தவரைக் கைபிடித்து நிற்பதோ நடக்கும். அந்த நிமிடத்தில் மொத்த திருமண வீடும் அதிர்ச்சியில் உறைந்துவிடும். அடுத்து என்ன செய்வது என்று புரியாமல், “கவுரவமே போச்சு” என்று களேபரப்பட்டு நிற்கும். ஒரு கணம் தான்... பிறகு சுதாரித்துவிடுவார்கள். அந்த திருமண விழாவுக்கு வந்தவர்களில் தகுதியான மாப்பிள்ளை அல்லது பெண்ணைப் பார்த்து சம்மதம் வாங்கி அதே மேடையில் அதே நேரத்தில் கல்யாணம் செய்து வைப்பார்கள். அடிக்கடி செய்தித்தாளில் நாம் தாண்டிப் போகும் செய்திதான் இது. ஆனால், ஒரு இடத்தில் சிக்கல் என்று வரும்போது எல்லாருடைய கவனமும் மாற்றுத் திட்டத்தின் மீது திரும்பும் என்ற உட்கருத்தை இந்தச் செய்தியில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

இங்கேயும் அப்படித்தான்... அணு உலைகள்தானே ஆபத்து; நாம் ஏன் மின் உற்பத்திக்கு மாற்று சக்திகளை அதிக அளவில் பயன்படுத்தக் கூடாது என்ற கேள்வி எழும் நேரம் இது. நாம் இப்போதே மாற்று சக்திகளைக் கையாளும் நிறுவனத்தில் முதலீடு செய்துவிட்டால், சக்திகள் விஸ்வரூபம் எடுக்கும்போது நம் முதலீடும் கூடவே விண்ணை முட்டி நிற்குமல்லவா....!

சரி, அணு மின்சக்திக்கு மாற்றாக இருக்கும் திட்டங்கள் எவை? அனல் மின்சாரம், நீர் மின்சாரம், போன்ற பெரும்பான்மையான திட்டங்களை அரசாங்கமே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. நம்முடைய முதலீட்டுக்கு அதில் பெரும் வாய்ப்பு ஏதுமில்லை. அடுத்ததாக காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் இப்போது பரவலாக அறியப்பட்டு வருகிறது. அந்தத் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களில் ஒன்றைத் தேடித் தீர்மானித்து முதலீடு செய்யலாம். அதுதான் சரியாக இருக்கும்.

அந்தத் துறையில் முக்கியமான நிறுவனமாக இருக்கிறது என்டிபிசி. சென்செக்ஸ் பட்டியலிலும் இடம் பிடித்திருக்கும் இந்த நிறுவனத்தை விட, என்னைக் கவர்ந்த இன்னொரு நிறுவனம் ஓரியன்ட் கிரீன் பவர் என்ற நிறுவனம்தான். என்டிபிசி நிறுவனத்தில் செய்யும் முதலீடு ரொம்பவே பாதுகாப்பான எளிதான முதலீடாக இருக்கும். அந்த நிறுவனம் சென்செக்ஸ் செயல்பாட்டுக்கும் பயன்படுவதால் அதன் மீது எல்லோருடைய பார்வையும் அழுத்தமாகவே இருக்கும். ஆனால் இதுபோன்ற சூழலில், பரவலாக அறியப்படாத சிறிய நிறுவனத்தின் செயல்பாட்டைக் கவனித்து, திருப்திகரமாக இருந்தால் முதலீடு செய்வது இன்னும் சிறப்பான லாபத்தைத் தரும்.

வெறுமனே காற்றாலையில் மட்டும் கவனம் செலுத்தாமல் மரங்களை எரித்து, அதன்மூலம் உருவாக்கும் (பயோமாஸ்) மின் சக்தி, பயோ கேஸ் மின் உற்பத்தி, சிறிய நீர்மின் திட்டங்கள் என்று மின்சாரத் தயாரிப்புக்கான அத்தனை சாத்தியங்களையும் செயல்படுத்தும் இந்த நிறுவனம் இதனாலேயே தனித்துத் தெரிகிறது. சென்னையைச் சேர்ந்த ஸ்ரீராம் நிறுவனம் இதில் முக்கியமான பங்கை வகிப்பது, இந்த நிறுவனத்தின் நம்பகத் தன்மையைக் கூட்டுகிறது. 2013ம் ஆண்டுக்குள் 1000 மெகாவாட் மின் உற்பத்தி என்ற இலக்குடன் செயல்படும் இந்த நிறுவனம் நீண்டகால முதலீட்டுக்கு ஏற்றதாக இருக்கிறது.

கடந்த சில நாட்களாக கவனிக்கத்தகுந்த நிறுவனமாக மாறியிருக்கும் இது, மும்பை பங்குச் சந்தையில் 23.70 ரூபாய் என்ற விலையில் வர்த்தகமாகிக் கொண்டிருக்கிறது. அதன் ஓராண்டு அதிகபட்ச விலையாக 47 ரூபாய் வரை சென்றிருக்கிறது. அந்த இலக்கை மீண்டும் தொடுவதற்கான வாய்ப்பு நிறையவே இருக்கிறது. எனவே பாதி விலையில் கிடைக்கும் இந்தப் பங்கை நீண்டகால முதலீடாக வாங்கலாம் என்பதே முதலீட்டு ஆலோசகர்களின் கருத்து. என்னுடைய ஆலோசனை இது. நீங்களும் உங்கள் ஆலோசகரைக் கேட்டு முடிவெடுத்து முதலீடு செய்யுங்கள்! □

புற்றுநோயைக் குணப்படுத்தும் அதிசய மருந்து கண்டுபிடிப்பு

புற்றுநோயைக் குணப்படுத்தும் அதிசய மருந்தைக் கண்டுபிடித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த மருந்து இன்னும் சில கொடிய வியாதிகளைக் குணப்படுத்த வல்லதாம்.

அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகம் தலைமையிலான சர்வதேச விஞ்ஞானிகள் அடங்கிய குழு புற்றுநோய் செல்களை அழிக்க மருந்து கண்டுபிடித்துள்ளனர். கேஜி5 என்று பெயரிடப்பட்டுள்ள அந்த மருந்து புற்று நோய் செல்களை முற்றிலும் அழித்துவிடும் திறன் கொண்டது. மேலும் கட்டி ஏற்படுத்தும் செல்களை பெருகவிடாமல் அழிக்கும் என்று நேச்சுரல் மெடிசின் என்ற பத்திரிக்கையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

மாத்திரை வடிவில் வரவிருக்கும் இந்த மருந்து இன்னும் 5 ஆண்டுகளில் பயன்பாட்டிற்கு வரும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்த மருந்தால் மிகக் குறைந்த பின் விளைவுகள் தான் ஏற்படுமாம். □

புற்றுநோயை குணப்படுத்தும் மாதுளம் பழம்

மாதுளம் பழம் உடல் நலனுக்கு சிறந்தது என்ற பொதுவான கருத்துள்ளது. தற்போது அது சர்வரோக நிவாரணி என விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

பிரித்தானியாவிலுள்ள ராணி மார்க்ரெட் பல்கலைக்கழக விஞ்ஞானி டொக்டர் எமாட் அல்துஜாலி கூறும்போது, மாதுளம் பழம் நோய் தீர்க்கும் இயற்கை மருந்தாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்.

மாதுளம் பழம் சாப்பிட்டால் புற்றுநோய் குணமாகும் என்றும் அதே நேரத்தில் பாலியல் பிரச்சினைகளையும் இது தீர்க்கும் என்றும் தெரியவந்துள்ளது. □

Room For Rent

1 Bed Room For Rent
(Sheppherd & Meadowvale)

416 - 284 - 5571

"தமிழ்நாடு" பெயர் மாற்ற தீர்மானம் சட்டசபையில் நிறைவேறியது

"மெட்ராஸ் ஸ்டேட்" (சென்னை ராஜ்ஜியம்) என்ற பெயரை அடியோடு ஒழித்து. தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வகை செய்யும் தீர்மானம், தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேறியது. காங்கிரஸ் ஆட்சியின்போது. தமிழில் மட்டும் "தமிழ்நாடு" என்று அழைக்கப்பட்டாலும், ஆங்கிலத்தில் "மெட்ராஸ் ஸ்டேட்" என்றே தறிப்பிடப்பட்டது.

"மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை அடியோடு ஒழித்து, "தமிழ்நாடு" என்று பெயரைச் சூட்ட வேண்டும் என்று தி.மு.க அரசு முடிவு செய்தது. இதற்காக அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும் என்று தீர்மானத்தை, தமிழக சட்டசபையில் 18-7-1967 அன்று முதல்-அமைச்சர் அண்ணா கொண்டு வந்தார்.

கூட்டத்துக்கு சபாநாயகர் சி.பா.ஆதித்தனார் தலைமை தாங்கினார். "தமிழ்நாடு" என்று பெயர் சூட்ட அனைத்துக்கட்சியினரும் ஆதரவு தெரிவித்தனர். பாலசுப்பிரமணியம் (இ.கம்.) பேசுகையில், "இனி நாம் எங்கு சென்றாலும் மற்றவாகள் நம்மை "தமிழன்" என்று அழைக்க வேண்டும். "மதராசி என்று அழைக்கக் கூடாது" என்று கூறினார்.

ஆதி மூலம் (சுதந்திரா) பேசுகையில், "தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கைக்காக முன்பு சங்கரலிங்கனார் உண்ணாவிரதம் இருந்தார். காங்கிரசின் அலட்சியத்தால் அவர் உயிர் இழந்தார்." என்று குறிப்பிட்டார். தமிழரசு கழகத்தலைவர் ம.பொ.சிவஞானம் பேசுகையில் கூறியதாவது:

"இந்த தீர்மானத்தை உணர்ச்சி பூர்வமாக – உயதிர்ப்பூர்வமாக ஆதரிக்கிறேன். தி.மு.க. ஆட்சியில்தான் இப்படி தீர்மானம் வரவேண்டும் என்பது கடவுள் செயலாக இருக்கலாம். காங்கிரஸ் கட்சியினர் 10 ஆண்டுகளுக்கு முன்பே ஆதரித்திருந்தால் காங்கிரசின் நிலையே வேறாக இருந்திருக்கும்.




சி.பா.ஆதித்தனார்

பாரதிக்கு தாய்நாடாக, தந்தை நாடாக, செந்தமிழ் நாடாக விளங்கி 3 ஆயிரம் ஆண்டுகளாக புகழ் பெற்ற பெயரைத்தான் நாம் வைக்கிறோம். அதை எதிர்க்கவும் மனம் வந்தது என்றால் மனம் கொதிக்காதா? முதல்-அமைச்சர் இந்தத் தீர்மானத்தை படித்து முடித்த போது, ஓடிச்சென்று அவரைக் கட்டித்தழுவி பாராட்ட வேண்டும் என்று உணர்ச்சி மேலிட்டது.

அடக்கிக்கொண்டேன். தமிழ்நாடு என்று பெயர் வைத்தபின் தமிழுக்கு வாழ்வு அளிக்காவிட்டால் பயனில்லை. இந்த கோட்டையின் பெயர் "செயிண்ட் ஜார்ஜ் கோட்டை" என்று இருப்பதை "திருவள்ளுவர் கோட்டை" என்று மாற்ற வேண்டும்."

இவ்வாறு ம.பொ.சி. கூறினார்.

விவாதத்துக்கு பதில் அளித்துப் பேசுகையில் அண்ணா கூறியதாவது:

"இந்த நாள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் வாழ்விலும், எழுச்சியும், மகிழ்ச்சியும் கொள்ள வேண்டிய நாள். நீண்ட நாட்களுக்கு முன்பே வந்து இருக்க வேண்டிய இந்த தீர்மானம், காலந்தாழ்த்தி வந்தாலும் இங்குள்ள அனைவரின் பேராதரவுடனும் வருகிறது.

இதை இந்த சபையில் நிறைவேற்றி, இந்திய பேரரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதுபற்றி நான் மத்திய மந்திரிகள் சிலருடன் பேசிக்கொண்டு இருந்தபோது, "தமிழ்நாடு" என்ற பெயரை சட்டமன்றத்தில் நிறைவேற்றி இந்திய பேரரசுக்கு அனுப்பி வைத்தால், அதற்கு ஏற்ப இந்திய அரசியல் சட்டத்தை திருத்துவதில் தடை எதும் இல்லை" என்று கூறினார்கள்.

10நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் பேசிய மத்திய அமைச்சர் சவான். இதுவரை "மெட்ராஸ் என்றே பேசியவர், மிகவும் கவனத்துடனும், சிரமத்துடனும் "டமில் நாட்" (தமிழ்நாடு) என்று பேசினார். ஆகவே அரசியல் சட்டத்தை திருத்த நல்ல வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. இந்த தீர்மானம் எதிர்ப்பு ஏதுமின்றி நிறைவேறினால் அந்த வெற்றி ஒரு கட்சியின் வெற்றியல்ல.

தமிழின் வெற்றி, தமிழரின் வெற்றி, தமிழ் வரலாற்றின் வெற்றி. தமிழ்நாட்டு வெற்றி, இந்த வெற்றியில் அனைவரும் பங்கு கொள்ள வேண்டும். மேலும் நாம் பெயர் மாற்றம் செய்வதாலேயே தனி நாடு ஆகவில்லை. இந்தியப் பேரரசின் ஒரு பகுதியாகவே நம் மாநிலம் இருக்கும். அதனால் சர்வதேச சிக்கல்கள் எழாது.

சங்கரலிங்கனாருக்கு நினைவுச்சின்னம் ஏற்படுத்த வேண்டும். என்று கூறப்பட்டது. அவரது எண்ணங்கள் ஈடேறும் நிலை இன்று ஏற்பட்டு இருப்பது. நம் வாழ்நாள் முழுவதும் பெருமை தருவது ஆகும்.

நாம் இப்படி பெயர் மாற்றத்துக்குப் பேராதரவு அளித்ததற்காக எதிர்கால சந்ததியினர் நம்மை வாழ்த்துவார்கள். அந்த நல்ல நினையை எண்ணிப் பார்த்தால் எதிர்க்கட்சித் தலைவர் ஆலோசனை சொல்லாமல் இதற்கு பேராதரவு அளிப்பார் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அண்ணா கூறினார்.

பிறகு தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியதாக சபாநாயகர் ஆதித்தனார் அறிவித்ததும், மண்டபமே அதிரும் வண்ணம் உறுப்பினர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

பின் அண்ணா எழுந்து, "தமிழ்நாடு என்ற பெயர் மாற்ற தீர்மானம் நிறைவேறிய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நன்னாளில், தமிழ்நாடு வாழ்க என்று நாம் வாழ்த்துவோம்."

என்று கூறி,

"தமிழ்நாடு" என்று 3 முறை குரல் எழுப்பினார்.

எல்லா உறுப்பினர்களும் "வாழ்க" என்று குரல் எழுப்பினார்கள்.

சபை முழுவதிலும் உணர்ச்சிமயமாக காட்சி அளித்தது. □

கைவிரல் நகங்கள் நிறமாற்றம்: இரத்தச் சோகை இருக்கிறது என்பதற்கான அறிகுறி!

சில நேரங்களில் சிலரது கைவிரல் நகங்கள் வழக்கத்திற்கு மாறாக வெளுத்துப்போய் காணப்படும்.

அந்த மாற்றம் தெரிந்தால், உடனே மருத்துவரை அணுகுவது அவசியம்.

இரத்தச் சோகை இருக்கிறது என்பதற்கான அறிகுறிதோன், நகத்தின் இந்த திடீர் மாற்றம்.

இரத்தத்தில் உள்ள சிகப்பணுக்கள் அளவில் குறையும்போது சின்னச் சின்ன வேலையைச் செய்வதற்கும் உடல் பலமின்றிப் போகும். மேலும், இரத்தின் சிவப்பணுக்கள் குறைவதால், இயல்பாக நகம் இருக்கவேண்டிய 'பிங்க்' நிறம் மறைந்து, வெளுத்து விடும்.

இரும்புச்சத்து இரத்தத்தில் உள்ள சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச்செய்யும் என்பதால், அந்த சத்து அதிகம் உள்ள ஈரல், கீரைவகைகள் மற்றும் இறைச்சியை இந்த பாதிப்பு உள்ளவர்கள் உணவுடன் சேர்த்துக்கொள்வது அவசியம்.

அல்லது, தகுந்த மருத்துவரின் ஆலோசனையின் பேரில் குறிப்பிட்ட நாட்களுக்கு இரும்புச்சத்து மாத்திரைகளோடு விட்டமின் பி-12 மாத்திரைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். □

முன்னேற்றப்பாதைக்கு அடித்தளம் அமைத்த இந்தியாவின் முதல் பிரதமர் "ரோஜாவின் ராஜா" நேரு

ரோஜாவின் ராஜா என்று அழைக்கப்படும் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 123-வது பிறந்தநாள் இன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

குழந்தைகளை கண்டால் நேரு தானும் ஒரு குழந்தையாகவே மாறி அன்பு செலுத்துவார். இதனால்தான் அவருடைய பிறந்தநாள் குழந்தைகள் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

ஆனால் குழந்தை மனம் படைத்த இதே நேருதான் ஆங்கிலேயர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்து நாட்டை விட்டே வெளியேற செய்தார் என்பதை யாராலும் மறுக்க முடியாது. அவர் காட்டிய வீரம். தீரம் இந்திய நாட்டுக்கு விடுதலை கிடைக்க முக்கிய பங்கு வகித்தது.

நேரு குடும்பமே சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட தியாக குடும்பமாகும். அவருடைய தந்தை மோதிலால் நேரு. தாயார் சொரூபராணி ஆகியோரும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டவர்கள். இவர்களின் மகனாக 1889-ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ந்தேதி நேரு பிறந்தார். இவருடன் விஜயலட்சுமி பண்டிட் உள்பட 3 சகோதரிகள் பிறந்தனர்.

நேரு குடும்பம் உத்திரபிரதேசம் மாநிலம் அலகாபாத்தில் வசித்து வந்தது. நேருவின் தந்தை மோதிலால் நேரு பாரிஸ்டர் பட்டம் பெற்று அலகாபாத்தில் வக்கீல் தொழில் செய்து வந்தார். இதனால் அலகாபாத்தில் அவருடைய குடும்பம் புகழ்பெற்ற வசதி படைத்த குடும்பமாக திகழ்ந்து வந்தது.

நேரு தனது 15-வது வயதில் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு பள்ளியில் சேர்க்கப்பட்டார். அங்கு ஹாரோ பள்ளியில் உயர்நிலை படிப்பை படித்த அவர் பின்னர் ஹேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள டிரினிட்டி சட்டக்கல்லூரியில் பாரிஸ்டர் (வக்கீல்) பட்டம் பெற்றார். 7 ஆண்டுகள் இங்கிலாந்தில் தங்கி கல்வி பயின்ற அவர் 1912-ம் ஆண்டு இந்தியா திரும்பினார்.

உடனே அலகாபாத் கோர்ட்டில் வக்கீல் பணியை தொடங்கினார். 1916-ம் ஆண்டு நேருவுக்கு திருமணம் நடந்தது. 16 வயது கமலாபாயை மணந்தார். முதல் ஆண்டிலேயே அவர்களுக்கு பெண் குழந்தை (இந்திராகாந்தி) பிறந்தது. தந்தையைப்போல நேருவுக்கும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. காந்தி தலைமையிலான சுதந்திர போராட்டம் அவரை ஈர்த்தது.

அப்போது ரவுலட் சட்டத்தை எதிர்த்து மகாத்மா காந்தி நாடு தழுவிய போராட்டம் நடத்தி கொண்டிருந்தார். அதில் நேரு தீவிரமாக ஈடுபட்டார். இதனால் மகாத்மா காந்திக்கு நேரு மீது பற்றுதல் ஏற்பட்டது.

1920-ம் ஆண்டு நடந்த ஒத்துழையாமை இயக்க போராட்டத்தில் நேரு தீவிரமாக கலந்து கொண்டார். இதனால் முதன்முறையாக ஆங்கிலேயர் போலீசாரால் கைது செய்யப்பட்டார். சில மாதங்களுக்கு பிறகு அவர் விடுதலையானார்.

1924-ம் ஆண்டு அலகாபாத் நகரசபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2 வருடம் இந்த பதவியில் இருந்தார். 1926-ம் ஆண்டு காங்கிரசின் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1936-ம் ஆண்டு காங்கிரஸ் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1935-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடுவது என்று முடிவு செய்தது. அப்போது நேரு போட்டியிடவில்லை. ஆனால் நாடு முழுவதும் சுற்று பயணம் செய்து பிரசாரம் செய்தார்.

1942-ம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் நேரு தீவிரமாக ஈடுபட்டதால் அவர் கைது செய்யப்பட்டு 3 ஆண்டுகள் ஜெயிலில் அடைக்கப்பட்டார். 1945-ல் விடுதலையாகி வெளியே வந்த அவர் மீண்டும் சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக குதித்தார்.

இந்த போராட்டத்தின் விளைவாக 1947-ல் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தது. இந்தியாவின் முதல் பிரதமராக நேரு தேர்ந்தெடுக்கப்பட்டார். பிரதமர் பதவிக்கு வந்ததுமே நாட்டை எந்த வகையில் முன்னேற்றலாம் என்று திட்டம் தீட்டினார். இதற்காக திட்ட கமிஷன் என்ற அமைப்பை உருவாக்கினார்.

அறிவியல் தொழில்நுட்பத்தை வளர்ப்பதற்காக தொழில் நுட்ப குழுவை அமைத்தார். ஐந்தாண்டு திட்டங்களை உருவாக்கினார். விவசாயமும், தொழில் துறையும் ஒரே சீராக வளர்ச்சியடைய அதற்கான பிரத்யேக திட்டங்களை கொண்டு வந்தார்.

தொழிற்சாலைகள்தான் இந்தியாவின் கோவில் என்று கூறிய அவர் பெரிய தொழிற்சாலைகள் பல உருவாவதற்கு காரணமாக இருந்தார். இந்தியா சுதந்திரம் அடைந்த காலத்தில் உலக நாடுகள் அனைத்தும் 2 பிரிவாக பிரிந்து கிடந்தன. ஆனால் இந்தியா உள்ளிட்ட பல நாடுகளை ஒன்றிணைத்து அணிசேரா அமைப்பை உருவாக்கினார். அவர் உருவாக்கிய பஞ்சசீல கொள்கைகள் உலக அளவில் பாராட்டப்பட்டது.

இந்தியாவின் வளர்ச்சிக்கு அணுசக்தி மிகவும் அவசியம் என்று கருதிய அவர் அணுசக்தி கழகத்தை உருவாக்கினார். உயர் தொழில்நுட்ப கல்விகள் இருந்தாலும்தான் நாட்டை முன்னேற்ற முடியும் என்று நினைத்த அவர் அகில இந்திய மருத்துவக்கழகம். ஐ.ஐ.டி. கல்லூரி. இந்தியா வேளாண்மை கல்லூரி, தேசிய தொழில்நுட்ப கல்லூரி போன்றவற்றை உருவாக்கினார்.

17 வருடம் தொடர்ந்து பிரதமராக இருந்து நாட்டை முன்னேற்ற பாதைக்கு அழைத்து சென்ற நேரு 1964-ம் ஆண்டு மே மாதம் 27-ந்தேதி மாரடைப்பால் மரணம் அடைந்தார். இந்தியா இன்று உலக அளவில் தலைநிமிர்ந்து நிற்கிறது என்றால் அதற்கு நேரு அமைத்த அடித்தளம் தான் காரணம். □

Rajiv Gandhi and Sanjay Gandhi carry the ashes of their grandfather Jawaharlal Nehru as Indira Gandhi walks behind.

TUTORING CLASS

EVENINGS AND WEEKENDS

Lawrence / Moss Bank

Group or Private Classes, English/Math Classes, Offered from JK – Grade 7

(According to Ontario "C" Curriculum)

By Experienced Retired Teacher

Contact: 416 289 3641

இருட்டில் நின்ற...

ரயில் நின்று விட்டது.

வெளியே இருட்டு. ஒரு உவமை சொல்ல முடியாத அளவுக்கு நல்ல இருட்டு. சிலர் என்ன நடந்தது என்று பார்க்க ஜன்னல் வழியே வெளியே தலையை நீட்டினார்கள். இன்னும் சிலர் கதவுப் பக்கமாய் நடந்தார்கள். ஏதாவது விபத்து நடந்திருக்கும் என்று பேசிக் கொண்டார்கள்.

கணேசன் மெதுவாய் சோம்பல் முறித்துக்கொண்டே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். கீழே ஒரு பெண், மேல்பர்த்தில் படுத்திருந்த அவனையே பார்த்துக் கொண்டிருந்தவள், அவன் புகையை ஊதியபோது சற்று முகத்தைச் சுளித்தாள். அவன் அவளை அலட்சியப்படுத்திவிட்டுக் கூட்டத்தைப் பார்த்தான்.

கீழே இறங்கியவர்களைப் பார்த்து ரயிலில் இருந்தவர்கள் என்ன ஆயிற்று என்று ஜன்னல் வழியாய்க் கேட்டார்கள். பதில் வராது போகவே இவர்களும் இறங்கிப் போனார்கள்.

கணேசன் கீழே இறங்கி வந்தான். அந்தப் பெண் இன்னும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். 'நல்ல நாட்டுக் கட்டை' என்று மனசுக்குள் அவளைப் படுக்க வைத்தான்.

ரயிலை விட்டுக் கீழே இறங்கியபோது வெளியின் இருட்டு அதிகமாய்த் தெரிந்தது. கீழே எல்லோரும் குறுக்கு – நெடுக்குமாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள். அவன் சற்று நிதானமாய்ப் பார்த்தபோது ரயில் பாதையை ஒட்டி ஒரு பெரிய ஏரி இருந்ததைப் பார்த்தான். வலது பக்கத்தில் ஒரு பசுமையான வயலில் சலசலப்பை உணர முடிந்தது. எல்லோரும் பேசிக் கொண்டிருந்தார்கள். இருட்டில் குரல்களின் வித்தியாசம் துல்லியமாய்க் கேட்டது. இன்னும் எவரும் உண்மையான காரணத்தைத் தெரிந்து கொள்ளவில்லை. காரணம் என்ன என்பதே அவர்களுக்கு அவசியமில்லாதது போல் தெரிந்தது. ஆனால் பேசிக் கொண்டிருக்க ஏதாவது ஒரு காரணம் போதும் என்பது போல் பேசினார்கள்.

கணேசனைக் கடந்து போன சிலர் அவனிடமும் விசாரித்தார்கள். அவன் தெரியாது என்று பதில் சொன்னவுடன் அதை எதிர்பார்த்ததே போல் மற்றவர்களிடம் கேட்கப் போனார்கள். கணேசன் கொஞ்சம் தள்ளியிருந்த வராவதியின் மேல் போய் நின்று கொண்டு ஏரியைப் பார்த்தான். ஏரியின் கரைக்கு அப்பால் ஒரு உயரமான மேடையும் ஒரு பெரிய கிணறும் தெரிந்தது. பக்கத்தில் ஒரே ஒரு குடிசை மட்டும் தெரிந்தது. அங்கு ஒரு பம்ப்செட் இருக்கவேண்டும் என்று அவன் ஊகித்தான்.

இந்தத் தனியான இடத்தில் ஒரு சிறு குடிசையில் வசித்துக் கொண்டிருக்கும் அந்த யாரோ ஒரு உழவனை நினைத்துக் கொண்டான். எவ்வளவு சுகமான வாழ்க்கை! இவன் தெருவுக்கு இவனே ராஜா. இவன் ஊருக்கு இவன் மட்டுமே குடிமகன். யாரோடும் பேசாமல் இவன் மட்டும் தனியாகத் தன் வேலையைக் கவனித்துக் கொண்டிருப்பான். பிறரின் ரகசியங்களை அவலாக மெல்ல நினைக்கும் ருசி இவனுக்கு இருக்காது. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் காப்பியைக் குடித்துவிட்டு 'ஹிந்து'வைப் படித்து விட்டு பக்கத்து வீட்டுக்காரனோடு வம்பளக்கப் போகாதவனாய் அவன் இருப்பான்.

வேளா வேளைக்கு இருப்பதைத் தின்றுவிட்டு வயலில் உழப் போய்விடுவான். சொந்தக்காரன் எங்காவது பட்டணத்தில் ஒரு ரேஸ் கோர்ஸில் இவனது பகல்நேர உழைப்புகளையெல்லாம் குதிரை வாலில் விட்டுக் கொண்டிருப்பான். இந்த விவசாயிக்குக் கவலைகள் அவ்வளவாய் இருக்காது. ரேவதி, நளினி, விஸ்கி, பிராந்தி எதுவும் இருக்காது. சினிமாவோ கிடையாது. இவனின் ஒரே பொழுதுபோக்கு இவன் மனைவியாய்த்தான் இருக்கும். தன் உடலின் பசி உயரும் பகல் பொழுதில் கூட அவனால் அவன் மனைவியைக் குடிசைக்குள் கூப்பிட முடியும். அவளும் சிணுங்காமல் போவாள். நிம்மதியான வாழ்க்கை....ம்..

கணேசன் திரும்பிப் பார்த்தான். அந்தப் பக்கமாய் வந்த கார்டு பலர் சூழ நடந்து கொண்டிருந்தார். ஒவ்வொருவரும் அவரைக் கேள்வி கேட்டுத் துன்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அவர் யாவருக்கும் பதில் சொல்லாமல் அலட்சியமாய் நடந்து கொண்டிருந்தார். அவர்களும் விடாமல் அவரைத் துரத்தி ரயில் நின்று போன காரணத்தைக் கேட்டார்கள். கார்டு தன் கையில் பிடித்திருந்த விளக்கின் பச்சையை, சிவப்புக்கு மாற்றிவிட்டு, அவர்களைப் பேசாமல் இருக்கும்படி சைகை காட்டிவிட்டு மேலே நடந்தார். ரயிலின் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு கிழவர், 'இப்படித்தான் போன வருஷம் நான் டில்லிக்கு போறச்சே...' என்று கதை சொல்ல ஆரம்பித்தார்.

கணேசன் லயன் ஓரமாகக் கிடந்த கற்களில் ஒன்றைப் பொறுக்கி, 'சீ, ஜனங்க ஏன் இப்படி அர்த்தமே இல்லாம அபத்தமா பேசிக்கிட்டிருக்காங்க' என்று நினைத்தவாறே ஏரியில் ஒரு கல்லை எறிந்தான். 'ப்ளக்' என்று ஒரு ரசிக்கும் படியான ஓசை கேட்டது. தூரத்தில் பம்ப்செண்டின் மேலே இருந்த விளக்கின் ஒளி தண்ணீரில் சிதறுவதைப் பார்க்க முடிந்தது.

அம்மா இருந்தா சொல்லுவா.... தவளை இருக்கும்... அடிக்காதடா! இப்ப அவ இல்லை. மறுபடியும் ஒரு கல்லை விட்டெறிந்தான். அவள் இருந்த வரைக்கும் கஷ்டப்பட்டாள். கஷ்டம் மட்டுமே பட்டாள். அவள் ரொம்பவும் எதிர்பார்த்த அண்ணன்கூட யாரையோ கல்யாணம் பண்ணிட்டு கல்கத்தா பக்கம் போய்விட்டான். அதன் பிறகு, ஊரில் இருந்த அம்மாவுக்கு அவன்தான் பணம் அனுப்பிக் கொண்டிருந்தான். அம்மாவுக்கு ஒரு ரேடியோ வாங்கணும்னு ரொம்ப நாளாய் ஆசை. கதாகாலேஷேபம் கேட்கணுமாம். அவனால் கடைசிவரை அதை வாங்கவே முடியவில்லை.

கணேசன் பட்டணத்தில் தான் குடியிருந்த ராயர் வீட்டை நினைத்துக் கொண்டான். அந்த வீட்டின் முன் பக்க அறையில் பத்து ரூபாய் வாடகைக்குக் குடியிருந்தான். ராயருக்குப் பெண்கள் இல்லை. தான் படிக்கும் கதைகளில், முன்பக்க அறையைத் தன் போன்ற பையன்களுக்கு வாடகைக்கு விடும் ராயர்களுக்கு மட்டும் எப்படி அழகான பெண்கள் இருக்கிறார்கள் என்று அவன் சந்தேகப்பட்டிருக்கிறாள்.

ராயர் ரொம்பவும் நல்லவர். அவர் மனைவி ஒரு பதினைந்து வருஷப் படுக்கை நோயாளி. மனைவிக்கு மருந்து வாங்குவதிலேயே வாழ்க்கையை அழித்துக் கொண்டவர். கணேசனும் இந்த மருந்துகள் வாங்கும் விஷயத்தில் அவருக்கு உதவியிருக்கிறான். ஆனால் எந்த மருந்தும் அவளைக் குணப்படுத்தவில்லை.

ராயர் அவனை வேறு வேலை கிடைக்கும் வரை அங்கேயே இருக்கச் சொன்னார். ஆபீஸில் மேலே இருப்பவனை முறைத்துக் கொண்டதன் விளைவு... தன் சுயமரியாதையைக் காப்பாற்ற வேலையை ராஜினாமா செய்தான். (ம்... என்ன பெரிய சுயமரியாதை! சாப்பாட்டுக்கு வழியில்லாம!) சாப்பாட்டைப் பற்றி அவர் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லியும் மறுத்துவிட்டான். தன் மேல் பிறர் அனுதாபப்படுவதை மிகவும் வெறுத்தான். (ஆமா, இதுக்கு மட்டும் கொறைச்சல் இல்லை)

வேறு வேலை இங்கே இனிமேல் கிடைக்காது. ஆறு மாதம்வரை இருந்து 'செட்டில்மெண்ட்' பணத்தை வைத்து ஓட்டியாயிற்று. 'எங்க போனாலும் Experience இருக்கா? ன்னு கேக்கறான். இருக்குன்னு சொன்னா அந்த வேலையை ஏன் விட்டேன்னு கேக்கறான்.

வேலை நிச்சயமாய்க் கிடைக்காது என்று தெரிந்தவுடன் முன்பு வேலை பார்த்துக் கொண்டிருந்த தன் ஒன்றுவிட்ட மாமாவின் ஊரில் இருக்கும் 'மில்'லுக்குப் போவதுதான் கடைசி வழி என்று தீர்மானித்துத் தன் மூன்று வருடப் பட்டண வாழ்க்கையை எக்மோர் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் உதறிவிட்டு ரயில் ஏறினான்.

கூட்டம் என்ஜின் பக்கம் இருந்து திரும்பி வந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு பெட்டியிலும் உட்கார்ந்திருந்தவர்கள் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார்கள். அந்தப் பெண்ணும் ஜன்னல் வழியே தனியாய் நின்று சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கும் கணேசனையே பார்த்துக் கொண்டு இருந்தாள். கணேசனுக்குத் திடீரென்று ராயர் வீட்டுக்கு நாலு வீடு தள்ளி இருந்த மாடி வீட்டு மைதிலியின் ஞாபகம் வந்தது. அவன் அவளை ரொம்பவும் விரும்பினான். இவள்தான் நம் மனைவி என்று தீர்மானமாய்க் காதலித்தான்.

'யாரோ அடிபட்டுக் கிடக்கான்'

'அவனைத் தேடவே இவ்வளவு நேரம் ஆயிடுச்சு'

'செமுத்தியான அடி உடம்பு பூரா அடி!.... ஒரே ரத்தம்''

மைதிலி மிக அழகாய்ச் சிரிப்பாள். அவள் சிரிப்பு ஒண்ணுதான் அவள் சொத்து. அந்தச் சிரிப்புக்காக அவன் பஸ் ஸ்டாண்டில் தினமும் காத்துக் கொண்டிருப்பான். கூட்டம் கொஞ்சம் பரபரப்பாய் பேச ஆரம்பித்தது. சிலர் என்ஜின் பக்கம் போய் அதைப் பார்த்துவிட்டு வர ஓடினார்கள்.

'உசிரு இருக்கா?'

'தெரியல. பக்கத்து ஜங்ஷன்ல இருக்கிற ஆஸ்பத்திரிக்கு எடுத்துண்டு போவாங்கன்னு நெனக்கறேன்!.

'இருட்ல ஒரு எளவும் தெரியல'.

மைதிலி போல ஒரு பெண் இனி உலகத்தில் தனக்குக் கிடைக்க மாட்டாள் என்று அவன் நினைத்தான். மைதிலியோடு பேச அவன் பலமுறை முயன்று தோற்றுப் போனான். அது தன்னால் முடியாது என்றும் முடிவு செய்தான். ஆனால் அவளோ இவனை பார்த்ததும் ஒரு லேசான புன்னகையைக் காண்பித்துவிட்டு உடனே முகத்தைத் திருப்பிக் கொள்வாள். இது போதும் என்று அவன் நினைத்தான்.

'உசிரு இருக்காது. அந்தக் கார்டுகூட நாடி பாத்துட்டு ஒதட்டைப் பிதுக்கிட்டாரே'.

'அப்படியே இருந்தாலும் இவுக போறதுக்குள்ளே போயிடாதா?'

'எப்படி உளுந்தானாம்?'

ஆனால் அவள் தன்னைக் காதலிக்கிறாளா என்பதை மட்டும் அவனால் அறியவே முடியவில்லை. தன்னுடைய அந்தப் பேடித்தனத்தை எண்ணி அவன் குமுறினான். ஏன் அப்படி இருந்தோம்? ஏன்? என்று பலமுறை தன்னையே கேட்டுக் கொண்டான். பற்களைக் கடித்துக் கொண்டான். மறுபடியும் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு மணியைப் பார்த்தான். 11.30.

'அந்த ஆளு லயனை க்ராஸ் பண்ணறச்சே வண்டி வரதைப் பார்க்கல போல. இங்க லயன் வேற வளஞ்சில்ல வருது!'

'டிரைவர்கூட கொஞ்சம் முன்னாலதான் பார்த்தாராம்.'

'பாவிப் பசங்க ஏன் இப்படி நம்ம உயிரை எடுக்கிறானுவளோ தெரியலை.'

கடைசியில் அவனால அவளை அடைய முடியாமலேயே பேயிற்று. வேறு யாரோ ஒரு கணேசனுடன் அவளுக்குக் கல்யாணம் நடந்தது. அவன் ஒரு இன்ஜினியர் என்று கேள்விப்பட்டு அவன் மைதிலிக்காக வருத்தப்பட்டான். கல்யாணம் வெகு ஆடம்பரமாய் நடந்தது. இவன் ராயர் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டுதான் அந்த மாப்பிள்ளை ஊர்வலத்தைப் பார்த்தான். கண்ணில்

(09ம் பக்கம் பார்க்க....)

நீங்கள் என்னிடம்
வாகனம் வாங்கவில்லையென்றால்
அதிக பணம் கொடுத்தே வாங்கியுள்ளீர்கள்
-டானியல் ராஜசிங்கம் கோல்டன்
Daniel Coulton
HOGAN
CHEVROLET
GMC
HUMMER
Any Brand you Want.
Ready for
HOGAN
chev.com
1 - 888 - 402 - 5552
416 - 291-5054 / 416-438-8181
Cell: 416-315-1649

உங்களுக்குச் சமாதானம்! Peace be with you!
சர்வதேச இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் திருச்சபை
INTERNATIONAL FOLLOWERS OF JESUS CHRIST CHURCH
INTERNATIONAL FOLLOWERS
OF JESUS CHRIST CHURCH
Affiliated with "THE PENTECOSTAL ASSEMBLIES OF CANADA"
வாழ்கையில் போராட்டமா? தீராத வியாதியா? கடன் தொல்லையா? சமாதானம் இல்லையா?
மேற்காணும் கேள்விகளுக்கு விடைகாணவும், இனிய இசையுடனும், இனிய பாடல்களுடனும், தேவனை ஆராதிக்கவும், தேவ செய்தியை கேட்கவும் உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
Are you suffering from a battle that you can't overcome?
To get answers for what you are suffering from, through a great selection of music, songs, worship and preaching; we cordially invite you to join us.
வாருங்கள்! கர்த்தராம் இயேசு கிறிஸ்துவை ஆராதியுங்கள்!! விடுதலை பெறுங்கள்!!!
Weekly order of services:
Sunday Services:
Tamil & English - 10:00 a.m
English - 12:00 noon
Monday - Friday:
Prayer for Victory - 5:00 a.m
Thursday & Friday:
Prayer for Holiness - 9:30 a.m
Friday:
Bible Study - 7:30 p.m
Tamil & English
@ 5800 Sheppard Ave East, Unit 7-9 Scarborough, ON., M1B 5J7 (Markham and Sheppard... Next building to Spiceland)
Branch Church
Sunday Services:
Tamil & English - 3:00 p.m
@ Wideman Mennonite Church 10530, Hwy 48 (Hwy 48 & Major Mackenzie) Markham, ON., L3P 3J3
Now You Can Hear Our Messages Online
Pastor. Christy Mariyanayagam & Premila Christy
For more information, please contact @
Tel: 416. 831. 4662 email: pastor@ifjcc.com web: www.ifjcc.com

நல்ல மேய்ப்பன் சுவிசேஷ திருச்சபை

GOOD SHEPHERD GOSPEL CHURCH

2012 ம் ஆண்டு வாக்குத் தத்தம்

சேர்த்துக் கொள்ளும் ஆண்டு Year of Adding

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் [அப். 2:47]

*2012*ம் ஆண்டில் கர்த்தர் கொடுத்த வாக்குத் தத்தத்தின்படி கர்த்தர் தமது சபையிலே ஆத்துமாக்களை அனுதினமும் சேர்த்து ஆசீர்வதிக்கப் போகிறார். அதுமட்டுமல்ல ஒவ்வொரு குடும்பங்களிலும் இழந்துபோன சகல ஆசீர்வாதங்களையும், ஆரோக்கியத்தையும், சமாதானத்தையும், சொத்துக்களையும், பிரிந்து போன குடும்பங்கள், கணவன், மனைவி, பிள்ளைகளை கர்த்தர் குடும்பங்களிலே சேர்த்துக் கொடுத்து ஆசீர்வதிக்கப் போகிறார்.

தேவனுடைய வாக்குத் தத்தத்தை விசுவாசியுங்கள். விசுவசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.

நற்செய்திக் கூட்டம்

Jan. 28 SATURDAY 6:00 PM

Flemingdon Park Library
29 St. Dennis Drive,
(DonMills & Eglinton)

செய்தி அளிப்பவர்
Pastor Andrew Emmanuel

மாதத்தின் முதல் ஞாயிறு	-	மாலை 2:30	திருவிருந்து ஆராதனை
மாதத்தின் இரண்டாம் ஞாயிறு	-	மாலை 2:30	சுகமளிக்கும் ஆராதனை
மாதத்தின் மூன்றாவது சனி	-	காலை 10:00	உபவாச ஜெபம்
ஒவ்வொரு புதன்கிழமைகளிலும்	-	மாலை 7:30	வேதப்படிப்பு
ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும்	-	மாலை 7:30	வீட்டுக் கூட்டம்
ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும்	-	மாலை 7:30	வீட்டுக் கூட்டம்
ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும்	-	காலை 10:00	ஜெபக் கூட்டம்
மாதத்தின் 2வது சனிக்கிழமை	-	மாலை 6:00	சகோதரிகள் ஜெபக் கூட்டம்

நல்ல மேய்ப்பன் சுவிசேஷ திருச்சபை

1110 Birchmount Road, # 8, Scarborough (Birchmount & Eglinton)

WEBSITE: WWW.GSGC.CA E-MAIL:PASTORANDREW04@HOTMAIL.COM

தொடர்புகளுக்கு: Pastor. Andrew Emmanuel **416 286 1070 / 416 577 1104**

24மணிநேர ஜெபத்தேவைகளுக்கு: 905 903 7378 Bro.John

கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்கு உங்களுக்குள் உள்ள தாளந்துகளை பிரயோஜனப் படுத்த விரும்புபவர்கள் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். **(Musicians)**

ஞாயிற்றுக்கிழமைகளில் பி.பகல் 2:30 மணிக்கு ஆராதனை நடைபெறுகிறது. வந்து கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

குவாலிற்றி பிறின்ரிங் 416.281.6654



இரட்சிப்பின் சத்தியம்

அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி
சகலவல்லமையோடும், அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும்,
கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித
வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள
அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்.

(II தெசலோனிக்கேயர் 2:9-10)

THE TRUTH OF SALVATION MINISTRIES

அப்படியானால் விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படியல்ல
நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோமே. (ரோமர் 3:31)

விவிலிப்பாடங்கள், தீர்க்கதரிசன ஆய்வுகள் இப்போது இணையதளத்ினூடாக
பார்த்து,கேட்டுப்பயனடையுங்கள்.

YouTube முகவரி *the TSministries's channel or setphenraja76's channel*

இணையவலைதளம் *thetruthofsalvation.org*

தொடர்புகளுக்கு *TEL:647-994-8556*, மின்னஞ்சல் *thetruthofsalvation@gmail.com*

TAKE ADVANTAGE NOW BEFORE THE MARKET TURNS

Full Time Realtor

Flexible Commission

BUYING OR SELLING

HomeLife
Future Realty Inc., Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

HELEN E. ANTHONIPILLAI

Sales Representative

Cell 416-830-5724

Bus 905 201-9977

Brimley & Eglinton
4
1
6
-
8
4
7
-
9
8
4
9
Lochechana
CAKE HOUSE
Email: lochchana@rogers.com
Lochechana
FASHION DESIGN
Bridal Service & Hair Styling for all occasion
Bridal Dressing
Facial
Hair Style
Waxing
Manicure
Pedicure
Flower Arrangement
Table Decorations
Classes are available for
Bridal Dressing
& Floral Arrangements

TAMIL CHURCH OF THE LIVING SAVIOUR
ஜீவ மீட்பரின் தமிழ் திருச்சபை
TCLS Family welcomes you to come and join us to
Worship Jesus Christ the Lord
Service held at New Life Church
480, Huntingwood Drive,
Scarborough, M1W1G4
(Warden-Huntingwood Drive)
Service 3:00 pm
Sunday School 3:45 pm
Come and enjoy
Lively Worship!
Inspiring Word!
Warm Fellowship!
Worship and Message in English & Tamil.
Other Ministries:
Wednesday Bible Study, Friday Breakthrough Zonal Prayers
Night Vigil, Men's, Women's, and Youth Fellowship
For More Information Contact
647 - 966 -8257

Gold Jewels
on
Special Price!
Diamond Jewels
50% off
Lalitha
Lalitha Jewellery Mart
3852, Finch Ave. E, Unit G-05, Scarborough,
On., M1T-2P5 CANADA.
Tel : (416) 335-1553
www.lalithajewellerymart.com

அவனோடு இவர்

கான்ஸ்டபிள் கந்தசாமி, வீட்டிற்குள் இருந்து வயர் கூடையை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். வாசலில் அந்த வேப்பமரத்தடி நிழலில் பூட்டி வைத்திருந்த சைக்கிளின் (திருடர்களுக்குப் பயந்து) ஹேண்ட் பாரில், அந்தக் கூடையைத் தொங்கவிட்டார்.

"ஐயா... ஏதாவது தர்மம் .." ஒரு இளவயது பிச்சைக்காரன் அவரிடம் கையை நீட்டினான்.

"ஏய்... உனக்கு குசும்புதானே? நான் வீட்டுக்குள்ள இருந்து வந்ததைப் பார்த்துதானே கேக்குற. உள்ளே 'அம்மா' இருக்கா; போயி கேளுப்பா," என்று அவனை அனுப்பிவிட்டு, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தார். கந்தசாமி.

"அந்தப் பிச்சைக்காரன், வீட்டுப் படிகள் ஏறி, முதல் வாசலுக்கு வந்தான்.

"அம்மா... தர்மம்மா..."

"ஆமா. போகும்போது தர்றதைத் தரலைன்னா... ஐயா போகமாட்டாரே" – அடுக்களையிலிருந்து குரல் மட்டும் வந்தது.

பிச்சைக்காரன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

மீண்டும் "அம்மா... தர்மம்மா..." என்றான்.

"கொஞ்சம் இருங்க. அவசரப் படாதீங்க; வர்றேன்னு சொல்றேன்ல".

அப்போது, வீட்டிற்குள் நுழைந்த கந்தசாமிக்கு 'பகீர்' என்றது.

"தர்மாம்பா... தர்மாம்பா!" சற்றுக் கோபமாகக் கத்திக் கொண்டே உள்ளே நுழைந்தார், கந்தசாமி.

"சும்மா நாலு வீட்டுல ஏறி நின்னு கத்துற மாதிரி கத்தாதீங்க". என்றுசொல்லிக் கொண்டே, அந்த அறைக்கு வந்தாள், தர்மாம்பாள்.

"ஏன் தர்மாம்பா... .இவ்வளவு நேரமும் யார்கிட்ட பேசிக்கிட்டிருந்தே?" என்று கேட்டார். கந்தசாமி.

"உங்ககதிட்டத்தான். ஏன் கேட்குறீங்க?"

"அம்மா... தர்மம்மா..." இடையில் புகுந்தான், பிச்சைக்காரன்.

"என்னங்க... அவனுக்கு எவ்வளவு திமிரு இருந்தா என் பேரைச் சொல்லிக் கூப்பிடுவான். ஏலே... எச்சிக்கலை நாயே.. போடா வெளியே. இன்னொரு தடவ பேசினே... பல்ல ஒடைச்சிடுவேன். போடா... இவ்வளவு பெரிய காலு இருக்கு. கை நல்லாவே இருக்கு. போயி ஒழைச்சுத் தின்னு"

அவளது பேச்சையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாத செவிடன்போல, அங்கேயிருந்து இறங்கினான். அந்தப் பிச்சைக்காரன்.

இடுப்பில் செருகியிருந்த முடிச்சை அவிழ்த்து, இரண்டு ரூபாயை எடுத்து கந்தசாமியின் கையில் திணித்தான், தர்மாம்பாள்.

"தர்மாம்பா.. உண்மையிலேயே இது ரொம்ப அநியாயம் உலகம் போற போக்கை நீ புரிஞ்சிக்க மாட்டேங்குறியே.... நாம் என்ன சம்பளம் வாங்கிட்டு

வந்தாலும் இந்த ரெண்டு ரூபாய்க்கு மேலே போட்டுத் தரமாட்டியா?"

"யோவ்... என்னமோ அங்கங்க கடையில துட்டுக் குடுத்து திங்கிற மாதிரி... போய்யா..." அவள் சொல்ல வில்லை. அவள் பார்வையே இப்படிச் சொன்னது மெதுவாக வெளியேறினார்.

அப்போதுதான், அந்தப் பிச்சைக் காரன் அடுத்த வீட்டில் திட்டு வாங்கிட்டு, வெளியே வந்து கொண்டிருந்தான்.

"எலே... இங்க வாடா... கூப்பிட்டார், கந்தசாமி."

அத்தனை வீட்டு திட்டுக்களையும் மறக்கும் அளவிற்கு, அவர் அள்ளித் தரப்போகிறார் என எண்ணி வேகமாக ஓடி வந்தான்.

"ஏண்டா, உனக்கு வெட்கமா இல்லை? எல்லாருமே திட்டுறாங்களே. காது என்ன செவிடா?" என்று கேட்டார். கந்தசாமி.

"அட நீங்க ஒண்ணு... இதையெல்லாம் பார்த்தா.. சாப்பிட முடியுங்களா?" என்று போய்விட்டான்.

கந்தசாமியும், தனது சைக்கிளில் ஏறியமர்ந்து பயணம் புறப்பட்டார்.

அந்த நாற்சந்தியின் இரண்டு பக்கங்களிலும், பஸ்கள் வரிசையாய் "பாம்... பாம்... கீ... கீ" என்று அலற, ஒரு டிரைவரை இன்னொரு டிரைவர் திட்டிக் கொண்டிருந்தனர்.

எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், எதிரே உள்ள டீக்கடையில் வெளியே வடை சுட்டுக் கொண்டிருந்த வனிடம் சிரித்துப் பேசி, இரண்டு வடைகளை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார், கந்தசாமி.

ஒரு வடையை மென்று கொண்டு, இன்னொரு வடையைக் கையில் வைத்துக்கொண்டே, நாற்சந்திக்கு வந்தார். ரொம்ப நேரமாய் வம்பு செய்துகொண்டிருந்த பஸ் டிரைவர்களைச் சமாதானம் செய்து, பாதையைச் சரி செய்தார்.

"ச்சே... எடுத்த வடையை திங்கவிடமாட்டேங்குறாங்க. பாவிங்க." என்று திட்டிக்கொண்டே, வடையை வாயில் வைத்துக் கடிக்க, எஸ்.ஐ.யின் ஸ்கூட்டர் சத்தம். கந்தசாமிக்கு ஒன்றுமே ஓடவில்லை. மீதி வடையை பைக்குள், போட்டுவிட்டு; பாதியை மென்றும், மெல்லாமலும் விழுங்கினார்.

"யோவ்...! என்னய்யா அது..?" எஸ்.ஐ. கேட்க, தொண்டையில் சிக்கி, உள்ளே போகாமல் நின்றுகொண்டிருந்த வடையோடு தவித்தார். அவரது சட்டையின் வலது மார்புப் பகுதி வேறு 'பொய்' என்று சற்றுப் பெரிதாகி, அவரைக் காட்டிக் கொடுத்தது.

சட்டைப் பையில் கையைவிட்ட எஸ்.ஐ. அந்த வடையை எடுத்து, எறிந்துவிட்டு, 'ஜாக்கிரதை' என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

அவமானம் சற்று முகத்தில் தெரிய, திரும்பிப் பார்த்தார். அந்தப் பாதி வடை, சாக்கடையின் ஓரத்தில் கிடந்தது. அந்த கடைக்காரனைக் கோபமாகப் பார்த்தார். அவ்வளவுதான் கடையைக் காலிபண்ணச் சொல்லிவிடுவாரோ என்று பயந்தான். அந்தக் கடைக்காரன். வேகமாகக் கடைக்கு வந்தார். கந்தசாமி, அவன், மெதுவாக எழுந்தான். ஒன்றும் பேசாமல் மீண்டும் இரண்டு வடைகளை எடுத்துக்கொண்டு, மறுபடியும் அதே இடத்துக்கு வந்துவிட்டார். கந்தசாமி.

"யோவ், கந்தசாமி... மணி ஆச்சே, போய் வசூல் பண்ணிட்டு வாய்யா..." அவரது சக போலீஸ்காரர் ஒருவர் விரட்ட,

"இதோ... கிளம்பிட்டேனே..." என்று நடையைக் கட்டினார்.

கடை என்ற அந்தஸ்தைவிட்டு, 'பிளாட்பாரக் கடை' என்று நடைபாதை யில் போடப்பட்ட கடைகள், அந்த வீதியில் எப்படியும் முப்பது தேறும். கடைக்குப் பதினைந்து ரூபாய். எப்படியும் முன்னூறுக்கு மேல் தேறும். மூன்று போர்களுக்குப் பிரிக்கும்போது எப்படியும் ஆளுக்கு நூறு ரூபாய் உறுதி.

ஓர் ஓரத்தில் இடுப்பில் கூடையை வைத்துக்கொண்டு, பூ விற்றுக் கொண்டிருந்தாள், ஒரு பாட்டி.

"ஏய், கெழவி... உன்னய யாரு இங்கே நிக்கச் சொன்னா். போ கெழவி அந்தப்பக்கம்.. போக்குவரத்து இடைஞ்சலா இருக்குல..." விரட்டினார், கந்தசாமி.

"ஐயா.... கொஞ்சம் தயவு பண்ணுங்கய்யா... இந்தப் பூவு பூராவையும் வித்தாத்தான்யா... எனக்கு இன்னைக்குக் கஞ்சி..." கெஞ்சினாள், பாட்டி.

"ம்ஹும்... தெருவுல போயி வித்துக்கோ... பஜார்ல இதெல்லாம் அனுமதிக்க முடியாது.

அவரைது தொல்லை தாங்க முடியாமல், அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள். பாட்டி.

சற்று தூரம் தள்ளி, சாலையின் வளைவு. பஸ் வந்து திரும்பும் போது, மக்கள் நடக்க முடியாத அளவுக்கு பழக்கடை விரித்துவைக்கப்பட்டிருந்தது.

"சார் கடையைக் கொஞ்சம் உள்ளே தள்ளி வைக்கச் சொல்லுங்க சார்..." என்று ஒருவன் அவரிடம் சொல்ல,

"ஏய்.. எங்களுக்குத் தெரியாதா... போயி உன் வேலையைப் பாருப்பா..."

பை நிறைய பணம் கிடைத்ததும், சந்தோஷமாய் திரும்பிக் கொண்டிருந்தார் கந்தசாமி.

"அம்மா.... பிச்சைக்காரப் பயலுக பாட்டி... நாய் குரைச்சா.... என்ன அர்த்தம்? அதுக்கு எலும்புத்துண்டு வேணும்னு அர்த்தம் ஒரு பத்து ரூபாயைத் தூக்கி எறி. நீ நடுரோட்டுல வேணும்னாலும் கடை போகலாம்" என்று அந்த பூக்காரப் பாட்டியிடம் பக்கத்துக் கரைக்காரன் சொல்ல, கந்தசாமி பார்த்ததும் பார்க்காததுபோல் நகர்ந்தார்.

பாட்டியும் விடவில்லை. வேகமாக, அவரைப் பின் தொடர்ந்தாள். பாட்டி தன்னைத் தேடி வருவதைக் கண்ட கந்தசாமி பாட்டியும் தனக்கப் பங்காளியாகப் போகிறாள் என்று எண்ணிக்கொண்டு நின்றார்.

வேகமாக அவர் அருகே வந்த பாட்டி, "ச்சீ.... ! மானங்கெட்ட பயலே! உன்னய மாதிரி பொழப்பு பொழைக்கிறதுக்கு. நாலு வீட்டில பிச்சையெடுத்துப் பொழைச்சுட்டுப் போகலாம்." என்று சொல்லிவிட்டுத் திரும்பி நடந்தாள், பாட்டி.

தெருவில், பிச்சை எடுத்துக்கொண்டிருந்த பிச்சைக் காரன், அவர் எதிரே வந்து கொண்டிருந்தான். வீடுகளில் காசுக்குப்பதிலாக, திட்டுக்களையே வாங்கி பரிச்சயமாகிப் போன பிச்சைக்காரன்போல், அந்தக் கடைக்காரனும், பாட்டியும் திட்டியதைக் காதில் வாங்கிக்கொள்ளாமல், செவிடன்போல் நடையைக் கட்டினார். கந்தசாமி! □

ஏலக்காயின் மகத்துவங்கள்!

சமையலில் வாசனைக்காக சேர்க்கப்படும் ஏலக்காய் அசைவ உணவுகளுக்கு கூடுதல் சுவை சேர்க்கக்கூடியது. இந்த ஏலக்காயில் அரிய மருத்துவ குணங்கள் நிரம்பி உள்ளன. அவை....

- குழந்தைகளுக்கு வாந்தி ஏற்பட்டால் இரண்டு ஏலக்காய்களை பொடியாக்கி, அந்தப் பொடியை தேனில் குழைத்து குழந்தையின் நாக்கில் மூன்று வேளை தடவினாலே போதும். வாந்தி உடனே நின்று விடும்.
- ஜலதோசத்தால் பாதிக்கப்பட்டு மூக்கடைப்பில் அவதிப்படும் குழந்தைகளுக்கும் ஏலக்காய் தகுந்த நிவாரணம் தருகிறது. நான்கைந்து ஏலக்காய்களை நெருப்பில் போட்டு, அந்தப் புகையை குழந்தைகள் சுவாசித்தாலே மூக்கடைப்பு உடனே திறந்து கொள்ளும். □

அகத்திக்கீரை – மருத்துவப் பயன்கள்!

தாவரங்களில் கீரை வகைகள் என்பது மிகுந்த சத்தான ஒன்றாகும். இவைகளில் பல சத்துக்களையும் வைட்டமின்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது அகத்திக்கீரை. இது சுவையானது. தமிழ்நாடு மற்றும் இந்தியா முழுவதும் பயிரிடப்படுகிறது. வீட்டுத் தோட்டங்களிலும், வெற்றிலைக் கொடிக்காலிலும் பற்றுத்தாவரமாகவும் இது பயிரிடப்படுகிறது.

தோற்றம்:

அகத்திக்கீரையின் தாயகம் மலேசியா ஆகும். இது 10 மீட்டர் உயரம் வரை வளரும். மென்மையான கட்டை வகையாகும். அகத்தியில் பல வகைகள் உள்ளன. சிவப்பு மற்றும் வெள்ளை நிறப்பூக்களைக் கொண்டது. இலைகள் இரட்டை சிறகமைப்பு கொண்ட கூட்டிலைகளாகும். வெள்ளைப் பூக்களைக் கொண்டது அகத்தி எனவும், சிவந்த பூவைக் கொண்டது செவ்வகத்தி எனவும் அழைக்கப்படும்.

அடங்கியுள்ள பொருட்கள்:

ஈரப்பதம் - 73 சதம், புரதச்சத்து – 83 சதம், தாதுஉப்புக்கள் - 3.1 சதம், நார்ச்சத்து – 2.2 சதம், மாவுச்சத்து – 12 சதம், கொழுப்புச்சத்து – 1.4 சதம் என்ற அளவில் சத்துக்கள் உள்ளன. தாதுஉப்புக்களில் சுண்ணாம்புச்சத்து, பாஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம் போன்றவை உள்ளன. வைட்டமின் - ஏ, தயாமின், நிபோபிளேவின், நிக்கோடினிக் அமிலம், வைட்டமின்-சி, போன்றவை அடங்கியுள்ளன.

மேலும் மரப்பட்டையில் டானின், பிசின் உள்ளது.

குணங்கள்:

இதற்கு நச்சை நீக்கும் குணமுள்ளதாகையால், பொதுவாக மருந்துண்ணும் காலங்களில் இதைத் தவிர்க்க அறிவுறுத்தப்படுகிறது.

எப்படிப் பயன்படுத்தலாம்?

இலையை கீரையாக நறுக்கி வதக்கி உண்ணலாம், குழம்பிலிட்டு பயன்படுத்தலாம். பூக்களையும் வறுத்து உண்ணலாம், பூக்களை கஷாயமாக்கி அருந்தலாம். இலைச் சாறை தேனில் கலந்து அருந்தலாம்.

மருத்துவப் பயன்கள்

பூவைச் சமைத்து உண்டுவர மலச்சிக்கல் மாறும்

அகத்தி இலைச்சாறை வெறும் வயிற்றில் ஒரு கரண்டி வீதம் அருந்த, ஒரு மாதத்தில் இருமல், இரைப்பு மாறும்.

இலைச்சாறை உறிய, தலைநீர் இறங்கும்.

அகத்தி இலைகளைப் பிழிந்து சாறு எடுத்து, ஒரு ஸ்பூன் சாறோடு, இதே அளவு தேன் கலந்து அருந்த, வயிற்றுவலி தீரும்.

இலைகளை அரைத்து அடிபட்ட புண்கள் மேல் கட்டிவர புண் ஆறும்.

அகத்திக்கீரை பொடியை நீர் அல்லது பாலில் கலந்து குடித்துவர, நாள்பட்ட வயிற்றுவலி மாறும்.

அகத்திக்கீரை பால்சுரப்பைக் கூட்டும்.

இக்கீரை உணவில் சேர்த்து வர, மலச்சிக்கல் தீரும்.

பூக்களைப் பிழிந்து சாறு எடுத்து நெற்றிப் பொட்டில் பூசிட, தலைவலி மாறும்.

அகத்திப்பூ சாறு ஒரு கரண்டி எடுத்து, இதோடு ஒரு கரண்டி தேன் கலந்து சாப்பிட இருமல், சளி தீரும்.

அகத்திக்கீரை சாறு இரு துளி மூக்கில் விட தும்மல், ஜலதோஷம் தீரும்.

அகத்திப்பூ சாறு இரு துளி மூக்கில் விட தலைநீர், ஜலதோஷம் தீரும்.

அகத்தி மரப்பட்டை கஷாயம், காய்ச்சலின்போது உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது.

வேர்ப்பட்டையை அரைத்து வாதவலி மேல் பூசிவர வலி மாறும்.

அகத்திக்கீரை உடலிலுள்ள துர்நீரை வெளியேற்றும்.

இக்கீரை பித்த நோயை நீக்கும்.

இக்கீரை, உடல் சூட்டைத் தணிக்கும். □

Resolution for Christ: Meditate on the Word of God

Written by: Priscilla Kulendran

As we enter a new year, there are so many plans to make. God has helped us to complete the year 2011 and have entered in 2012. So what are your resolutions? You may thinking "I need to have a strict diet now that Christmas is over ... or I need to be involved in my community more and more » not to say that these things are wrong to do but as God's children, as his chosen people, we need to plan out what we will do for God. What are you going to do for Christ in 2012? It is good to have your resolutions sorted out, but what are your resolutions for Christ this year? This month we will focus on how important it is to meditate on the Word of God.

As children of God, it is important to have the Word in our hearts. This can only be done by meditating on the Word on a daily basis. It is important for each one of us to always dwell in the Word of God. Psalm 119:105 says "Your word is a lamp to my feet and light for my path." Psalm 119:97 says "Oh how I love your law! I meditate on it all day long." Meditating on scripture helps us grow in Him, and ask God to help you remember them and apply them in your life. Joshua 1:8 says "Do not let this book of the Law depart from your mouth; meditate on it day and night, so that you may be careful to do everything written in it. Then you will be prosperous and successful."

Meditating on the Word helps us to always do obey God. Proverbs 21:3 says "To do what is right and just is more to the Lord than sacrifice." As you continuously meditate on scripture, you will be encouraged to choose to do right in all circumstances.

Meditating on the Word helps us stay away from sin. Psalm 119:33 says "Direct my footsteps according to your word; let not sin rule over me. » Ask God to direct you in his footsteps so that you will not fall into the evil traps. Today it is easy for us to fall in the traps of the evil one, especially for young people. In different ways, young people are being attacked by the evil one. Psalm 119:37 says "Turn my eyes away from worthless things; preserve my life according to your word. » In order for us to stay away from these worthless things, we need God's Word in us. 2 Tim. 2:22 says " Flee the evil desires of youth, and pursue righteousness, faith, love and peace, along with those who call on the Lord out of a pure heart." Therefore it is important for each of us to always mediate on scripture so that our thoughts will be filled with godly thoughts and not sinful thoughts. Philippians 4 :8 says " Finally brothers, whatever is true, whatever is noble, whatever is right , whatever is pure, whatever is lovely, whatever is admirable-if anything is excellent or praiseworthy—think about such things." Today, it is hard for us young people, to think on the good things because of all the distractions in our corrupted society. However we are children of God who need to cling on the Word of God as a weapon. So cling on the Word of God throughout the New Year, and continue to meditate on the scripture.

Meditating on the Word helps us to always walk in the Light. As children of God, we may across many difficult situations and dark valleys. But the Word has promised us that God will lead us through and be with us in every step. To walk in the Light may not be easy because of our past, but Christ came to this world to forgive us of our past so that we can look forward. To walk in the Light, it means that we need to walk with freedom and joy in the Lord. And we can only receive the Joy of the Lord by obey God in every circumstance, follow His pathways, meditate on scripture throughout the New Year. □

Tutoring

Math, English, French, Tamil

905 - 209 - 7736

Bankruptsy

ராம்: அண்ணை உங்களோட கொஞ்சம் கதைக்கவேணும்.... ஆவசரமா போறியளோ?

அவசரம் ஒண்ணும் இல்ல... மனிசி போன அலுவல் முடிய உடனடியா காய் கறி வாங்கிக் கொண்டுவரச் சொன்னவ அதுதான்... பறவாயில்ல சொல்லும்...

ராம்: என்னண்டு சொல்லிறது.... பேரிய பிரச்சனயில மாட்டீட்டன்... போன வருசம் Business ஒண்டு தொடங்கினனான் உங்களுக்கு தெரியும் தானே....

செல்வன்: ஓம்...ஓம்

ராம்: அது ......சரிவரேல்ல ... அது தான் என்ன செய்யிறதெண்டு தெரியேல... நட்டத்தில் போய்ட்டுது... கடனும் எக்கச்சக்கமா Bank இல இருந்து எடுத்திட்டன்....எல்லாம் தலைக்கு மேல போய்டடுது....

செல்வன்: ம்.... அப்ப இப்ப எல்லாம் விட்டாச்சே...

ராம்: ஓமண்ணை bank காரன் collection agency ட்ட சொல்லிப் போட்டான்... அவன் ஒரே அடிச்சபடி...

செல்வன்: ஆனா... இவன் George ஐ பிடிச்செல்ல எல்லாம் செய்தனி... கொஞ்சம் கதைச்சுப் பாக்கிறது தானே... தள்ளிப் போடச் சொல்லி...

ராம்: George இப்ப அந்த Bank இல இல்லை அண்ணை... அவன் இப்ப Bank "R" Us க்கு போட்டான்...

செல்வன்: அட சீ... என்ன செய்யலாம்

ராம்: அது தான் உங்களிட்ட கேக்கோணும் எண்டிருந்தநான்...

செல்வன்: என்ன செய்யலாமடாப்பா?

ராம்: bancruptcy அடிச்சா பிரச்சனை எல்லாம் பறந்திடும் அண்ணை... ஒருத்தரும் என்னட்ட காசு கேக்கேலாது என்ன!

செல்வன்: அது ... அவ்வளவு சரியில்லயடாப்பா

ராம்: ஏணண்ணை உங்க டொரறண்டோவில bankruptcy அடியாதவன் எவன் அண்ணை? ஒருத்தனும் இல்லை..... என்னத் தவிர... அட எல்லாருந் தானே அடிக்கிறாங்கள்....

செல்வன்: அப்ப... என்ன சொல்ல வாறு? ....சரி தம்பி இந்த நாட்டுக்கு வந்தனாங்க ... எங்களுக்கு கைகொடுத்து உதவி செய்த நாடு.. அதுக்காவது இந்த நாட்டில ஒரு ஒழுங்கான citizen ஆ இருந்திட்டு போகோணுமடாப்பா... அவன் இவண்ட கதையக்கேக்காம நல்ல citizen ஆ இருக்கோணும் System எண்டிருக்கு அதை exploit பண்ணக் கூடாதடாப்பா. கடன் வாங்கின காசு.... அத இன்னொருத்தன் கட்டவேண்டுமெண்டு யோசிக்கிறது.

ராம்: ஏணண்ணை Bible அப்பிடி இப்பிடி ஏதாவது சொல்லுதெ... இல்லத்தானே. Bible ல்ல ஒரு இடத்திலயும் சொல்லேல.

செல்வன்: bancruptcy அடிச்சா பறவால்லையெண்டோ

ராம்: இல்லை Bible ல....

செல்வன்: டேய்... மற்றவன் அடிக்கிறான் எண்டதுக்கா வேண்டி நாங்க செய்யக் கூடாது சரியோ ... சரி உனக்குச் சரியெண்டடு பட்டிருந்தா செய்திருக்கலாமே ...ஏன் என்னட்ட வந்த கேட்டனி

ராம்: இல்லை கஷ்டப்படேக்க கடவுள் ஏதோ ஒரு வழியக் காட்டுவார்... எந்த வழியெண்டாலும் ஒரு வழியில உதவி செய்திடுவார்.... அப்பிடித் தானே அண்ணை எண்டாலும் மனதுக்குள்ள ஒரு மாதிரி ... அது தான் அண்ணை உங்களிட்டையும்...

செல்வன்: நான் நீ ஒரு Christian எண்டபடியா தான் சொல்லிறன்... மற்றவை அடிக்கலாம் அடிக்காம விடலாம் அதைப் பற்றி எங்களுக்கு கவலையில்ல... சரியோ? Bible ல bankruptcy அடிக்கக்கூடாது எண்டோ வாங்கின கடன் கட்டாயம் திருப்பிக் குடுக்கோணுமோ எண்டு ஒரு இடமும் சொல்லேல

ராம்: அப்ப பிறகென்னண்ணை?

செல்வன்: உனக்குத்தான் தெரியும் இந்த நிலை உண்ர பிழையால வந்ததோ அல்லது வேறயாற்றயும் பிழையால வந்ததோ எண்டு. நான்.... உன்னை judge பண்ணேல சில விஷயங்களை neglect பண்ணினதாலும் பிழையான முடிவுகள் எடுத்ததாலும் தான் இந்த நிலையில இருக்கிறை எண்டா... அது உனக்குத்தான் தெரியும்.

ராம்: விளங்கிது

செல்வன்: இந்த நாட்டில கடன் வாங்கிறது ஒரு சாதாரணமான செயல்... எல்லாரும் கட்டத்தொடங்கி கொஞ்சம் கொஞ்சமா கட்டிக் கொண்டிருப்பினம்? அனேகமா இருந்து ஆற யோசிச்சு... குடும்பமா இதை எங்களால கட்டலாமா... எண்டு யோசிச்சுத்தாண்டா

ராம்: முடிவெடுக்கிறது.

செல்வன்: ஓம்... ஓம்... நான் உன்னட்ட ஒண்டு கேக்கிறன். இதை உனக்குள்ள கேட்டு அதுக்குரிய விடைகளை நீயே கண்டுபிடி ok? கடவுளுக்கு முன்னால உண்மையா இரு, நான் உன்னையும் judge பண்ணேல சரியோ? வேறோருத்தரையும் judge பண்ணேல

ராம்: சரி கேளுங்கோ

செல்வன்: நான் என்னண்டு இந்தளவுக்கு கடனாளியாப் போனேன்? இது தான் கேள்வி ...சரியோ? கடவுளே! இந்த நிலைக்குள்ளால இருந்து வெளியில வர நான் என்ன செய்யோணும்? என்னுடைய அடுத்த படி என்ன? சொல்லும் ...எண்டு கேள். இத விட்டிட்டு உன்ர வழியில செய்தியோ ஒரு வேளை இதே நிலையில இருந்து கொண்டே இருக்க வேண்டியிருக்கும்.

ராம்: சரி தான்... ஆனா Bible இதப்பற்றி ஏதாவது...

செல்வன்: ஓமடா... இன்னுமொண்டு நான் சொல்லித்தான் ஆகோணும் நான் நீ கேட்டபடியா சொல்லிறன் இது ஒரு கேக்கக் கஷ்டமான வசனம்... சரியோ?

ராம்: எனி என்னண்ணை பனையால விழுந்தவன மாடேறி உழக்கி ஒண்டும் நடக்கப் போறேல சொல்லுங்கோ?

செல்வன்: இது தான்... எனக்கு தெரிஞ்ச மட்டில பible நேரடியாச் சொல்லுது கொஞ்சம் அடிச்ச மாதிரித்தான் சொல்லுது.... "The Wicked borrow and do not repay" சங்கீதம் 37:21ய் தமிழில சொன்னா "துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்"

ராம்: கொஞ்சம் அடிச்சுச் சொன்னமாதிரித்தான் இருக்கண்ணை

செல்வன்: ...உனக்கு உண்மையா இரு... அதே போல கடவுளுக்கு உண்மையா இரு ....ஒரு பொறுப்புள்ளவனிண்ட குணம் என்னவெண்டா ...எவ்வளவு தொகையா இருந்தாலும் கட்ட வேண்டியது அவன் பொறுப்பு. நான் கட்டவேண்டிய பணத்தை இன்னொருவன் கொடுக்கட்டும் எண்டு நினைக்கிறது ...எனக்கண்டா சரிபோல தெரியேல ...இனி உன்ட இஷ்டம் ... உண்மையுள்ளவனா நடந்தா கடவுள் அதைச் செய்ய உதவி செய்வார். Don't worry அப்ப தான் உதுக்கை இருந்து வெளியில வரலாம் சரியோ ... நீ ஒண்டு ரண்டு Councseling க்கு போகச் சரியா வரும். நான் பிறகடிக்கிறன்.

ராம்: Sorry அண்ணை உங்கட நேரத்தையும் எடுத்துப் போட்டன்.

செல்வன்: ஓமடாப்பா... வீட்ட போக மனிசி காய் கறியால தரப்போறா... நான் வாறன்.

(இதில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் எழுதியவரின் கற்பனையே)

Humor

Dear God, My prayer for 2012 is for a fat bank account & a slim body. Please don't allow anyone to mix these up like they did this year.

AMEN!

- Senan - Louis

வாழைக்காய் பொரியல்

தேவையானவை

வாழைக்காய்-1
சாம்பார்பொடி-2 டீஸ்பூன்
உப்பு-தேவையான அளவு
காயம்-சிறிதளவு
எண்ணெய்- 2 டீஸ்பூன்
கடுகு- 1 டீஸ்பூன்
கடலைப்பருப்பு- 2 டீஸ்பூன்
வெள்ளை உளுத்தம்பருப்பு- 2 டீஸ்பூன்
சீரகம்- 1/2 டீஸ்பூன்
கறிவேப்பிலை- 1 இணுக்கு

செய்முறை:

1. வாழைக்காயை நன்றாக அலம்பி, தோலைச் சீவி தனியே வைத்துக் கொள்ளவும்.

2. பிடித்த வடிவத்தில் வாழைக்காயை த் துண்டுகளாக்கிக் கொள்ளவும்.

3. அடுப்பில் எண்ணெயிட்டு கடுகு, கடலைப்பருப்பு, வெள்ளை உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளிசம் செய்து கொண்டு கடுகு வெடித்தவுடன் சீரகத்தைப் போட்டு வதக்கி விடவும்.

4. வாழைக்காய் துண்டுகளை தாளித்தவற்றுடன் போட்டு உப்பு போட்டு 1/4 டம்ளர் நீரிட்டு மூடி வைத்து வேக விடவும். ஆவ்வப்போது கிளறி விடவும்.

5. பாதி வெந்ததும் சாம்பார்பொடி, காயம் சேர்த்து திறந்து வைத்துக் கிளறி வரவும் அடிப்பிடிக்காமல் இருக்க எண்ணெய் இட்டு வரவும்.

6. வறுவலாகத் தயாரானதும் அடுப்பை அணைத்து விட்டு பொரியலை வேறு பாத்திரத்திற்கு மாற்றிப் பிரிமாறவும்.



கூடுதல் டிப்ஸ

1. சாதா நீரில் வேக வைப்பதை விட புளித்தண்ணீரைக் கரைத்து அதை விட்டு வேக வைத்து பொரியல் செய்தால் புளிப்பு வாழைக்காய் வறுவலாக ருசி அருமையாக இருக்கும். புளி நீரில் வேகவைத்தால் பொரியல் ஆக கூடுதல் நேரம் பிடிக்கும்.

2. உடல் எடை கூட விரும்புவோர் வாழைக்காயை உணவில் சேர்த்து வந்தால் எடை கூடும்.

வாழைக்காய் தோலைப் பத்திரப்படுத்தி அதிலும் பொரியல் செய்து அசத்தலாம்.

Basement For Rent

1 Bed room basement Apt for Rent

Warden & Lawrence

647 - 856 - 9868

மோட்ச பயணம் - தொடர்ச்சி

குறுகிய வாசல் கோட்டையை அடைதல்

கதவு திறந்தவுடன் கிறிஸ்தியான் மெதுவாக உள்ளே காலடி எடுத்து வைத்தான். ஆனால் அதற்குள் தயாளன் அவன் கையைப் பிடித்து உள்ளே இழுத்து, கதவைச் சாத்திவிட்டார்.

"ஏனய்யா, இப்படி இழுக்கிறீர்கள்?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"அதுவா? சொல்கிறேன் கேள். இந்தக் கோட்டைக்குச் சற்றுத் தொலைவில் ஒரு பலத்த கோட்டை கட்டப்பட்டிருக்கிறது. பெயல்செபூல் என்பவன் அதற்குத் தலைவனாக இருக்கிறான். அவனும் அவனுடைய வீரர்களும் இந்த வாசலண்டை வருகிறவர்கள் உள்ளே நுழையுமுன் அம்பெய்து அவர்களைக் கொன்று விடுகிறார்கள். அதனால்தான் அப்படி அவசரமாக உன்னை இழுத்தேன்" என்று விளக்கினார் தயாளன்.

"அப்படியா? என்னுடைய கவலையின் மத்தியிலும் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்றான் கிறிஸ்தியான்.

"அதுசரி, இங்கே வரும்படி உனக்கு வழிகாட்டியது யார்?" என்று கேட்டார் தயாளன்.

"நற்செய்தியாளர் என்ற நல்ல மனிதர்தான் எனக்கு இந்த வழியைக் காண்பித்து, இந்த வாசலண்டை வந்து கதவைத் தட்டச் சொன்னார். இங்கே நான் அடுத்துச் செய்ய வேண்டியது என்னவென்றும் கூறப்படும் என்றும் கூறினார்" என்றான் கிறிஸ்தியான்.

"நீ இனி கவலைப்பட வேண்டியதில்லை, அப்பா, இதோ உனக்குமுன் ஒரு விரிவான வாசல் திறக்கப்பட்டிருக்கிறது. அதை யாரும் பூட்டிவிட முடியாது" என்று அவனை ஆறுதல் படுத்தினார் தயாளன்.

"என் துன்பமெல்லாம் இன்பமாக மாறும் நாள் நெருங்கி விட்டது என்று நினைக்கிறேன்" என்று பெருமூச்சு விட்டான் கிறிஸ்தியான்.

"நீ ஏன் தனியாக வந்தாய்" என்று கேட்டான் தயாளன்.

"எனக்கு அழிவு நிச்சயம் என்பதை முதலில் நான் உணர்ந்து கொண்டேன், ஐயா. ஆனால் என்னுடைய ஊரார் ஒருவருமே அதை நம்பவில்லை. அதனால்தான் நான் மட்டும் தனியே புறப்பட வேண்டியதாயிற்று" என்றான் கிறிஸ்தியான்.

"நீ புறப்பட்டதாவது அவர்களுக்குத் தெரியுமா?"

"தெரியும், ஐயா என் மனைவியும் பிள்ளைகளும் என்னைத் திரும்பி வரும்படி கூப்பிட்டார்கள். மற்றும் சில அயலாரும் கூவி அழைத்தார்கள். ஆனால் நானோ காதைப் பொத்திக் கொண்டு ஓடி வந்துவிட்டேன்."

"ஒருவரும் உன்னைப் பின் தொடர்ந்து, திரும்பும்படி வற்புறுத்த வில்லையா?"

"வந்தார்கள் ஐயா, எங்கள் ஊரைச்சேர்ந்த பிடிவாதக்காரன், விட்டுக் கொடுப்பவன் என்ற இரு இளைஞர்களும் ஓடி வந்தார்கள். என்னைப் பின்வாங்கச் செய்யும்படி எவ்வளவோ முயற்சி செய்தார்கள். நான் திரும்பி வரப்போவதில்லை என்று கண்டவுடன் பிடிவாதக்காரன் விருப்பம்போல் திட்டிவிட்டுத் திரும்பிச் சென்று விட்டான். விட்டுக்கொடுப்பவன் மட்டும் என்னுடன் வந்தான்." என்றான் கிறிஸ்தியான்.

"அப்படியானால் அவனை எங்கே காணோம்?" என்று கேட்டார் தயாளன்.

"நாங்கள் இருவருமாகச் சேர்ந்து நம்பிக்கையிழப்பு என்ற குட்டைவரை வந்தோம், ஐயா. ஆனால் கவனக் குறைவினால் சேற்றினுள் விழுந்து விட்டோம். அதனால் கோபமடைந்த விட்டுக் கொடுப்பவன் "நான் இனி வரவில்லை. நீயே போய் என் பங்கையும் சேர்த்து அனுபவித்துக்கொள்' என்று கத்திவிட்டு ஊருக்குத் திரும்பிவிட்டான். நான் மட்டும் இதோ வந்து சேர்ந்திருக்கிறேன்" என்றான் கிறிஸ்தியான்.

"அடடா, விட்டுக்கொடுப்பவன் மேலோக இன்பங்களைப் பற்றி இழிவாக நினைத்துவிட்டானே! அதற்காகச் சிறுசிறு துன்பங்களைக்கூடச் சகிக்க முடியாதா? என்று அங்கலாய்த்தார் தயாளன்.

"அவனாவது மனதில் உள்ளதை அப்படியே கூறினானே! நானோ உலகஞானி என்பவனின் பேச்சைக் கேட்டு என் பாதையைவிட்டு விலகிவிட்டேனே" என்று குறைவுபட்டுக் கொண்டான் கிறிஸ்தியான்.

"அப்படியா? அவன் உன்னையும் கெடுக்க முயற்சி செய்தானோ? நியாயப்பிரமாணிகன் என்பவரிடம் போனால் உன் பாரம் நீங்கிவிடும் என்று கூறியிருப்பானே! நீ அவன் பேச்சைக் கேட்டாயா? இருவருமே சரியான ஏமாற்றுப் பேர்வழிகளாயிற்றே" என்றான் தயாளன்.

"ஆமாம் ஐயா, நானும் கூட அவன் பேச்சைக் கேட்டு நியாயப் பிரமாணிகனின் வீட்டுக்குப் போகப் புறப்பட்டு விட்டேன். ஆனால் வழியில் மலையடிவாரத்தை நெருங்கியபோது மலையே என் மேல் விழுந்துவிடும் போலத் தோன்றியது. பயந்து நின்றுவிட்டேன்" என்றான் கிறிஸ்தியான்.

"அம்மலை அநேகரைக் கொன்றிருக்கிறது. நீ தப்பி வந்ததே பெரிய காரியம்" என்றார் தயாளன்.

"மலையைப் பார்த்து நடுங்கிக் கொண்டிருக்கும்போது நல்லவேளையாக நற்செய்தியாளர் அங்கு வந்தார். அவர் வந்தது கடவுளின் கிருபை என்றே நினைக்கிறேன். மலைக்குத் தப்பி இங்கே வந்து உங்களிடம் பேச தயவளித்த ஆண்டவருக்கு எப்படி நன்றி கூறுவது?" என்று உணர்ச்சிவசப்பட்டான் கிறிஸ்தியான்.

"இங்கே வருபவர்கள் முன்பு எப்படியிருந்தாலும் எவ்வளவு பாவிகளாயிருந்தாலும் அதனால் நாங்கள் அவர்கள் இங்கே வருவதைத் தடை செய்வதில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் தள்ளிவிடப்பட மாட்டார்கள் (யோவான் 6:37) கிறிஸ்தியானே நீ என்னோடே கூட வந்தால் நீ செல்ல வேண்டிய வழியை உனக்குக் காண்பிப்பேன். அதோ முன்னால் தெரிகிறதே இடுக்கமான வழி, அந்த வழியாகத்தான் நீ செல்ல வேண்டும். நமது முன்னோர்கள், தீர்க்கதரிசிகள், இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் அனைவரும் இந்தப் பாதையின் வழியேதான் நடந்து போயிருக்கிறார்கள். இந்த நேரான வழியில்தான் நீ நடந்து செல்ல வேண்டும்" என்றார் தயாளன்.

"புதிதாக இந்த வழியே செல்பவர்கள் வழிதவறிப் போகும் வகையில் ஏதேனும் பாதை பிரிந்து செல்லுகிறதா?" என்று கேட்டான் கிறிஸ்தியான்.

"இடப்புறமும், வலப்புறமும் அநேக கிளைப்பாதைகள் பிரிந்து செல்லும். ஆனால் அவை அகலமாகவும், வளைந்து வளைந்தும் காணப்படுவதால் எளிதில் இனம் கண்டு கொள்ளலாம். இடுக்கமான, நேரான வழியில் நீ தொடர்ந்து சென்றால் போதுமானது" என்று விளக்கினார் தயாளன்.

அப்போது கிறிஸ்தியான் அவரை நோக்கி, "ஐயா, என் முதுகிலிருக்கும் இந்தச் சுமை நீங்கும்படி செய்ய மாட்டீரா?" என்று கெஞ்சிக் கேட்பதை நான் என் கனவில் கண்டேன்.

அவன் இன்னும் அந்தச் சுமையுடன் தான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். தானே அதை எறிந்துபோடவும் அவனால் முடியவில்லை!

"உன் முதுகுச் சுமையை என்னால் இறக்கிவிட முடியாது அப்பா. நீ ஓரிடத்தை அடைந்தவுடன் அந்தச் சுமை தானாகவே விழுந்துவிடும். அதுவரை நீ பொறுமையோடு இதைத் தூக்கிக் கொண்டு செல்லவேண்டியது தான்" என்று கூறிவிட்டார். தயாளன்.

அப்போது கிறிஸ்தியான் மீண்டும் பயணம் புறப்பட ஆயத்தமாவதை நான் என் கனவில் கண்டேன்.

"கிறிஸ்தியானே, நீ இன்னும் சிறிது தூரம் சென்றால் விளக்கம் கூறுபவர் என்ற ஞானியின் மாளிகையை அடைவாய், அங்கே சென்றவுடன் வாசல் கதவைத் தட்டு, அவர் உனக்கு அநேக மேலானவைகளைக் காட்டுவார்" என்று கூறி அவனை ஆசீர்வதித்து வழியனுப்பி வைத்தார். □

Basement For Rent

2 Bed room basement Apt for Rent

Lawrence & Golf Club

416 - 289 - 3641

For Sale

Lawrence & Mossbank

Bed room set 5 pieces
Wall unit 2 pieces
T.V
Dining table with 6 chairs
Walkers
Folding tables
New Fridge

416 - 289 - 3641

தமிழ் சீயோன் தேவாலயம்
Tamil Zion Church of God

தேவன்
நல்லவர் என்பதை
ருசித்துப்பாருங்கள்

ஆறுதலின் செய்தி அன்பின் பாடல்கள்

ஆராதனை விபரங்கள்

ஞாயிறு - **Sunday :**
Service 10:00 am துதி ஆராதனை
புதன் - **Wednesday :**
உபவாச ஜெபம் **Fasting & Prayer 10:30 am**
வெள்ளி - **Friday :**
விடுதலை ஆராதனை **7:30 pm**
சனி - **Saturday :**
உபவாச ஜெபம் **Fasting & Prayer 10:30 am**

நல்ல மேய்ப்பனின்
24 மணி நேர தொலைபேசி இலக்கம்
(450) 665 – 9020

கர்த்தரை தேடுவோர்க்கு
ஒரு நன்மையும் குறைவுபடாது (சங்கீதம் 34:10)

பாஸ்ரர். காலேப் குலநாதன் : 514-948-5254

Youth fellowship & kid's fellowship are held by the
Z.Y.G once a month
for more info e-mail us at zyg_3@hotmail.com
email: caleb@tamilzionchurchofgod.com

7383 Boul. St Laurant suite 102 Montreal, Quebec (Canada) H2R-1W7
www.tamilzionchurchofgod.com

கேட்கத்
தவறாதீர்கள்
இலங்கையில்
இருந்து
நேரடியாக
கிறிஸ்தவ
நிகழ்ச்சி

www.amenfm.com

416-628-5007
or
416-400-3066

KIRUBAIFM.COM

24 மணி நேரமும் இணையத்தளத்தில்

கிருபைFM.COM

கலகலப்பான மனம் கவரும்
கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் - பாடல்கள்
கலந்துரையாடல்கள்

நேரடியாக நீங்களும் கலந்து
கொள்ளலாம்

KIRUBAIFM.COM

Basement For Rent

1 Bedroom Basment Apt வாடகைக்குண்டு.

Neilson & Finch

416-299-5566

Life Changing Revival Church
Jesus is the way to victory

Life Changing Revival Church

Faith makes all things possible,
Hope makes all things work,
Love makes all things beautiful,
May you have all the three for this Christmas.

MERRY CHRISTMAS & HAPPY NEW YEAR!

Sunday Service : 10:30 am
Bible Study : Friday 7:30 pm
Cell Meetings : Monday 7:30 pm
Thursday 7:30 pm

Pastor. Winston Sutharsan - 647/500 2001

Address: 2330, Midland Avenue, Toronto, On, M1S 5G5
Intersection: Midland/Sheppard
(The entrance is at the backside of the building)

IMMIGRATION REFUGEE CLAIMS

BARRISTERS AND SOLICITORS

G.S.WISEMAN B.A. L.L.B
&
ASSOCIATES

MAX BERGER B.F.A. L.L.B
&
ASSOCIATES

IMMIGRATION :
குடிவரவு தொடர்கான விடயங்கள் ஆலோசனைகள்

ALL REFUGEE CLAIMS :
அகதிநிலை விண்ணப்பங்களை நுட்பமாக தயாரித்து சமர்ப்பித்தல். கனடிய எல்லையில் அல்லது விமான நிலையத்தில் அகதிநிலை கோருதல்

APPEALS :
அகதிநிலை மேன்முறையீடுகள்

SPONSORSHIP :
உறவினர்களை பொறுப்பேற்றல்.

தொடர்பு கொள்க :
T. இராமலிங்கம் (RAM)
(905) 294-0623 CELL : (416) 917-3186

TMS *Financial Group*

Income Tax & Accounting

Tax Time

Personal Tax
Corportate Tax
Small Business Tax
Bookkeeping & payroll services

நீங்கள் வரியாக கட்டிய
உங்கள் பணத்தினை
மீளப்பெற்றுக் கொடுப்பதே
எங்கள் நோக்கம்

Tel: 416-298-9322

Sothy Selvi (Theva)
Mortgage Specialist

ஜீவாதிபதி

கிறிஸ்தவ தேவாலயம்

..உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால்,நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர். ஏசாயா 26:3

வாரந்தோறும்

சனி மாலை 4:30 ஆராதனையும், வேதாகம பாடம்.
ஞாயிறு காலை 9:30 ஓய்வுநாள் பாடசாலையும்,
பெரியோருக்கான வேதாகம பாடம்,
10:30 நன்றி துதி ஆராதனையும் நடைபெறும்.

உங்கள் அனைவரையும் இவ் ஆராதனைகளில் கலந்து கொள்ளும்படி அன்போடு அழைக்கின்றோம்.

உங்கள் ஜெபத்தேவைகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும்
பாஸ்ரர் ஜெயறாஜ் (ஜெயா) 514-898-1342
E-mail: princeoflifechurch@hotmail.com

PRINCE OF LIFE CHRISTIAN CHURCH

7895 St. Laurent Boul,
Montreal,
Metro: De Castelnau

St.Laurent Boul
7895
Jean Talon
Gounod
Jarry

RITHI TRAVELS

TORONTO - MONTREAL - TORONTO Bus Services

உங்கள் இல்லத்து வாசல் முதல் சென்று அடையும் வாசல் வரை DVDயுடன் இனிதான இளைப்பாறிய பயணம்.

Ontario Highway Transport Board
கனடிய அரசின் அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்

We Provide all Kind of Charter Services. Any time any where

we also offer special deliveries and other personalized Services

Toronto
(416) 887 3350

தொடர்புகளுக்கு
Services Now Available
7 days a week

Montreal
(514) 802 3350

சிறுபிள்ளைத்தனம்

தனியார் கம்பெனியில் கிளார்க் வேலை பார்த்துக் கொண்டிருந்தான். குருபரன், நல்ல சம்பளம், அவனுக்குப் பின் ஒரே தம்பி. புடித்துவிட்டு தற்போது தான் வேலைக்கு போயிருந்தான். ரிடையர்டான அப்பா வரதராசன், வாசலில் ஒரு பெட்டிக்கடை வைத்து ஏதோ சம்பாதித்துக் கொண்டிருந்தார். அம்மா தமிழரசி சமையல் செய்து போடக்கூட முடியாத நிலையில்தான், மருமகளாய் பூர்ணிமாவைக் கொண்டு வந்தாள்.

பூர்ணிமாவுக்கு இரண்டு மாதத்திற்கு முன்புதான் குழந்தை பிறந்தது. எப்போதும் சம்பளம் வாங்கிய முதல் தேதியன்று, அப்படியே அதை அம்மாவிடம் கொடுத்து விடும் குருபரன், அன்று மூன்று நாட்கள் கடந்தபோதிலும் அதைப்பற்றி ஒன்றுமே பேசாமல் இருந்தான். ஆனால்.... தமிரசியும் அதுபற்றி அவனிடம் எதுவும் கேட்கவில்லை.

திசைமாறிப் பறக்கும் மாற்றுச் சிறகு குருபரனுக்கு முளைத்து விட்டதை எண்ணி, மனதில் ஏதோ ஒரு மூலையில் சின்னக் கவலையோடு உட்கார்ந்திருந்தாள் தமிழரசி.

அன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் ஓய்வாக இருந்த குருபரன் அம்மாவின் அருகே வந்தான்.

“அம்மா.... குழந்தை பிறந்ததுக்கு அப்புறம், உங்களுக்கு ஏகப்பட்ட செலவுன்னு நெனைக்கிறேன். தம்பி வேலைக்குப் போயிருக்குற இந்த நேரத்துல இதையெல்லாம் கேள்விப் பட்டால் அவன் மனசு வருத்தப்படும் அதுனால, நாங்க கொஞ்ச நாளைக்கு தனியா இருந்துக்கலாம்னு நெனைக்கிறேன்” – என்று தேவையில்லாத ஒரு காரணத்தைச் சொன்னான், குருபரன்.

மறுவார்த்தை எதுவுமே பேசாத தமிழரசி, பக்கத்தில் வீடு ஒன்றை வாடகைக்குப் பிடித்து, அன்றே அவர்களைக் குடிபுக வைத்தான். பூர்ணிமாவுக்கும் அப்போது தான் மனசு சற்று சந்தோசமாக இருந்தது.

தங்களுக்குத் தேவையான சில பொருள்களை அங்கே இருந்த தன் புது வீட்டிற்கு எடுத்துச் சென்றான். இன்னும் பாதிச் சாமான்கள் எடுத்துச் செல்ல வேண்டிருந்தது. இருட்டிவிட்டதால், நாளை எடுத்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டான்.

அம்மா வீட்டில் கஞ்சி குடித்துவிட்டு வந்து, கண் அயர்ந்த அவனை, அரைமணி நேரத்தில் எழுப்பி விட்டாள், பூர்ணிமா. குழந்தை அழுது கொண்டிருந்தது.

“என்னங்க, தூங்க மாட்டேன்னு அடம் பிடிக்குறான். பாலும் சாப்பிட மாட்டேங்குறான். என்னன்னு பாருங்க.... சொல்லிக்கொண்டே, பூர்ணிமாவும் அழத்தொடங்கினாள்.

கண் விழித்துப் பார்த்த குருபரன், மகனின் நிலையைப் பார்த்துப் பதறிக்கொண்டு எழுந்தான். மடியில் வைத்துத் தாலாட்டினான். தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு தட்டிக் கொடுத்தான். ஒருபலனும் இல்லை. ‘கிரைப்வாட்டரை’ எடுத்து ஊற்றினான். டாக்டர் கொடுத்திருந்த சொட்டு மருந்தினைக்கொடுத்தான். ம் ஹும், அவன் அழுவதை நிறுத்தவே இல்லை. கடிகாரத்தைப் பார்த்தான். மணி இரண்டு. இந்நேரம் எந்த ஆஸ்பத்திரிக்கும் போகமுடியாது.

நான்கு மணி நேரமாக விடாமல் அழுதுகொண்டிருந்த மதனைப் பார்த்து அப்படியே துடித்துப் போனான். அப்போது தான் அவனுக்கு அம்மாவின் ஞாபம் வந்தது. குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு ஓடினான். பின்னாலேயே பூர்ணிமாவும் ஓடிவந்தாள்.

வாசலில் அவன் ஏறும்போதே குழந்தையின் அழுகுரல் கேட்டு, பதறிக் கொண்டு கதவைத் திறந்தாள், தமிழரசி.

“அம்மா, நாலுமணி நேரமா அழுதுக்கிட்டு இருக்கான். என்னனுதெரியல. பயமா இருக்கு” என்று சொல்லிக் கொண்டே அம்மாவிடம் குழந்தையைக் கொடுத்தான்.

தமிழரசி குழந்தையின் வயிற்றைத் தட்டினாள். “மந்தம் ஒண்ணும் இல்லையே...? என்று சொல்லிக் கொண்டே, தோளில் போட்டுத் தாலாட்டினாள். அதற்குள் வரதராசனும் எழுந்துவிட்டார். சற்று நேரம் அழுது கொண்டே இருந்த அவன் பாட்டியின் தோளில் தூங்கிப் போனான்.

களைப்பு மிகுதியால் குருபரனும், பூர்ணிமாவும் உட்கார்ந்த இடத்திலேயே தூங்கிவிட்டனர்.

காலையில் குழந்தைக்கு எப்படி இருக்கிறதோ என்று பதறிக்கொண்டு கண்விழித்தான், குருபரன். மகன் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான்.

“என்னங்க, கை நிறையச் சம்பாதிக்கிற திமிர்தானே அவனைத் தனிக்குடித்தனம் போக வச்சது. இங்கே இருந்தா நாம மிச்சம் பண்ணமுடியாதுனு பூர்ணிமா அவன் கிட்ட பேசும்போது நான் கேட்டுட்டேன். அதனாலதான் நான் போன மாசம் சம்பளத்தைக் கேட்கலே, அப்படிப்பட்ட அவள் பணத்தாலே குழந்தையோட அழுகையை நிறுத்தி இருக்கலாமே. எதுக்காக இங்கே வந்தான். ரெண்டு மாசமா என்னோட மடியில தூங்கின இந்தப் பேரனுக்குக்கூட அந்தப்பாசம்னா என்னனு தெரியுது. ஆனா.... இருபத்தி அஞ்சு வருஷமா நான் அடிச்சு, அணைச்சு வளர்த்த மகனப் பார்த்திங்களா மனைவி வந்தவுடனே...” பேச்சை முடிக்க முடியாமல் அழுது கொண்டே சொன்னாள் தமிழரசி.

இதில் எதையும் கேட்காதது போல் எழுந்த குருபரன் பூர்ணிமாவை எழுப்பினான்.

“என்னங்க, குழந்தைக்கு ஒண்ணுமில்லையே. நம்ம வீட்டுக்குப் போகலாமா?” என்றாள் பூர்ணிமா.

“இல்ல பூர்ணிமா, இனிமே இதுதான் நம்ம வீடு. தாய் தகப்பன் இருக்கிறவரைக்கும் அவங்களுக்குத் துணையா இருக்குறதுதான் ஒரு மகனோட கடமை, எனக்கும் ஒரு குழந்தை இருக்கு. இன்னைக்கு நான் எதை விதைக்கிறேனோ, அதுதான் நாளைக்கு எனக்குக் கிடைக்கும். அது தெரியாம சிறுபிள்ளைச் செயலுக்கு அடையாளமா நீ சொன்னதைக் கேட்டு, நானும் வெளியேறிட்டேன். வா மொதல்ல அம்மா, அப்பாகிட்ட மன்னிப்புக் கேட்கணும்” என்று சொன்னான், குருபரன்.

தான்செய்த சிறுபிள்ளைத்தனமான செய்கையை எண்ணி வெட்கித் தலை குனிந்தவளாய், கணவனின் பின்னே சென்றாள், பூர்ணிமா.

புன்னகையில் ஜனவரி

புதுவருட வாழ்த்துக்கள். இது பொன்னான வாழ்த்துக்கள். ஆனால் பொன்னான வாழ்த்தெல்லாம் மறுநாளே அர்த்தமில்லாது போய்விடுவதும் தெரிந்த கதை தானே. ஒவ்வொரு மாதத்தையும் பொன்னான மாதமாக கழித்துவிட்டால் ஆண்டு முழுவதும் பொன்மயமாகிவிடும்.

நகரின் வீதியின் மத்தியிலும் நதியின் இரு கரையிலும் பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் ஜீவ விருட்சம் இருந்தது. அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். (திருவெளி. 22-2) இறைவனுடைய மக்களுக்கு பரலோகம் மாடிதானே. எனவே பரலோகத்தைப் பூலோகத்திலேயே அனுபவிக்க மாதமொரு பண்பைப் பயிலுங்கள். அது உங்களையும் பிறரையும் பரவசமூட்டும், இம்மாதத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க புன்னகை பூக்கப் பழகுங்கள். புன்னகையற்ற முகங்களை அதிகம் காண்கிறோம். இம்முகங்களில் மாற்றம் வேண்டும். உங்கள் புன்னகை குடும்பத்தின் புன்னகையாகி அது சமுகத்தில் சென்று, அங்கிருந்து நாட்டின் புன்னகையாக உலகிற்கே மகிழ்ச்சியைக் கொடுக்க வேண்டும்.

புன்னகையால் பிறரை மாற்றலாம். திருத்தலாம், காயங்களை ஆற்றலாம். அயலவர் அன்னியர் ஏன், எதிரிகளையும் அணைக்கும் வல்லமை கொண்டது புன்னகை, யாவற்றிலும் சிறந்த புன்னகையை விட ஒருவருக்கொருவர் கொடுக்கக்கூடிய மிகவும் எளிதுமான வெகுமதி வேறொன்றுமில்லை அதை ஏன் அடக்கிக் கொள்ள வேண்டும். புன்னகைக்குக் கவர்ச்சி உண்டு. அது இதயங்களைத் திறக்கிறது. புன்னகைக்குப் பல சிறப்புகள் உண்டு. அது எவரையும் புண்படுத்தாது. பின் ஏன் புன்முறுவல் பூக்கப்பயப்பட வேண்டும்? புத்தாண்டு நள்ளிரவில் ஏதாவதொரு வேண்டாத பொருளை வெளியே தூக்கி யெறிவது உரோமயர் வழக்கம். இப்புத்தாண்டில், சோகமான அல்லது கோபமான தன்மையை வீசிவிட்டு முகத்திலே ஒரு சாந்தமான புன்னகையை ஒட்டிக் கொள்தல் நன்று. புன்னகை நமது நாளை வர்ணந்தீட்டி நமது வேலை நேரத்தை நறுமணம் கமளச் செய்யும். நமது கண்களில் விளக்கேற்றும் புன்முறுவல் பொன்போன்ற தலேந்து, புன்முறுவல் பூப்போரைக் காட்டிலும் கவர்ச்சியுடையவர்கள் கிடையாது. நீங்கள் சிரிக்கும்போது இன்னமும் அழகாய் இருக்கிறீர்கள் அல்லவா?

மனிதவாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கும் ஒரு நீரோடை போன்றது. அதில் தண்ணீர் சரளத்தோடு ஓடும்காலமும் உண்டு. சலசலவென்று சஞ்சலத்தோடு ஓடும் காலமும் உண்டு. தெளிந்த தண்ணீர் ஓடும் காலமும் உண்டு. கலங்கிய தண்ணீர் ஓடும் காலமும் உண்டு. நிரம்பி வழியும் காலமும் உண்டு. வற்றி வறண்டு போகும் காலமும் உண்டு. உயிர்கொடுக்கும் காலமும் உண்டு உயிர் பறிக்கும் காலமும் உண்டு. இதைப்போன்றே ஒவ்வொரு மனிதனும் சரளபடுகிறான், சஞ்சலப் படுகிறான் தெளிந்த உள்ளத்தோடு இருக்கிறான். கலங்கிக் கண்ணீர் விடுகிறான். அன்பு அமைதி பெற்று வாழ்கிறான். குறைவளப்பதில் நிலை குலைந்து போகிறான். புத்துயிர் அளிப்பவனாகவும் இருக்கிறான். பிறர் உயிரைப் பறிக்கும் காலனாகவும் இருக்கிறான்.

ஒவ்வொரு மனிதனும் புதிய அனுபவங்களைக் கொண்டவன். இருப்பதும் இழப்பதும், கொள்வதும் கொடுப்பதும் வாழ்க்கையின் அனுபவங்கள். கசந்த காலங்களை மறந்து கடவுளோடு இருந்தால் வாழ்க்கையில் வசந்தம் தோன்றும். ஒவ்வொரு நிகழ்விலும் இறைவனின் கரம்பிடித்து நடந்து செல்லும் மனப்பக்குவம் அவசியம். தோல்விகள் வெற்றிக்கும், கசப்புகள் இனிமைக்கும் இழப்புகள் நிறைவிற்கும், வழிகோலும், என்பது திண்ணம் நாமும் என்றும் புன்முறுவலுடன் இன்பமாக வாழலாம்.

இறைவன் தந்த நாளிலெல்லாம் இனிய நாளிது என்று ஒவ்வொரு நாளையும் இனிய நாளாக கழிப்போம், காலங்களின் நாயகனே! இறைவா! வாழ்க்கை என்னும் தோட்டத்தில் மணம்பரப்பி தேன் சொட்டும் வண்ணமலரென மலரச் செய்தீரே, மாண்புடன் என்னை வாழச் செய்தீரே குறைகளை நிறைவுகளென நிரப்பி வழியச் செய்தீரே நன்றி இறைவா, என நாளும் பொழுதும் ஓயாது உரைப்போம். மனநிறைவடைவோம். புதுவருடத்தில் எமது உள்ளத்தில் ஏவித்தாவுகின்ற எண்ணங்கள் பல புது உறவுகள், புது எதிர்பார்புகள் சந்திக்க இருக்கும் சவால்கள் சாத்தியமாக இருக்கும் சாதனைகள், கற்பனையில் உள்ள சந்தோஷங்கள், பாச உணர்வுகள், நன்மை பயக்கக்கூடியதாகவும் வெளிவேடமாகாது உண்மையானதாக வும் இருத்தல் வேண்டும் சவால்களை மேற்கொள்ள சாதனைகள் படைப்போம். உறவை உலுக்கும் உரசல்களை, பிரிவுகளை மேற்கொள்ள இறைவன் துணையுடன் புன்முறுவல் அவசியம்.

உன் குடும்பத்தைக் கோவிலாக்கு, இல்லத்தை இறைவன் உறையும் இடமாக்கு. தாய், தந்தை பிள்ளைகள் வாசம் செய்யும் கோவில்தான் குடும்பம். மனைவியரே கணவனுக்குப் பணிந்து நடவுங்கள். கணவன்மாரே மனைவிகளை அன்பு செய்யுங்கள். பிள்ளைகளே பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். இத்தகைய குடும்பம் கோவிலாகும். இது தான் இல்லறத்திற்கு இலக்கணம். அன்பு குறைவதோ, பிரமாணிக்கம் தவறுவதோ இல்லறத்தில் குறையாக இருத்தல் தவறு. இல்லத்தில் இறைவனை மையமாக வைத்தால் பிரிவினைகள், பிளவுகள், மனக்கசப்புகள், வித்தியாசங்கள், வேற்றுமைகள் குறையும், நீ இறைவனை நோக்கி மலர்ந்தால் மாறுபட்ட மனிதராகும் அதிசயத்தைக் காண்பாய். குடும்பத்தை கோவிலாகக் காண்பாய், குறைவிலும் மனநிறைவைக் காண்பாய், நிறைவிலும் நிம்மதியைக் காண்பாய். எப்போதும் புன்முறுவல் பூத்து இன்பமாய் வாழ்வாய். புதிய வருடம் யாவருக்கும் நன்மை பயக்கும் ஆண்டாக அமைவதாக.

நன்றி.

திருமதி.. நீற்றா வரப்பிரகாசம்.

காட்சி - 11

பதினோராவது வெள்ளிக் காசின் குரல்.

- ஈழத்துப்பூராடனார் -

மறை வார்த்தை; மத்தேயு; 26. 14 – 15 மாற்கு; 14: 10 – 11 லூக்கா; 22. 47 – 48.

இடம்: எருசலேம் தேவாலயத்திற்குப் போகும் பாதை. பாத்திரர்: யூதாஸ், பிரதான ஆசாரியன், வேதபாரகர், சதுசேயர், பரிசேயர்.
நிகழ்ச்சி: பிரதான ஆசாரியர்களுடன் இயேசுவைக் கொலை செய்யச் சதி செய்தல். அப்போது அங்கே சதுரேயன் ஒருவன் யூதாசைக் கூட்டிக் கொண்டு வருதல், இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் வியாபாரப் பொருத்தனை. யூதாஸ் முப்பது வெள்ளிக் காசுகளுக்கு இயேசுவைக் காட்டிக் கொடுக்க ஒப்புதல்.

வெள்ளிக் காசின் குரல்; பாடல்.

செய்ததைத் திரும்பச் சிந்தித்துப் பார்த்தால்
சிரிப்புத்தான் வருகுதய்யா — அய்யய்யோ
சிந்திய பால்போல் செய்கைகள் சிதறிச்
சிந்தையை வருத்துதடா

நடந்ததை எண்ணி நாய்போல் அலைந்து
நரியாக ஊழையிட்டால் - அய்யய்யோ
கடந்த காலத்துக் காரியம் திரும்பக்
கைகூடா தறிவாயடா

செய்யமுன் துணிக செய்தபின் துணிதல்
செம்மையே இல்லையடா — அய்யய்யோ
செய்த தவறினால் சிலுவையில் பட்ட
செம்மானை மீட்பதற்கு

முடியும் எனமுழு மூச்சோடு ஓடும்
மூடனைப் பாருங்கடா — அய்யய்யோ
மடிந்து கொண்டிருக்கும் மாதவன் பாடுகள்
மனதை வருத்துதடா

இருதினம் முன்பு இவனுடை செய்கை
எப்படி இருந்ததென்று — அய்யய்யோ
ஒருதரம் எண்ணி உன்னிப்பாய்ப் பார்த்தான்
உலகம் உருட்டுதடா

(காய்பாவின் மாளிகை ஆலோசனைக் கூடத்தில். வேதபாரகர், சதுசேயர், பரிசேயர் ஆகியோர் மத்தியில், கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு)

பிரதான ஆசாரியன் காய்பா; வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் என்று நாம் அழைக்கப்படுகிறோமே தவிர அந்தப் பரிசுத்தமான சொற்களின் அர்த்தமோ பொருளோ எங்களுக்குத் தெரியாது! புராதன காலமிருந்து இச் சொற்கள் புனித குலத்தவரைக் குறிக்கிறதென்பதையாவது அறிவீர்களா? தெரியவே தெரியாது. இந்த யூத குலத்துப் பெருமை எங்களாற்தான காக்கப்படுகிறதென்பதையும் நாம் மறந்துவிட்டோம். தாவிதரசன் காலத்தில் சங்கையுடன் வாழ்ந்த சாதேக்குப் பெருமகனின் வம்சமான சதுரேயரே! உங்களுக்கு உயிர்த்தெழுதலில் உள்ள நம்பிக்கையாலேயா மரித்த லாசரு உயிர்த்தெழுந்து விட்டானென்று நம்பி இருக்கிறீர்கள்?' உங்களின் அந்த விசுவாசத்திற்கும் இதற்கும் ஏதும் தொடர்புண்டா: இப்படியே இயேசு செய்து கொண்டு போவதை உங்களால் எப்படிப் பொறுத்துக் கொள்ள முடிகிறது. இறுதி நாட் தீர்ப்பின் பொழுது நடைபெறும் உயிர்த் தெழுதலை இந்த இயேசுவால் இந்த நாட்களிற் செய்ய முடியுமா?

பரிசேயர் என்னும் பதத்தின் பெருமையையும் உணர்ந்து கொள்ளுங்கள். மத வைராக்கியம் மிக்க கசித்தீம் மக்கள் குலத்தவர்களே! உலகை இரட்சிக்க மேசியா வருவார் என்று எதிர்பார்த்துக் காலங் காலமாகக் காத்துக் கொண்டிருக்கும் நீங்கள் இயேசுவை மேசியா என்று எண்ணிவிட்டீர்களா? நமது ஆகமப்படி மேசியா என்றால் அவருக்கு எத்தனையோ தெய்வீகக் குணங்கள் இருக்க வேண்டும். அவற்றுள் ஏதவாதொன்று இவனிடம் உள்ளதா? ஏமாந்து விட்டீர்களா, தான்தான் மேசியா என்றும் இரட்சகர் என்றும் நாசரேத்தூரான் சொல்வதை எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்கிறீர்கள். கழுவுதலால் சுத்திகரிப்பும். உபவாசம் இருப்பதால் மனத் தூய்மை பெறலும். ஓய்வு நாள் ஆசரிப்பது தசம பாகங்கொடுத்தல் என்பவற்றில் பக்தியும் ஏற்படுமென வைராக்கியங் கொண்டுள்ளவர்களாகிய உங்களால் இவன் அதற்கு மாறாகச் செயற்பட்டு வருவதையும் போதித்து வருவதையும் உங்களால் எப்படிச் சகித்துக் கொள்ள முடிகிறது! சொல்லுங்கள் பரிசேயரே!

வேதபாரகரே! நீங்களுமா கண்டும் காணாதது போல கேட்டுங் கேட்காதது போல வீணே வாழாது இருக்கிறீர்கள். நீங்கள் இராசாக்களின் ஆலோசனைக்காரர்களாயிற்றே. அரசி நிதியின் கணக்காளர் பதவி உங்களுடையதல்லா? நியாயப் பிரமாணங்களை நன்கு கற்றுத் தேர்ந்து அவற்றை மக்களுக்குப் போதிப்பவர்களாகவும், ஒரு எழுத்தும் விடாமல் கற்றுத் தேறிக் காலங் காலமாகக் காப்பாற்றி வருபவர்களாகவும் இருந்து கொண்டு நியாயப் பிரமாணங்களையும் கற்பனைகளையுஞ் சுருக்கிப் போதிக்கும் இவனை எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

லாசரு மரித்து உயிர்த்தெழுந்த பின் அவனைக் கொலை செய்தால் இயேசு செய்தது பொய்யாகும் என்றிருந்தோம் அது முடியாத காரியமாயிற்று. இப்போது ஏதாவது செய்தாக வேண்டும் அதைப்பற்றிப் பேசுவோம்.

சதுசேயர் தலைவன்: பெருமைக்குரிய பிரதான ஆசாரியரே! உங்களின் சொற்படி நடக்க ஆயத்தமாக இருப்பவர்கள் நாங்கள் என்பதை அறிவீர்களா? எப்போதாவது உங்களுக்கு எதிருத்தரம் சொல்லியுள்ளோமா? எதில் ஏதாவது தவறுகள் செய்துள்ளோமா? சொல்லுங்கள் செவி மடுக்கிறோம். கட்டளை இடுங்கள் உடனே செய்கிறோம். செய்கிறோம் என்ன செய்தே முடித்து விடுவோம். பிரதான ஆசாரியரே! எங்கள் குலத்திற்கு உயிர்த்தெழுதல் என்பது மிக முக்கியமான நம்பிக்கையாக இருக்கிறது. அந்த உயிர்த்தெழுதல் கடைசித் தீர்ப்பு நாளன்று தான் வருமென்பது எங்களின் உறுதி. அதற்கிடையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டவர்களில் அல்லது மரித்துவிட்டான் என்று வைத்தியர்களால் உறுதி செய்யப்பட்டவர்களில் எவராவது ஒருவர்தானும் உயிர்த்து எழவே மாட்டார்கள். கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் உதிக்கலாம். ஆனால் மாண்டவர் மீண்டெழவே மாட்டார்கள். மாட்டார்கள். மாட்டார்கள்.

அவையில் இருக்கும் ஒருவன்; ஆமாம் ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ மாநிலத்தில்.....................

சதுசேயத் தலைவன்; ஆமாம், ஆமாம். கடைசி நியாயத் தீர்ப்பு நாளன்று தான் நடக்கும். நடக்கும். நடக்கும்.

பிரதான ஆசாரியன்; உயிர்த்தெழுதல் நியாயத் தீர்ப்பு நாளில் தான் நடக்கும் என்பதுதானே உங்கள் எண்ணம். அந்த எண்ணத்தை அந்த நசரேத்தூரான் அடிஅடியென்று அடித்து உடைத்தெறிந்து விட்டானே! லாசரு செத்துக் கிடந்தான். என்ன நடந்தது? அடக்க ஆராதனைக்குரிய ஒழுங்குகள் செய்து கொண்டிருக்கும் பொழுது அந்தக் கேடு கெட்ட பாவி வந்து, ஏதோ சொன்னதும், பிணமாகக் கிடந்தவன் துள்ளி எழுந்துவிட்டான்.

அவையில் ஒருவன்; இங்குமட்டுமா அப்பச் செய்தான். இன்னொரு இடத்தில் செத்துக் கிடந்த பெண் குழந்தையைப் பார்த்து, அவள் சாகவில்லை. நித்திரை கொள்கிறாள் என்று சொல்லி அவள் பெயரைச் சொல்லி அழைக்க அவள் உயிர் பெற்றுவிட்டாள். இதை நான் என்னிரண்டு கண்களால் கண்ணாரக் கண்டேன்......

பிரதான ஆசாரியன்; அதெல்லாம் பொய், சுத்தப் பித்தலாட்டம் மயக்கமாகக் கிடந்தவர்கள்தான் அப்படி எழுந்தவர்கள். இப்படியே அந்தப் போதகனை விட்டு வைத்தால் எங்களின் மத நம்பிக்கைகள் யாவும் தகர்த்துவிடும்.

சதுசேயர்: நீங்கள் புத்திக் கூர்மைக்காரர் மட்டுமல்ல அதை எப்படிப் பிரயோகிக்க வேண்டுமென்பதையும் அறிந்தவர். அப்படிப்பட்ட நீங்கள் இருக்கும்போது பண்டு தொட்டு இற்றைவரையும் உறுதியாயிருக்கும் உயிர்த் தெழுதற் கொள்கை உடைந்து சிதறுவதா? அதை எப்படி எங்களால் பொறுக்க முடியும்?

பிரதான ஆசாரியன்; அதற்குத்தானே இன்று நாங்கள் அங்கு கூடியிருக்கிறோம். பரிசேயரே உங்கள் நிலமை எப்படி இருக்கிறது? ஓய்வு நாள்க் கொள்கையிலும் அந்த வேதப் புரட்டன் கை வைத்துவிட்டானாமே!

சதுசேயர் தலைவன்; ஆமாம் ஆசாரியரே! அன்று ஓய்வுநாள். அப்போது அந்த ஆளும் அவரது கூட்டாளிகளும் வயலின் வரம்பால் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் கதிர்களைப் பறித்துக் கொறித்ததைக் கண்டு பரிசுத்தமான ஓய்வு நாளில் நீங்கள் இப்படிச் செய்வது தப்பல்லவா என்று கேட்டதற்கு அந்த ஆள்; ஏன் ஐயா! பரிசுத்த நாளில் உமது ஆட்டுக்குட்டி ஒன்று கிணற்றுள் வீழ்ந்துவிட்டால் அதைத் தூக்கி எடுக்க மாட்டீர்களா என்று பகிடி விடுவதற்கு என்ன சொல்லலாம். இப்படியே போனால்........

வேதபாரகன்: நாங்கள் விரைவில் நமது ஆலோசனைச் சங்கத்தைக் கூட்ட வேண்டும். அப்போகிரிபாவில் ஆதியில் கூட்டப்பட்ட அதற்கு இந்த நாட்டிலுள்ள எமது மக்களிடை அதிக மதிப்புள்ள நியாயப் பிரமாணங்களை மீறுபவர்கள், அவற்றை மீறும்படி மக்களைத் தூண்டி விடுபவர்கள். கள்ளத் தீர்க்க தரிசனங்களைச் சொல்லி மக்களை ஏமாற்றுபவர்கள், தேவ தூசனம் சொல்பவர்களை நமது சேவகர்களைக் கொண்டு கைது செய்யவும், விசாரணை செய்து தண்டிக்கவும் அதற்கு அதிகாரம் உண்டு. பாரிய குற்றங்கள் அப்படிக் கைது செய்யப்படுபவர்கள் செய்துள்ளார்கள் எனக் கண்டால் கொலைக்கு ஒப்புக் கொடுக்கவும் அதிகாரம் உள்ளதை மறந்து விட்டீர்களா?

பரிசேயர். சதுசேயர்களில் இருந்துதானே பிரதான ஆசாரியர்கள் தெரிவு செய்யப்படுவது மரபு. அப்படியான நியமனத்திற்கு என்ன காரணம் என்பதை மறந்துவிட்டீர்களா? நீங்கள் வேதாகமத்தின் முதல் ஐந்து ஆகமங்களையும் முற்றும் அறிந்தவர்கள். அதை மதிப்பவர்கள். ஆதலினாற் தானே அந்தச் சமுகத்திலிருந்து ஆலோசனைக் கூட்டத்தின் தலைவர் தெரிவு செய்யப்படுவது வழக்கம். ஆகவே இந்தப் போதகருக்கு உடனடியாக நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும். அவருடைய செயல்களைத் தடுத்து நிறுத்துவிட வேண்டும். பேசிக் கொண்டிராது செயல்களில் இறங்க ஆவன செய்யும் பொறுப்பு உங்களிடந்தான் உள்ளதென்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

வேதபாரகர்: ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து வந்தது மனிதரையும் கடிக்கும் நிலைக்கு வந்ததுபோல இந்தப் போதகரால் மோசே மூலம் மாந்தர் குல ஈடேற்றத்துக்கு தேவனால் தரப்பட்ட பத்துக் கற்பனைகளிற்கூடக் கை வைக்கப்பட்டுவிட்டது. நாணற் பாயைச் சுருட்டி எடுத்ததுபோல அவற்றையெலாம் சுருட்டோ சுருட்டென்று சுருட்டி இரண்டு கற்பனைகளுக்குள் வைத்த அநியாயத்தை நாம் பொறுத்துக் கொண்டிருந்தால், எகிப்து மன்ன பார்வோனின் அடிமைத் தளையில் இருந்து மீட்டு கானான் தேசத்திற்குக் கொண்டு வந்த மோசே அடியானை அவமதிப்பதாகாதா?

பிரதான ஆசாரியன்; ....ஏன்? இறைவனின் வாக்குத் தத்தங்களை தள்ளித் தூக்கி எறிவது போலாகாதா?

வேதபாரகர்: வேதங்களை காக்கவும் விரித்துரைக்கவும் தக்க வல்லமை சாதாரணமாக உண்டாகி விடாது. அதற்காகப் பல வேத சாத்திரங்களை வேதப் பள்ளிகளில் படிக்க வேண்டும். அதுமட்டும் போதிய தகுதியாக அமைந்தும் விடாது. மக்களுக்கும் மகாதேவனுக்கும் இடையில் உள்ள இடைவெளியைக்

(32ம் பக்கம் பார்க்க...)

ஜெபத்தோட்ட
கீதங்கள்
vol. 32
ORIGINAL
பிரதிகளை வாங்கி
ஊழியங்களை
ஆதரியுங்கள்
Production & Distribution
Melchi
Exclusive distribution in North America
Marketed and Distributed
exclusively in North America by
P.O.Box 3026, Westerville, OH 43086
1.855.226.3636 Ext 32.
www.karthikranjani.com

தமிழ் திருச்சபைகளின் நத்தார் இன்னிசை ஆராதனை 2011

விசுவாசிகளின் எழுப்புதல் தமிழ் திருச்சபை

Believer's Revival Tamil Church

விடுதலை ஆராதனை
காலை 9:00 மணி

400, Passmore Avenue
Scarborough
(Markham & Steels)

பிரம்டனில்

விடுதலை ஆராதனை
பிற்பகல் 2:00 மணி

355, Howden Blvd
Brampton
(Dixie & Queen)

தொடர்புகளுக்கு

(905) 306 - 1321 / (416) 697 - 1321

"உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்"

"I am the Lord, I am the God of all people.
Is anything too hard for me?"

இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்!
என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? எரேமியா 32:27

Saturday
4th February 2012
4:30 P.M.

Blessing Anointing Service for our new church

AWESOME GOD CHURCH

ALL ARE WELCOME

Come & enjoy the presence of the Lord.

7651 9th (Ninth) Line Markham
Ontario L6B 1A8
(Main Intersection: 14th Ave. and 9th Line)

Rev. John Vijeyaratnam
416.627.6195

Guest Speaker
Messiah Christian Church - Montreal
Pas. Benjamin Sebarn

உம்மைத் துதிக்கிறோம், தேவனே, உம்மைத் துதிக்கிறோம்; உமது நாமம் சமீபமாயிருக்கிறதென்று உமது அதிசயமான கிரியைகள் அறிவிக்கிறது. சங் 75:1

We give thanks to You, O God, we give thanks! For Your wondrous works declare that Your name is near. Ps.75:1

AWESOMEGODCHURCH.COM

INCOME TAX SERVICES

Personal Tax Returns | Business Tax Returns | HST Returns | Payroll | Bookkeeping
Financial Statements | Business Plans | Company Incorporation

Selvi Sothy
Tax Consultant

Maximum Refund

416.298.9322

3300 McNicoll Avenue, Unit A13,
(Middlefield & McNicoll)
Scarborough, ON. M1V 5J6

தாயகத்திலிருந்து தரணியெங்கும் தமிழர்களின் இல்லங்களில்
இடைவிடாது ஒலிக்கும் உலகத் தமிழர் வானொலி

கேளுங்கள் தாளம் குதூகலம் ஏராளம்

www.thaalamradio.com
www.thaalam.ca

உங்கள் தாளம் FM
தற்பொழுது உங்கள்
மொபைல் போனிலும்
கேட்டு மகிழுங்கள்

iPhone Apps
Go to Apple store
search for THAALAM FM
or WTRFM

DOWNLOAD

தாளம் FM

thaalamfmlive
+44 20 3239 4404
+41 44 586 5358
+ 91 452 4512045

Srilanka : +94 115 733 337
416 613 2949
Email : info@thaalam.org
www.facebook.com/thaalam
www.twitter.com/thaalamfmlive

website :
www.thaalamradio.com
www.thaalam.ca
www.thaalam.us
www.thaalam.lk

கிருபை சுவிசேஷ தமிழ் திருச்சபை

Grace Gospel Tamil Church.

At Toronto Free Presbyterian Church.

1600 Neilson Rd. (Neilson & Finch)
Scarborough.

கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலுள்ள சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அறிந்துகொள்ளவும் பெற்றுக்கொள்ளவும் அனுபவிக்கவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்!

அன்புடன் வரவேற்கிறோம்! வாருங்கள்!

ஞாயிறு தமிழ் ஆங்கில ஆராதனைகள்:

பிரதி ஞாயிறு: 10:00-12.00 மு.ப.

உபாவச ஜெபம்: மாதத்தின் முதல் சனி 9:00-12:00 மு.ப.

ஜெபக்கூட்டம்: பிரதி புதன் மாலை 7:00-8:00.

வேதப்படிப்பு: (தமிழ்-ஆங்கிலம்) பிரதி சனி 4:30 - 6:00 பி.ப.

(பிள்ளைகள் - வாலிபர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டுக்களுடன்)

மிசிசாகாவில்: **கிருபை சுவிசேஷ தமிழ் திருச்சபை:**

At peace Lutheran Church.

square One Mall (Facing food Court)

Mississauga.

ஞாயிறு ஆராதனை: மாலை 4:30-6:00.

உபவாச ஜெபம்: இரண்டாவது சனி 10:00-12:00 மு.ப.

"சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" யோவான் 8:32.

புதுவாழ்வு வானொலி நிகழ்ச்சி: (CTBC) பிரதி புதன் 2:00 பி.ப.

ஆராதனை வானொலி நிகழ்ச்சி: ஞாயிறு காலை 6:30.

இயேசு சொன்னார்:

'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்". மத் 11:28-30.

ஜெபத்தேவைகளுக்காக தொடர்புகளுக்காக: (416)839-4349. (416)928-9874.
gracegospeltamil@yahoo.ca

தேவஊழியன் நாவாய் மனோகரன்.

(பதினோராவது வெள்ளிக்...)

குறைக்க இடை நிற்கும் அபிசேகமும் பெற வேண்டும். யேகொவுக்கும் மனிதருக்கு இடையில் பந்தத்தை உண்டாக்கும் பூசை புனர்க்காரம் ஆராதனை ஆகியனவற்றைச் செய்யும் நியமங்களை அறிந்து அதற்கான குருத்துவத் தீட்சை பெற வேண்டும். இவைகளில் ஒன்றேனும் இல்லாத இயேசு எப்படி தேவ காரியங்களில் தலையிட முடியும்? கைக்கொள்ள வேண்டும்.

சதுசேயர்: இடையே புகுந்து பேசுவதற்கு மன்னியுங்கள் குருவே! அன்று தமது சீடர்களிடம்: வேத பாரகர், சதுசேயர், பரிசேயர் இப்போது மோசேயின் ஆசனத்தில் அமர்ந்து அதிகாரம் செய்கிறார்கள். ஆதலால் அவர்கள் சொல்வதைக் கேட்டு நடங்கள் ஆனாலும் அவர்களின் செயல்களின்படி நடக்காதிருங்கள். மனிதர்கள் முன்பு தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள். இவர்கள் வெகு விரைவில் தாழ்த்தப்படுவார்கள். குருடர்களான இவர்கள் எப்படி மற்றவர்களுக்கு வழி காட்ட முடியும்! என்றெல்லாம் போதிப்பதை நான் காதாரக் கேட்டேன். எண் சாண் உடம்பு ஒரு சாணாகிவிட்டேன். இதை இப்படியே பாரா முகமாக விட்டால்.....

பரிசேயர்: சதுசேயர்களுக்கும் பரிசேயர்களுக்கும் இடையில் எப்போதும் ஒத்து வருவதில்லை என்பது உண்மைதான். ஆனாலும் இந்த விசயத்திலர் எங்களுக்கு நிறைவான ஒத்துழைப்புண்டு.

பிரதான ஆசாரியன்; ஓய்வு நாளில் சூம்பின கைகளையுடைய ஒரு சிறுமியை சுகப்படுத்தி கற்பனைகளை மீறியதை ஒப்புக்கொள்ளாமல், ஓய்வு நாள் மக்களுக்காக அன்றி மக்கள் ஓய்வு நாட்களுக்காகப் படைக்கப்பட இல்லை. என்றுகூடச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். நியாயப் பிரமாணங்களையும் சம்பிரதாயங்களையும் அவதூறு செய்யும் அளவுக்கு இந்த ஆளை அனுமதிக்கவே முடியாது. அதற்கான காரியத்தை உடனடியாக செய்ய வேண்டும்.

வேதபாரகர்; இதற்கு இரண்டி பெரிய தடைகள் உள்ளன. ஒன்று மக்கள் அவர் பக்கம் இருக்கிறார்கள், மக்கள் சக்தியோ மகேசன் சக்தி போன்று மகா வல்லமை கொண்டது. மக்கள் அவரின் பக்கம் இருந்தால் எவராலுமே எங்களைக் காப்பாற்ற முடியாது.

பரிசேயர்; அடுத்த தடை ஆள்மாறாட்டத்தானே! அந்தப் போதகரின் சாயலில் அவருடன் திரியும் ஒருவன் இருக்கிறான். பேசும்போதுதான் இயேசு யார் என்பதை கண்டு பிடிக்க முடியும். மற்ற வேளைகளில் அந்த இரண்டு பேரினதும் உடை, நடை, பாவனைகள் சாயல்கள் ஒன்றாக இருப்பதால் அவர்களைப் பிரித்தறியவே முடியாது.

சதுசேயன்: இதுபற்றிப் பெரிதும் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அதற்கும் ஒரு வழி கண்டுபிடித்து வைத்திருக்கிறேன். கொஞ்சம் செலவாகும் அவ்வளவுதான்!

எல்லாரும்; அது என்ன வழி. சொல்லும். சொல்லும். சீக்கிரமாகச் சொல்லும்!

(அவசரத்துடன் அவனைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.)

(அத்தருணம் ஒரு சதுசேயன் யூதாசைக் கூட்டிக் கொண்டு
பிரதான ஆசாரியனின் அரண்மனைக்குள் புகுகின்றான்
அப்போது அந்தச் சதுசேயன். அந்தப்பக்கம் பார்த்துத்
தன்னைச் சூழ்ந்து கொண்டு நின்றவர்களிடம்)

சதுசேயன்: அதோ தெரிகிறது....... நான் சென்ன அந்த வழி! உங்களுக்குத் தெரிகிறதா?

பிரதான ஆசாரியன் : அங்கே வந்து
கொண்டிருக்கும் இருவரையும் பார்த்து
ஏமாற்றமடைந்து சினத்துடன்)

பிரதான ஆசாரியன்: என்ன? பேய்க்காட்டுகிறாயா! இந்த இரண்டு பேருமா அந்த வழி. முட்டாளே எங்களையா முட்டாளாக்குகின்றாய்! ஒரு முழு முட்டாள் பல புத்திசாலிகளை எப்போதுமே முட்டாளாக்கி விட்டதாக வரலாறே கிடையாது.

சதுசேயன்: அய்யா தலைவரே. ஆத்திரப்படாதிருங்கள் தூரத்தில் அசையும் கறுப்பான இருட்டு உருவம் ஒன்றைப் பார்த்த உடனே யானையா அல்லது கரும் புகையா என்று உடனே துணிவது புத்திச்சாலித் தனமின்று. இங்கே வந்திருக்கும் அந்த வழி இந்த மனிதன்தான்! நீங்கள் எந்த வழியால் போக வேண்டுமென்று அங்கலாய்க்கிறீர்களோ அந்த வழி இந்த மனிதன் உருவத்தில்தான் வந்திருக்கிறது. இவனை இங்கே கொண்டு வர நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா? போதும் போதுமென்றாயிற்று. இவன் யார் தெரியுமா? உங்களில் யாருக்காவது தெரியுமா?

(எல்லாருந் தெரியாது என்பதுபோலத் தலையைப்
இரு பக்க வாட்டில் ஆட்டுகிறார்கள்)

அதுதானே சொன்னேன்! எல்லாமறிந்தவர்கள் பிரதானமான ஒன்றைத் தெரிந்து கொள்ளாது விட்டு விடுகிறார்கள். அப்படி இருக்கும்போது மற்றவர்களை மடையர் எனலாம். இப்படிப் புத்திசாலிகள் எப்படியோ மடையர்கள் தானே! இவன் யாரென்று தெரியுமா. நீங்கள் தேடிக் கொண்டிருக்கிற......... அதாவது அசல் இயேசு யார்! நகல் யேசு யார் என்று கண்டு பிடிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறீர்களே! அவருடன் கூட இருக்கிற ஒரு சீடன்!

எல்லாரும்: அப்படியா! (என்று ஆச்சரியப்பட்டு அவனிடம் ஓடிப்போய்) நானே வழியும் ஒளியுமாக இருக்கிறேன் என்று மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற அந்த நாசேரத்து ஊர் மனிதனை உனக்குத் தெரியுமா? நாங்கள் தேடிக் கொண்டிருக்கிற அந்த ஆளை உன்னால் எங்களுக்கு அடையாளங் காட்டக் கூடுமா?

யூதாசுடன் கூட வந்த சதுசேயன்: பொறுமையாக இருங்கள். ஏற்கனவே கலவரப்பட்டுக் கொண்டிருக்கிற இவனை பயமுறுத்தி விடாதீர். யூதாசைப் பார்த்து) நண்பனே பயப்படாதே. இவர்கள் இப்படித்தான் ஒன்றுமிலாததற்குக்கூட கூக்குரல் போடுவார்கள். உனக்குக் கிடைக்க வேண்டியதை நிலுவையில்லாமல் வாங்கித்தர நான் இருக்கிறேன்.

வேதபாரகர்: ஆங்.... மூதாஸ் இல்லை இல்லை உன் பெயர் என்ன? ஆங் ஆங் யூதாஸ்! சரிசரி பெயரில் என்ன இருக்கிறது! செயல் சரியாக இருந்தால் போதும். உன்னால் அந்த நசரேத்து மனிதனைக் காட்டிக் கொடுக்க முடியுமா:

யூதாஸ்: எதற்கு நான் காட்டிக் கொடுக்க வேண்டும். அவரிடம் இருந்து நீங்கள் என்ன எதிர் பார்க்கிறீர்கள், அப்படிக் காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன நன்மை உண்டாகும்?

பிரதான ஆசாரியன்: (தனக்குள் சற்று யோசித்து விட்டு) அதுவா? அவரை நாங்கள் எங்கள் ஆலோசனைச் சபைக்கு அழைத்து வந்து சில சந்தேகங்களுக்கு விடை பெற வேண்டும். உனக்குத்தான் தெரியுமே! அவர் பெரிய ஞானி. அவரிடம் இருந்து நாங்கள் பலபல புத்திமதிகளைப் பெற வேண்டும். அதற்கு இடையூறாக அவரைப் போல சாயலுள்ள வேறு ஒருவன் இருக்கிறானாமே. அதனால் உண்மையான இயேசுவைக் கண்டுபிடித்து சங்கத்திற்கு அழைத்து வர முடியாதிருக்கிறது. அதைவிட வேறு ஒன்றுமில்லை. மற்றது உனக்கு என்ன நன்மைகள் என்று கேட்டாயே. அதிகமான நன்மைகள் கிட்டும். இப்படி ஒரு நாடோடியுடன் ஊர் ஊராகச் சுற்றிவருவதிலும் பார்க்க உன் குடும்பத்துடன் ஒரே ஊரிலே பெரிய வீட்டைக் கட்டிக்கொண்டு சொகுசாக வாழலாமே! அதற்குரிய பணத்தை தருகிறோம்.

பரிசேயன்: வழக்கமாக ஒரு அடிமை என்ன விலைக்கு விலை போகிறானோ அதையே பெற்றுக்கொள். அதுதான் முப்பது வெள்ளிக் காசுகள். அதுவும் மிகப் பெரிய பணமே. அடிமைச் சீட்டு எழுதும் போது பல சிரமங்கள் ஏற்படும். ஏனெனில் நீ உன் அடிமையை விற்கவில்லையே. உன் எசமானையல்லவோ விற்கப் போகிறாய். அப்படி இருக்க எப்படி அடிமைச் சீட்டை எழுதலாம். அதிலே பல சிக்கல்கள் வருமே!

சதுசேயன்: ஏன்? எசமான்கள்தான் அடிமைகளை விற்கலாமா? தேவையற்ற எசமான்களை அடிமைகள் விற்கமுடியாதா? வேதபாரகரே இப்படியான சந்தர்ப்பங்கள் பண்டைக் காலத்தில் நம் முன்னோர்களிடையே ஏற்பட்டதில்லையா? புத்தகத்தைப் பிரட்டிப் பார்த்து பொருத்தமாக ஒரு கதையைச் சொல்லுங்கள். சரியா?

பரிசேயன்: அதெல்லாம் அப்புறம் பார்ப்போம். இப்போது இவன் கேட்கும் பணத்தைக் கொடுத்து அந்த ஆளைக் கண்டு பிடிப்போம். (யூதாசைப் பார்த்து) ஏனப்பா உனக்கு முப்பது வெள்ளிக் காசுகள் போதாதா? போதாவிட்டால் பின்னாலே முன்பின்னாய் சரிப்படுத்திக் கொள்ளலாம். என்ன சொல்கிறாய்.?

யூதாஸ்: சரி எதற்கும் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் நான்தான் காட்டிக் கொடுத்தேன். அதுவும் முப்பது வெள்ளிக் காசுகளுக்காகக் காட்டிக் கொடுத்தேன் என்பது எவருக்குமே தெரியக் கூடாது. அடுத்தது. இது முக்கியமானது! அவர்க்கு எந்தவிதமான கெடுமதியுஞ் செய்யக் கூடாது!

பதினோராவது காட்சி நிறைவுறுகிறது.

இயேசுக் கிறிஸ்துவில் சங்கமம்

DESTINY IN JESUS CHRIST

24 மணி நேர தொலைபேசி
செய்திச்சேவை

www.destinyinjesuschrist.com
www.sungumum.com
Contact numbers:
905-607-0583
905-607-9771
647-723-0050
Montreal number: 514-448-2810

email: info@sungumum.com

உனக்கு ஒருவர் இருக்கிறார்,
உன்னை விசாரிக்க துடிக்கிறார்
-
அவர் தான் இயேசு கிறிஸ்து

WAVES OF POWER

www.wavesofpower.com
Internet Tamil Gospel Radio

வல்லமையின் அலைகள்
இணையதள தமிழ் சுவிசேஷ
வானொலி

ராஜ்யத்தினுடைய இந்தச்
சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள
சகல ஜாதிகளுக்கும்
சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்,
அப்போது முடிவு வரும்
(மத்தேயு 24:14)

Contact & Live Talk Show:
416-253-0080

Email: info@wavesofpower.com

நாட்டைக் காக்க ஒரு சிறுவன்!

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற வேளை அது! ஹிட்லரின் படைகள் ஆண்ட்ருவின் சொந்த நாடான ஹாலந்தை ஆக்கிரமித்துக் கொண்டன! எதிர்க்கத் துணிவில்லாத டச்சு இளைஞர்கள் ஜெர்மானியப் படைக்குத் துணையாகச் சேர்ந்தனர். ஒரு சில வீரமுள்ள இளைஞர்களே ஜெர்மானியரை எதிர்த்து மறைமுகப் போர்புரிந்து வந்தனர்.

பதுங்கிப் பதுங்கிச் சென்று கொண்டிருந்தான் அந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவன்.

பயத்தால் நெஞ்சம் படபடவென்று அடித்துக் கொண்டது!

என்றாலும் தனது நாட்டின் நன்மைக்குத் தான் இதைச்செய்தேதான் தீர வேண்டும் என்ற வைராக்கியம் அவனுக்கு இருந்தது.

சண்டை நடக்கிறது என்றால் விரோதி நாட்டுக்குத் துணை புரியும் தேசவிரோதிகளும் இருக்கத்தானே செய்வார்கள்?

அத்தகைய தேசவிரோதி ஒருவனின் வீட்டை நோக்கியே பூனைபோல அடியெடுத்து நடந்துகொண்டிருந்தான் அந்தச் சிறுவன்.

அந்தத் தேச விரோதி எதிரிப் படையின் சீருடையை அணிந்துகொண்டது மட்டுமல்லாமல் ஊருக்குள்ளேயே ராஜ நடைபோட்டு நடந்து செல்கிறானே! அவன் பெல்டில் சொருகி வைக்கப்பட்ட துப்பாக்கி வேறு!

அவனுடைய வீட்டிலிருந்து அந்தத் துப்பாக்கியை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்பது சிறுவனின் இலட்சியம்!

இதோ வீட்டை நெருங்கிவிட்டான்!

சன்னல் வழியே வீட்டினுள் எட்டிப் பார்த்தான் சிறுவன்.

விளக்கொளியில் சுவரில் மாட்டப்பட்டிருந்த பொருட்கள் மீது அவன் பார்வை பதிந்தது.

இதோ-அவனுடைய யூனிபார்ம்!

அதோ அந்த பெல்ட் தொங்குகிறது! அதில் அந்தத் துப்பாக்கி!

அந்தக் குளிரிலும் அவன் நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பின!

வீட்டுக் கதவை மெதுவாகத் தள்ளிப் பார்த்தான். நல்ல வேளை பூட்டப்படவில்லை!

வீட்டின் உள்ளே ஏதோ அறையில் அந்தத் துரோகி சிரிப்பது கேட்டது. ரேடியோவைச் சத்தமாக வைத்திருந்தது சிறுவனுக்கு வசதியாக இருந்தது.

கதவைத் திறந்து மெதுவாக உள்ளே நுழைந்தான் சிறுவன்.

துப்பாக்கி கண்ணில் தெளிவாகப் பட்டது!

ஆனால் அருகில் மற்றொரு கதவு!

அவன் துப்பாக்கியை எடுக்கும்போது வீட்டின் உள்ளேயிருந்து யாராவது வந்துவிட்டால் - அவன் கதி அதோ கதிதான்!

என்றாலும் இவ்வளவு தூரம் வந்துவிட்ட பிறகு அந்தச் சிறுவன் மனம் தளரவில்லை!

துப்பாக்கியை பெல்டிலிருந்து உருவி எடுத்தான் - கதவைத் திறந்து வெளியே வந்தான் - இருண்டிருந்த தெருக்களில் வேகமாக ஓடி ஒரு வீட்டுத் தோட்டத்தில் ஒளிந்து கொண்டான்!

வியர்வையால் கையிலிருந்த துப்பாக்கி பிசுபிசுத்தது!

தன்னை ஒருவரும் விரட்டி வரவில்லை என்பதைத் தெரிந்துகொண்ட பிறகு மெதுவாகத் தோட்டத்தைவிட்டு வெளியே வந்தான்.

வீட்டுத் தோட்டங்களின் ஓரமாகவே பதுங்கி நடந்து நேரே பள்ளிக்கூடத்துக்கு வந்தான்.

அங்கேதான் எதிரி நாட்டின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் தேசியப் படையினர் ஒளிந்திருந்து செயல்திட்டங்களைத் தீட்டி வந்தனர்!

மூடியிருந்த கதவில் மூன்று முறை தட்டினான் சிறுவன். அதுதான் இவர்களது சங்கேத அடையாளம்!

கதவு திறக்கப்பட்டது.

கையில் துப்பாக்கியுடன் உள்ளே நுழைந்த சிறுவனைக் கண்டு ஒரு கணம் அதிர்ந்துவிட்டார்கள் அங்கு கூடியிருந்த வாலிபர்கள்!

“அட இது ஆண்ட்ரு அல்லவா? இந்தத் துப்பாக்கி எங்கேடா கிடைத்தது?”

என்று கேட்டான் ஒரு வாலிபன் வியப்புடன்

வந்திருப்பது சிறுவன் ஆண்ட்ருதான் என்பதைக் கண்டவுடன் வாலிபர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்!

ஆண்ட்ரு தனது வீராவேசச் செயலை விவரிக்கத் துவங்கினான்.

தன்னைச் சுற்றிலும் பெரிய வீரர்கள் அமர்ந்து தனது பேச்சைக் கேட்பது இவனுக்குப் பெருமையாக இருந்தது!

இதுமட்டுமா?

எதிரிகளின் ஜீப் ஊரில் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தாலும் அதற்கு ஆபத்துத்தான்!

ஒளிந்து ஒளிந்து செல்லும் ஆண்ட்ரு ஒருவரும் பார்க்காத நேரத்தில் ஜீப்பின் பெட்ரோல் டாங்கியில் சர்க்கரையைப் போட்டு விடுவான்! அவ்வளவுதான் - அந்த ஜீப் பிறகு நகரவே நகராது!

அம்மாகூட ஒருமுறை கேட்டுவிட்டார்கள். -- சர்க்கரை கிடைப்பதே தட்டுப்பாடாக இருக்கும் போது இப்படியா என்று!
ஆண்ட்ருவிற்கு எதைப் பற்றியும் கவலையே கிடையாது! தான் நினைப்பதைக் கண்டிப்பாக செய்தே தீர வேண்டும்!

அதிலும் தனது நாட்டை ஆக்கிரமிப்புச் செய்திருக்கும் ஜெர்மானியரை எப்படியாவது விரட்ட வேண்டும். இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்திருக்கும் அரசி வில்ஹெமினா மீண்டும் நாட்டிற்குத் திரும்பி வரவேண்டும்!

இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற வேளை அது! ஹிட்லரின் படைகள் ஆண்ட்ருவின் சொந்த நாடான ஹாலந்தை ஆக்கிரமித்துக் கொண்டன! எதிர்க்கத் துணிவில்லாத டச்சு இளைஞர்கள் ஜெர்மானியப் படைக்குத் துணையாகச் சேர்ந்தனர். ஒரு சில வீரமுள்ள இளைஞர்களே ஜெர்மானியரை எதிர்த்து மறைமுகப் போர்புரிந்து வந்தனர். ஜேர்மானியர்களின் ஆயுதங்களைக் கையாடல் செய்வது, அவர்கள் மேலும் முன்னேற விடாமல் தடுக்க பாலங்களைத் தகர்ப்பது போன்ற கொரில்லா நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டு வந்தனர். ஆனால் பிடிபட்டால் உடனே மரணம் தான்!

இத்தகைய வீரர்களுக்குத் தான் தன்னால் இயன்ற உதவியைச் செய்து வந்தான் ஆண்ட்ரு. கொரில்லாப் படையினரின் செய்திகளை ஒருவருக்கொருவர் கொண்டு செல்வதே இவனுடைய முக்கிய பணி!

ஓட்டத்தில் ஆண்ட்ரு ஒருவீரன் தான்!

ஆண்ட்ருவின் அப்பா அவர்கள் வசித்த விட்டி என்ற ஊரிலிருந்து தினந்தோறும் போகவர எட்டு மைல்கள் சைக்கிளில் சென்று அல்க்மார் என்ற இடத்தில் பணியாற்றி வந்தார். ஆண்ட்ருவையும் சேர்த்து அவர்கூடப் பிறந்தவர்கள் மொத்தம் ஆறு பேர்! பெரிய குடும்பத்தை நிர்வகிக்க அவனுடைய அப்பா வீட்டுத் தோட்டத்திலும் கூட அதிகமாக உழைக்க வேண்டியிருந்தது. ஆண்ட்ருவின் அம்மா இதய நோயாளியாகையால் அவர்களால் கடினமான வேலைகளைச் செய்ய முடியாது.

ஆண்ட்ருவின் குடும்பம் ஒரு பகத்தியுள்ள குடும்பம். ஞாயிறு தவறாமல் ஆலயத்துக்குச் செல்வது மட்டுமின்றி, வீட்டுக்கு வந்த பிறகு போதகரின் பிரசங்கம் பற்றி விவாதிப்பதுமுண்டு!

ஆண்ட்ருவிற்கு ஆலயத்துக்குப் போவது என்றால் கொஞ்சம்கூடப் பிடிக்காது! ஆலயத்துக்குப் போகாமல் வெளியே சுற்றிவிட்டு, ஆலயம் விட்டு எல்லோரும் போகும்போது கூடவே செல்வான் அவன். அவர்களது பேச்சை வைத்து பிரசங்கத்தைப் பற்றி தெரிந்து கொள்வான். வீட்டில் நடக்கும் விவாதத்திலும் பங்கு கொள்வான்!

அவன் ஆலயத்துக்குப் போகவில்லை என்பதை வீட்டில் யாருமே கண்டுபிடிக்க முடியாது!
ஜெர்மானியர்களின் ஆக்கிரமிப்பினால் பன்னிரண்டு வயதாகுமுன்பே ஆண்ட்ருவின் படிப்பு தடைப்பட்டுவிட்டது.

விடுதலைப்படை வீரர்களுக்கு உதவுவதில் தனது நாட்களைக் கழித்தான் ஆண்ட்ரு.

ஜெர்மானியர்களின் ஆக்கிரமிப்பு கடுமையாக ஆக கொடுமைகள் அதிகரித்து வந்தன.

ஜெர்மானிய படையில் ஆட்களைச் சேர்ப்பதற்காக வீடு வீடாகச் சென்று டச்சு இளைஞர்களைக் கட்டாயப்படுத்தத் துவங்கினர். இதனால் விட்டி ஊரினுள் இராணுவ லாரி நுழைந்தது தான் தாமதம்! ஊரிலுள்ள ஆண்கள் எல்லோருமே தோட்டங்களின் வழியாக ஓடி கால்வாய் நீரில் ஒளிந்து கொள்வார்கள். அந்தக் கடுங்குளிரில் நீரில் நிற்பது எவ்வளவு கடினம்!

பதினான்கு வயதானதிலிருந்து ஆண்ட்ருவும் இவ்வாறு ஓடி ஒளிய வேண்டியிருந்தது!

மின்சார வசதியை ஜெர்மானிய வீரர்கள் மட்டுமே அனுபவித்து வந்தனர்! வீட்டில் குளிர் காயவும், அடுப்பெரிக்கவும் பயன்படுத்திய நிலக்கரியும் கிடைக்க வில்லை! அதனால் ஊரெங்கும் அழகான உயர்ந்து நின்ற எல்ம் மரங்கள் வெட்டப்பட்டன!

தானியங்கள் போர்வீரர்களுக்குச் சென்றுவிட்டதால் ரொட்டியைப் பார்க்கவே முடியவில்லை! காய்கறிகளை வைத்தாவது உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கலாம் என்றால் அதிலும் ஜெர்மானியர்கள் பங்குக்கு வந்தனர்.

(35ம் பக்கம் பார்க்க...)

தேவனைத் துதிக்கும் ஆராதனை

தினமும் காலை
9.00am – 11.00am

ஆண்டவரைத் தொழுதிடுவோம்

அன்பின் தேவ ஜனங்களே!
தேவனை ஆண்டவர் இயேசு மூலம் தொழுது கொள்ள இதோ அரிய சந்தர்ப்பம்.

"கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி உன் சத்துருக்களை விலக்குகிறார்" என்பது ஆண்டவர் வாக்கு.

- **கேட்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான்**
- **தேடுகிறவன் கண்டடைகிறான்**
- **தட்டுகின்றவனுக்குத் திறக்கப்படும்**

ஆம், சகல வியாதிகள் குணமாக்கவும், உங்கள் தேவைகளைச் சந்திக்கவும், விடுதலை பெற்று வாழவும், இதோ பூரண ஆசீர்வாதங்கள் பெற்றுக் கொள்ள ஆண்டவர் ஆராதனையில் பங்கடைய உங்களை வரவேற்கிறோம்.

நன்றி!

சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசேட ஆராதனைகள் நடைபெறும்.

138 Shorting Road, Toronto, Ontario M1S 3S6

647-977-3572
514-770-9485

Location
Two bus stops east of McCowan on Sheppard

French

For grade 4 to grade 12 or IB program

By a native French speaking teacher from France

(In the past years our students won French awards)

பிரெஞ் மொழி நன்கு பேச வல்ல ஆசிரியையிடம் பிரெஞ் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமா?

தொடர்புகளுக்கு

Intersection: Victoria Park and Ellesmere,
& McCowan and 14th Avenue

Tel: 647 262 94 30
Mr & Mrs. Shanthakumar

LEARN DRUMS

Start July 2nd

Birchmount and Eglinton

In 1 MONTH OR 4 MONTHS

REGISTER NOW

LIMITED SEATS AVILABLE

MORNING OR EVENING SESSIONS

CONTACT US AT

(647) 864 4343

(647) 828 9499 / (416) 494 9472

Seelamherbert@gmail.com

YOU CAN BE A DRUMMER IN ONE MONTH !

Since 1989

MEGA Duct & Carpet

www.megaduct.ca

Residential & Commercial Duct & Carpet Cleaning

Should You Get Your Heating Ducts Cleaned?
How Should Your Ducts Be Cleaned?
When Does Duct Cleaning Make Sense?
What Can Duct Cleaning Do For You?

Bus: 416-286-2416
Dir : 416-893-8363
Dir : 416-721-7879

NATHAN / KUMAR
nathan@megaduct.ca

Bus: 416-286-2416
Dir : 416-893-8363
Dir : 416-721-7879

Guitar Lessons

கிற்றார் வகுப்புகள்

Guitar இசையில் நீண்ட கால அனுபவமுள்ள ஆசிரியரால் கிறிஸ்தவ பாடல்களுக்கமைய Guitar வகுப்புகள் வழங்கப்படும். புதிய வகுப்புகள் ஆரம்பம்.

Christy Watson 416-752-9522

அரை வயிறு உணவு என்பதே பெரும்பாடாகிவிட்டது!

ஆண்ட்ருவின் அம்மாவின் உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது.

நல்ல வேளையாக 1945ஆம் ஆண்டு துவக்கத்தில் ஜெர்மானியர்கள் பின்வாங்கிவிட்டனர்! பாதுகாப்பிற்காகக் கனடியப் படைகள் வந்தன. எல்லோரும் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

கனடியப் படையினர் உணவுப் பொருள்களை விநியோகிப்பதை அறிந்து ஆண்ட்ரு ஐந்து மைல் தூரம் ஓடினான்.

அவனுக்கு ரொட்டித் துண்டுகள் கிடைத்தன!

நேரே அம்மாவிடம் கொண்டு வந்தான்.

பல வருடங்கள் கழித்து ரொட்டித் துண்டுகளைச் சுவைத்த அம்மா தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

போர் முடிவுற்ற போது ஆண்ட்ருவிற்கு பதினேழு வயதாகிவிட்டிருந்தது. ஆனால் இன்னும் எந்த வேலையும் செய்யாமல், படிப்பும் இன்றி வெட்டியாகச் சுற்றி வந்தான். அவன் செய்யும் குறும்புகளுக்கும் அளவேயில்லை!

ஒருநாள்-

தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த அப்பா அவனைக் கூப்பிட்டார்.

அப்பாவுக்கு காது கொஞ்சம் மந்தம். எனவே அவர்சத்தம் போட்டுப் பேசினால் நான்கு தெருக்களுக்குக் கேட்கும்!

“ஆண்ட்ரு உனக்குப் பதினேழு வயதாகிவிட்டது-”

“ஆமாம் அப்பா-”

“நீ என்ன வேலை செய்யப் போவதாக உத்தேசம்?”

அப்பாவின் பலத்த குரலை அண்டை வீட்டுக்காரர்களும் கேட்க முடியும் என்பதை அறிந்த ஆண்ட்ருவிற்குக் கூச்சமாக இருந்தது.

அவனால் ஒன்றுமே பதில் கூற முடியவில்லை.

“நீ சீக்கிரமாக ஏதாவது ஒரு வேலையைத் தெரிந்தெடுப்பது நல்லது. உனக்கு இரண்டு மாதம் டைம் தர்றேன். அதற்குள் உன் முடிவு எனக்குத் தெரியணும் -” அப்பா உறுதியாகச் சொல்லிவிட்டார்.

ஆண்ட்ரு கால்வாய்க் கரையோரமாக உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்தான்.

அவனுடைய படிப்பும் தடைப்பட்டுவிட்டது. அப்பாவைப் போலத் தொழில் கற்றுக் கொள்ளவும் அவனால் முடியவில்லை.

அவனிடம் இருந்தது – உடல் வலுவும், ஓடும்திறமையும் தான்!

அவனால் உடனடியாக முடிவுக்கு வரமுடியவில்லை.

அப்போது டச்சுக்காரர்கள் வசமிருந்த கிழக்கிந்தியத் தீவுகளில் விடுதலைப் போராட்டம் வலுப்பெற்று வந்தது. எனவே போராட்டத்தை அடக்க □லந்து படைவீரர்களை அனுப்பி வந்தது.

மேலும் படைவீரர்கள் தேவைப்படுகிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் ஆண்ட்ரு ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்.

“மீண்டும் சண்டைக்கா? மற்றவர்களைக் கொல்றது எனக்குப் பிடிக்கவில்லை –” அவனது முடிவைக் கேள்விப் பட்ட அம்மா மிகவும் வருத்தப்பட்டார்கள்.

ஆனால் ஆண்ட்ருவின் அப்பாவும், சகோதரர்களும் அவனது முடிவுக்கு மறுப்புச் சொல்லவில்லை.

படையில் சேருவதற்குப் பதினெட்டு வயதாக வேண்டும் என்பதால் ஆண்ட்ரு சில மாதங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது.

1946ம் ஆண்டு ஜனவரியில் ஆண்ட்ரு படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

இராணுவ உடை அணிந்து பெருமையுடன் விட்டி ஊரைச் சுற்றி வந்தான்!

வழியில் மலர்கள் ஏற்றுமதி செய்துவரும் வெட்ஸ்ட்ரா என்பவரைச் சந்திக்க நேர்ந்தது. அவர் ஒரு உண்மையான கிறிஸ்தவர்.

ஆண்ட்ருவின் இராணுவ உடையைக் கண்டவுடன் அவர்,

“நீயும் கிழக்கிந்திய தீவுக்குப் போகிறாயா?” என்று கேட்டார்.

பெருமிதத்தில் தலையசைத்தான் ஆண்ட்ரு.

“தீரச் செயல்கள் புரியலாம் என்ற எண்ணம் போலிருக்கிறது. ஆனால் நான் உனக்காக ஜெபிக்கிறேன், ஆண்ட்ரு. இந்தச் செயல்கள் உனக்கு ஆன்ம சமாதானத்தைத் தரும்படி ஜெபிக்கிறேன்-” வெஸ்ட்ரா அமைதியாகக் கூறினார்.

ஆண்ட்ருவினால் பதில் கூற முடியவில்லை!

கோர்கம் என்ற பட்டணத்தில் ஆண்ட்ரு இராணுவப் பயிற்சி பெற்றான். ஒவ்வொரு ஞாயிறும் அந்தப் பட்டணத்திலுள்ளவர்கள் பயிற்சி பெறுபவர்களுக்காகத் தமது வீடுகளில் விருந்து வைப்பதுண்டு.

அப்படிப்பட்ட விருந்து ஒன்றை அளித்தவர் ஒரு மீனவர். அவரது மகள் தைலி ஒரு இளம் பெண். கிறிஸ்துவின் மீது அளவற்ற விசுவாசம் கொண்டவள்.

ஆண்ட்ரு தைலிக்குமிடையே நட்பு மலர்ந்தது. ஆண்ட்ரு போர்முனையில் இருக்கும்போது, கடிதத் தொடர்பு மூலம் நாட்டின் செய்தியை எழுதுவதற்கு ஒப்புக்கொண்டாள் தைலி.

இறுதியாகப் போர் நடந்து வரும் இந்தோனேஷியா செல்லக் கப்பல் ஏறும் நாள் வந்தது.

வீட்டிலுள்ள அனைவரிடமும் விடைபெற்றான் ஆண்ட்ரு.

புறப்படும்போது அவன் கையைப் பிடித்தார்கள் அம்மா.

தனது பையிலிருந்து ஒரு சிறு நூலை வெளியே எடுத்தார்கள்.

அது அவர்களது வேதாகமம்!

“ஆண்ட்ரு, இந்த வேதாகமத்தை உன்னுடன் எடுத்துச் செல்கிறாயா?”

“சரி அம்மா-”

“இதை ஒழுங்காகப் படிக்கிறாயா?” மீண்டும் தலையாட்டிய ஆண்ட்ரு வேதாகமத்தை வாங்கித் தன் பையினுள் வைத்தான்.

அவ்வளவுதான் - பிறகு அதை ஒரேயடியாக மறந்துவிட்டான்! □

Voice Training

தமிழ் ஆங்கில கிறிஸ்தவ பாடல்களுக்கு Piano வுடன் (Praise & Worship) பயிற்சி கொடுக்கப்படும்.

416-724-7392

Computer Repairs

-Harware Upgrades
-Data Backup
-Re-install Operating System
-Replace Hard drive

Call: 647-989-8447
or
647-896-8447

DRIVER TRAINING

Ministry Approved Driving Instructor

- Satisfaction Guaranteed
- Special Attention for Beginners
- Courteous & Efficient Instructions
- Early Road Test Appointments
- Car Available for Road Test
- Maximum Insurance Discount Certificate

Tel: **647 891 3931 JOSEPH (Arul)**

இனிய மாற்றம்!

நம் வாழ்க்கையில் பல மாற்றங்கள் வருவதுண்டு. இளமைப்பருவம், வாலிபப் பருவம், திருமணப் பருவம், முதிர்வயது பருவம் என்று மனிதன் பல்வேறு வகையான மாற்றங்களுக்கு உள்ளாக கடந்து செல்லுகிறான். வயதுக்கு ஏற்றபடி சரீரத்தில் மாற்றங்கள் உண்டாகின்றன. அறிவிலும் மாற்றங்கள் உண்டாகின்றன. சூழ்நிலைகள், இட மாற்றங்கள் ஏற்படுகின்றன. வேலையில் மாற்றங்கள், உத்தியோகத்தில் மாற்றங்கள், எண்ணங்களில் மாற்றங்கள் வரத்தான் செய்கின்றன.

ஆனால், நம்முடைய வாழ்க்கையிலே நித்தியமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒருவர் உண்டு. அவர்தான் இயேசு கிறிஸ்து. என் வாழ்க்கையிலே இயேசு வந்த போது இனிய மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. துக்கத்திலிருந்து சந்தோஷத்துக்குள் கடந்து வந்தேன். கண்ணீரிலிருந்து ஆனந்தக் களிப்புக்குள் கடந்து வந்தேன்.

என் வாழ்க்கையிலே எண்ணற்ற இனிய மாற்றங்களை ஏற்படுத்திய இயேசுகிறிஸ்து உங்களுடைய வாழ்க்கையிலும் இனிமையான மாற்றங்களைக் கொண்டுவருவார்.

1973 – ம் ஆண்டில் எனது வாலிப பிராயத்தில் என் வாழ்க்கையின் குறிக்கோள் எல்லாம் உலகத்தை அனுபவிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. உலக ஆசை இச்சைகள் என்னை கவர்ந்திழுத்தன. உலகத்தில் மனிதன் பிறந்திருப்பது உலகத்தை அனுபவிப்பதற்காகவே என்று நான் எண்ணினேன்.

ஆகவே, நண்பர்களோடு சேர்ந்து ஒரு அறை ஒன்றை எடுத்து மனம்போல வாழலானேன். என் அறை நண்பர்கள் சிகரெட்டு பழக்கத்திலும், குடிப் பழக்கத்திலும், சூதாட்டத்திலும் மிக வேகமாக என்னை கொண்டுச் சென்றார்கள். ஆரம்பத்தில் அது கொஞ்சம் சந்தோஷத்தைக் கொடுப்பதாகவே காணப்பட்டது. ஆனால், போகப்போக அந்த பாவப் பழக்கவழக்கங்கள் என்னை அடிமையாக்கிற்று. சினிமா பைத்தியமாக அலைய ஆரம்பித்தேன். “பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாய் இருக்கிறான்” (யோவான். 8:34).

எவ்வளவுக்கெவ்வளவு உலக பாவ சந்தோஷங்களை அனுபவிக்க ஓடினேனோ அவ்வளவுக்கவ்வளவு என்னுடைய வாழ்க்கையிலே நிம்மதியை இழந்தேன். மன உறுதியை இழந்தேன். சமாதானத்தை இழந்தேன். தூக்கத்தை இழந்தேன்.

என்னுடைய அநேக துன்மார்க்க செயல்களினால் மன சாட்சியும் இடைவிடாமல் வாதித்துக் கொண்டிருந்தது. நான் எதை செய்தாலும் என்னால் முன்னேற முடியாமல் தோல்வியையே கண்டுகொண்டிருந்தேன். நான் படித்த படிப்பினாலோ எனக்கு நிம்மதியையும், சமாதானத்தையும் தர முடியவில்லை. தோல்வி உணர்வுகளும், குற்ற உணர்வுகளும் என்னை சோர்ந்து போகப் பண்ணிற்று.

எப்பொழுதும் எனக்குள்ளே ஒரு குரல், “நீ வாழ்ந்து என்ன பிரயோஜனம்? உன் வாழ்க்கையில்தான் நிம்மதி இல்லையே? ஏன் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது” என்றே இடைவிடாமல் தொனித்துக்கொண்டிருந்தது. நிம்மதியை தேடுகிறேன் என்று தூக்க மாத்திரையை விழுங்கிப் பார்த்தேன். இன்னும் அதிகமாய் குடித்துப் பார்த்தேன். ஒன்றிலும் சமாதானம் காண முடியவில்லை.

ஒருநாள் மாலை வேளையில் என் அறைக்கதவை யாரோ தட்டுவது போல உணர்ந்தேன். கதவை திறந்தபோது ஒரு வயதான மூதாட்டி நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏற்கனவே எனக்கு அறிமுகமானவர்கள்தான். மிகுந்த பக்தியுள்ளவர்கள்.

அவர்கள் நேராக என் முகத்தைப் பார்த்து, “தம்பி உன்னுடைய முகம் ஏன் இவ்வளவு துக்கம் நிறைந்ததாக இருக்கிறது? ஏன் மிகுந்த கவலையோடு இருக்கிறாய்? தம்பி, கவலையும், கண்ணீரும் நிறைந்த இந்த உலகத்தில் உனக்கு ஆறுதலையும் புது வாழ்வையும் தர வல்லமையுள்ள ஒருவர் உண்டு. உன் வாழ்வில் இனிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய ஒருவர் உண்டு. அவர்தான் இயேசு கிறிஸ்து” என்று சொல்லிக் கொண்டே அந்த அறைக்குள் நடந்து வந்தார்கள்.

“தம்பி, உனக்காக நான் ஜெபிக்கலாமா? நீ நம்பிக்கையோடு இயேசுவை நோக்கிப்பார். அவர் எல்லாப் பாவ பழக்க வழக்கங்களிலிருந்தும் உனக்கு ஒரு விடுதலை தருவார்” என்று சொன்னார்கள்.

அந்த அறையிலே அவர்கள் முழங்கால்படியிட்டு எனக்காக மிகுந்த பாரத்தோடும், கண்ணீரோடும் ஜெபம் பண்ணினார்கள். எத்தனையோ ஜெபங்களை நான் கேட்டிருந்தாலும் இந்த ஜெபம் நேரடியாய் இயேசு கிறிஸ்துவிடம் பேசுவது போல் இருந்தது.

அந்த ஜெபத்திலுள்ள மனதுருக்கம் என் இருதயத்தைத் தொட்டது. பாவ உணர்வை ஏற்படுத்தியது. அந்த ஜெபத்துக்குப் பின்பாக இயேசு கிறிஸ்து மனதுருக்கம் உள்ளவராக நின்று கொண்டிருக்கிறதை உணர முடிந்தது

என் கடந்த கால வாழக்கையை சிந்தித்துப் பார்த்தேன். நான் எவ்வளவு பெரிய பாவி என்பதை உணர்ந்து கொண்டேன். பரிசுத்தமுள்ள இறைவனுடைய சந்நிதியில் நிற்க அருகதையற்றவன் என்பதை புரிந்து கொள்டேன். “இயேசுவே எனனக்கு உதவி செய்யும். என்னை மன்னித்து உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும்” என்று கதறினேன். எனக்காக ஜெபித்த அந்த மூதாட்டி, தீர்க்கதரிசனமாக கர்த்தர் எவ்வளவாய் என்னை நேசிக்கிறார் என்பதையும் என்னை தம்முடைய ஊழியக்காரனாக எவ்வண்ணமாக பயன்படுத்தப்போகிறார் என்பதையும் சொன்னபோது எனக்கு மிகுந்த ஆச்சரியமாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

அவர்கள் ஜெபித்து விட்டு போனபின்பு ஒரு இனிய தெய்வீக பிரசன்னம் என்னை நிரப்பிற்று. பூரண சமாதானம் என்னை ஆண்டு கொண்டது. என்னை அறியாத சந்தோஷம் எனக்குள்ளே வந்தது. பல நாட்களாக தூங்க முடியாமல் இருந்த நான் அந்த இரவு நிம்மதியாய் உறங்கினேன்.

கலையிலே எழுந்தேன். வழக்கம் போல என்னுடைய கைகள் தலையணைக்கு கீழாய் இருக்கும் சிகரெட்டுகளை நொக்கிச் செல்லவில்லை. அதற்கு பதிலாக படுக்கையின் அருகிலே முழங்கால்படியிட்டு, “இயேசுவே என் வாழ்க்கையிலே இனிய மாற்றங்களை உண்டாக்கினீரே, உமக்கு நன்றி” என்று சொன்னேன்.

எனக்காக ஜெபித்த அந்த தாயாரைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை தோன்றியது. ஆகவே, உடனடியாக அந்த காலையில்தானே அவர்களுடைய வீட்டுக்குச் சென்று இயேசு கிறிஸ்து என்னுடைய வாழ்க்கையிலே கடந்து வந்தார். பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறது என்று விவரித்துச் சொன்னேன். அதற்கு அவர்கள் இந்த இனிய மாறுதலிலே நீ நிலைத்திருக்கவேண்டும். இன்று அதிகமாய் இயேசுவை அறிந்துகொள்ள வேண்டும். இன்று நான் ஜெபிக்கிற ஒரு ஜெபக் குழுவினரிடம் உன்னை அழைத்துச் செல்லப் போகிறேன் என்றார்கள்.

அப்படியே அன்று மாலை ஒரு வீட்டிற்கு என்னை அவர்கள் கூட்டிக்கொண்டு போனார்கள். அந்த வீட்டிலே ஏறக்குறைய பன்னிரண்டு பேர் முழங்கால்படியிட்டு மிக ஊக்கமாய் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். அங்கே பிரசங்கமோ, பெரியப் பெரிய பாடல்களோ இல்லை. ஒருவருக்கொடுவர் கண்ணீரோடு மிக ஊக்கமாய் மன்றாடி ஜெபித்துக் கொண்டே இருந்தார்கள். அந்த ஜெபம் மிக வல்லமையுள்ளதாய் இருந்தது. அந்த இடத்தை அசைத்தது. கொஞ்சம் கொஞ்சமாக நானும் அவர்களோடு இணைந்து ஜெபிக்க கற்றுக் கொண்டேன்.

அதன் பின்பு அதுபோல ஜெபிக்கிற பல்வேறு ஜெபக்குழுவினர்களை சந்திக்கிற வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அந்த வாய்ப்பின் விளைவாக நான் அதிகாய் கிறிஸ்துவுக்குள் வளரவும் ஏதுகரமாயிற்று. ஒரு வேதப்புத்தகம் வாங்கி இரவும் பகலும் படிக்கலானேன். ஜெபமும் வேத வாசிப்பும் தேவனுடைய வல்லமையை எனக்குள்ளே கொண்டு வந்தது.

இதை வாசிக்கிற என் அன்பு சகோதரனே, சகோதரியே, உங்களுடைய வாழ்க்கையிலே இயேசுகிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? உங்களுக்கும் அவருக்கும் தனிப்பட்ட ஐக்கியம் உண்டா? உங்களுடைய பாவத்தை எல்லாம் மன்னித்து இரட்சிப்பின் சந்தோஷத்தை அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கிறாரா?

இல்லாவிட்டால் இந்தப் புத்தகத்தை வாசிக்கிற இந்த நேரத்திலேயே நீங்கள் ஒரு உறுதியான தீர்மானம் செய்து இயேசுவை உங்களுடைய உள்ளத்திலே ஏற்றுக் கொள்ளுங்கள். அதுவே நீங்கள் உங்களுடைய வாழ்க்கையிலே செய்யக் கூடிய மிகப்பெரியதும், ஞானமானதும், மேன்மையானதுமான தீர்மானமாய் இருக்கும்.

எப்படி இயேசுவை ஏற்றுக் கொள்ளுவது? என்ற கேள்வி உங்களுடைய உள்ளத்திலே எழும்பலாம். வேதத்திலே பாவியான ஒரு மனிதன் இறைவனுடைய ஆலயத்திற்கு நேராக வந்து தன்னுடைய பாவங்களைக் குறித்து உணர்வடைந்து ஆண்டவரை நோக்கி, “தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாய் இரும்” என்று சொலி உண்மையாய் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஜெபித்தான். கர்த்தர் அதைக் கேட்டு மனதுருகினார். அவனை நீதிமானாக்கி ஆசீர்வதித்தார் என்று நாம் வாசிக்கிறோம்.

இந்த நாளிலும் நீங்கள் உங்களுக்காக சிலுவையிலே தொங்கின இயேசுகிறிஸ்துவை உங்களுக்கு முன்பாக நிறுத்தி அவரை நோக்கிப் பார்த்து, “இயேசுவே என் பாவங்களை மன்னியும். இயேசுவே என் உள்ளத்தில் வாரும். இயேசுவே என்னை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக் கொள்ளும். இயேசுவே எனக்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தாரும்” என்று கேளுங்கள். நிச்சயமாகவே இயேசு உங்களுடைய ஜெபத்தைக் கேட்டு ஒரு அற்புதத்தைச் செய்வார்.

எப்படி இயேசுவை ஏற்றுக் கொள்ளுவது? என்ற கேள்வி உங்களுடைய உள்ளத்திலே எழும்பலாம். வேதத்திலே பாவியான ஒரு மனிதன் இறைவனுடைய ஆலயத்திற்கு நேராக வந்து தன்னுடைய பாவங்களைக் குறித்து உணர்வடைந்து ஆண்டவரை நோக்கி, “தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாய் இரும்” என்று சொலி உண்மையாய் உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஜெபித்தான்.

உங்களுடைய உள்ளம் நீங்கள் செய்த பல பாவங்களை நினைவுப்படுத்துமானால் தனிமையான ஒரு இடத்திற்குச் சென்று முழங்கால்படியிட்டு, சிறுவயதிலிருந்து நீங்கள் செய்த ஒவ்வொரு பாவங்களையும் மனந்திறந்து இயேசு கிறிஸ்துவினிடத்தில் அறிக்கையிடுங்கள்.

இயேசு கிறிஸ்து ஒருவரே பாவங்களை மன்னிக்கிறவர். நம்முடைய பாவங்களுக்காக தம்மையே அவர் அர்ப்பணித்திருக்கிறார். சிலுவையிலே பாவ நிவாரண பலியாக தன்னையே ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

நீங்கள் அதை ஏற்றுக்கொண்டு அவரை நோக்கிப் பார்த்து உங்களுடைய ஒவ்வொரு பாவங்களையும் மனந்திறந்து அவரிடத்திலே சொல்லுங்கள். **“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்” (1யோவான் 1:9).**

இயேசு கிறிஸ்து ஒருவர்தான் நம்முடைய பாவங்களை மன்னித்து பாவ மன்னிப்பைத் தருகிறவர். நம்முடைய அக்கிரமங்களை மன்னித்து நம்மை விடுதலையாக்குகிறவர். நம்முடைய நோய்களைச் சுமந்து ஆரோக்கியத்தை கொண்டு வருகிறவர். நம்முடைய சாபங்களை சுமந்து ஆசீர்வதிக்கிறவர்.

“நம்முடைய மீறுதல்களின் நிமித்தம்ம அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்” (ஏசா. 53:5).

நீங்கள் பாவங்களை அறிக்கையிடுகிறது மாத்திரமல்ல, இனி பாவங்களுக்கு அடிமை ஆகாதபடி என்னைக் காத்துக் கொள்ளும் என்று ஜெபியுங்கள். மட்டுமல்ல, பாவத்தை வெறுத்து இனி பாவம் செய்ய மாட்டேன் என்று உறுதியான தீர்மானத்தை மேற்கொள்ளுங்கள்.

ஒரு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு இயேசு நிச்சயமாகவே உங்களுக்கு உதவி செய்வார். அப்பொழுது பாவ மன்னிப்பின் நிச்சயத்தை நீங்கள் பெறுவீர்கள். இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தம் உங்களுடைய பாவங்களை மன்னித்து உங்களை சுத்திகரித்து விட்டது என்பதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்.

வேதம் சொல்லுகிறது, **“தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கைச் செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.” (நீதி. 28:13).**

“இசே கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்” (1யோவா. 1:7).

உங்களுடையப் பாவங்கள் மன்னிக்கப்பட்டதோடு நின்றுவிடாதிருங்கள். இயேசு கிறிஸ்துவை இரட்சகராக உங்கள் உள்ளத்தில் அழையுங்கள். அவர் உங்களை ஆளுகிறவராய் இருக்கட்டும். உங்கள் அன்பு தகப்பனாய் இருக்கட்டும் உங்களுடைய கரங்களைப் பிடித்து அன்போடு வழி நடத்துகிறவராய் இருக்கட்டும்.

அவர் உங்களுடைய உள்ளத்தில் வரும்போது இரட்சிப்பை பெறுவீர்கள். உங்களுடைய இருதயம் இரட்சிப்பின் சந்தோஷத்தால் நிரம்பிவிடும். இனி நீரே என் ஆண்டவர், நீரே என் தெய்வம் என்று சொல்லி அன்போடு அவரைப் போற்றுங்கள்.

எங்கோ தூரத்திலே நிற்கிறதைப் போன்றிருந்த இறைவன் உங்களுடைய வாழ்க்கையிலே கடந்து வந்து உங்களுக்கு தகப்பனைப்போல பிதாவாய் மாறிவிடுவார். நீங்கள் அவருடைய பிள்ளைகளாய் மாறிவிடுவீகள்.

“அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் அவருடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்” (யோவா. 1:12).

அப்பொழுது நாம் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின சர்வ வல்லவரை, “அப்பா பிதாவே” என்று உரிமையோடு அழைக்க முடியும். அவர் நம்முடைய பிதா, நாம் அவருடைய பிள்ளைகள். அவர் நம்முடைய தகப்பன். நாம் அவருடைய சுதந்தரவாளிகள்.

இயேசுவின் குடும்பத்திற்கு இப்பொழுது நீங்கள் வந்து விட்டீர்கள். அவருடைய முழு ஆசீர்வாதத்துக்கும் சுதந்தரவாளிகளாகி விட்டீர்கள். இயேசுவின் குடும்பம் ஒரு பாக்கியமான குடும்பம். மேன்மையான குடும்பம். அது என்றென்றும் உள்ள நித்திய ஜீவன் உள்ள குடும்பம்.

இயேசுவின் குடும்பத்திற்குள் வந்துவிடும்போது மரணத்தைக் குறித்தோ, பிசாசைக் குறித்தோ, பாதாளத்தைக் குறித்தோ, நரகக் கடலைக் குறித்தோ கவலைப்பட வேண்டியதில்லை. கர்த்தர் அந்த எல்லா வல்லமைகளிலிருந்தும் நம்மை விடுவிக்க, காக்க வல்லவராய் இருக்கிறார்.

நம்முடைய பாவத்தின் விளைவாய் நம் மேல் வர வேண்டிய தண்டனையை இயேசு கிறிஸ்து தம்மேல் சிலுவையிலே ஏற்றுக்கொண்டபடியினால் இனி அந்த தண்டனையை நாம் அனுபவிக்க வேண்டியதில்லை. நமக்கு ஆக்கினை நியாயத்தீர்ப்பு இல்லை.

இதைத்தான் வேதம், “மறுபிறப்பு” என்று குறிப்பிடுகிறது. முதலாவது, இந்த உலகத்தில் நாம் பிறக்கும்போது உலகப்பிரகாரமான பெற்றோருக்கு பிள்ளைகளாக பிறக்கிறோம். ஆனால், நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும்போதோ பரலோக குடும்பத்தில் பிறக்கிறோம்.

நம்முடைய பெயர்கள் பரலோகத்திலுள்ள ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பரலோக தேவதூதர்கள் எல்லாம் உங்களுக்கு எப்பொழுதும் உதவி செய்ய ஆவலாய் இருக்கிறார்கள். கர்த்தர் அந்த பெரிய தேவதூதர்களை எல்லாம் அவருடைய பிள்ளைகளாகிய உங்களுக்கு பணிவிடை ஆவிகளாய் தந்திருக்கிறார். (எபி. 1:14).

இனி மனசாட்சி உங்களை வாதிக்க வேண்டியதில்லை. கிறிஸ்து உங்களை மன்னித்திருக்கிறாரே. தேவனுடைய பிள்ளைகள் என்று நீங்கள் தலை நிமிர்ந்து நடக்க முடியும்.

“நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்” (எபி. 12:22-24) □

Income Tax
E-File

- Personal, Self-employed, Small Business
- Corporations, Charities (Info Returns)

&

Payroll, Bookkeeping, Software Installation, Setting up your company accounts,
Profit / Loss, Company Net-worth Statements, Budgets and Consulting

George Jesuthasan, B.Sc., CMA
TW Tax & Accounting Services

Cell: 416 731 9560

Music Class

கிறிஸ்தவ பாடல்களுக்கு அமைய தமிழில் சங்கீத வகுப்புகள் நடைபெறகின்றது.

647 - 274 - 0989

விசுவாசத்திற்கான காரணங்கள்

தெய்வீக சுகம் என்ற உண்மையை பலர் உணர்கிறார்கள். ஆனால் மீட்பராகிய இயேசுவின் சரீரத்தைக் குறித்து தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கவில்லை. பிறர் சுகம் பெறுவதைக் காண்கிறார்கள். ஆனால் தாங்கள் சுகம் பெறுவது தேவனுடைய சித்தமா என்பதைக் குறித்து கேள்வி எழுப்புகிறார்கள்.

தாங்கள் சுகம் பெறுவதைக் குறித்து தேவனின் தனிப்பட்ட வெளிப்பாடு தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று காத்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் தங்களுடைய சுய நிலையிலிருந்து தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து நிற்கிறோம் என்பதைக் குறித்துச் சிந்தியாமல் இயற்கையான முறையில் சுகம் பெற, மனுஷீக முறையில் அத்தனை முயற்சிகளும் எடுக்கிறார்கள்.

சுகம் பெறுதலைக் குறித்து. சத்திய வேதம் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது. தன்னுடைய வார்த்தைகளடங்கிய உயிர் மூலமாக தன்னுடைய சித்தத்தை தெளிவாக வெளிப்படுத்திய பிறகு, தேவன் வேறு எவற்றின் மூலமாகவும் தனிப்பட்ட முறையில் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தத் தேவையில்லை.

தேவனுடைய பிள்ளைகளுக்கு சுகம் பெறும் உரிமை அவருடைய உயிலில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தேவன் பிரகடனப்படுத்தியிருக்கிறார் என்பதை, சத்திய வேதத்தை கவனமாகப் படிக்கும்போது அறிந்து கொள்ள முடிகிறது. அவருடைய பிள்ளைகளுக்கு அவர் சுகம் அளிப்பவர் என்பதை அவர் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

சுகம் பெறுவதற்கான சட்டம்

தேவன் இஸ்ரவேலரை எகிப்து தேசத்திலிருந்து அழைத்த போது, அவர்கள் சுகம் பெறுவதற்கு, அவர்களுக்கு ஒரு சாசனத்தையும், சட்டத்தையும் கொடுத்தார்.

நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவி கொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய (சுகமளிக்கிற) கர்த்தர் என்றார். – யாத்திராகமம் 15:26

எபிரெய மொழியில் இந்தச் சொற்றொடர் "எகிப்தின் மேல் வரச செய்த எந்த ஒரு வியாதியையும் உன் மேல் வரச் செய்ய மாட்டேன்" என்று கூறுகிறது.

இஸ்ரவேலர், 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்த காலங்களின் முடிவில் மேற்கண்ட உடன்படிக்கை, மறுபடியும் கூறப்பட்டது.

□□

சத்திய வேதத்தில், கருணையும், இரக்கமும் ஒரே பொருளைத்தான் தருகிறது. 'ரச்சமின்' என்ற எபிரெய வினைச்சொல், மொழி பெயர்க்கப்பட்டு, கருணை, இரக்கம் என்ற இருபொருளையும் தருகிறது. 'எலிக்கோ' என்ற கிரேக்க பெயர்ச்சொல் 'இரக்கம் கொள்ளுதல்' 'கருணை காட்டுதல்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'எலியேன்' என்ற பெயருரிச் சொல் 'இரக்கம் நிறைந்த', 'கருணை வாய்ந்த' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

□□

அவர்களுடைய சரித்திரம் முழுவதிலும், பலவீனங்கள் மற்றும் கொள்ளை நோய்கள் மத்தியில் இஸ்ரவேலர் மனமாற்றம் அடைந்து, தவறுக்காக அறிக்கை செய்து தேவனிடம் திரும்பியபோது அவர்களுடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக தேவன் அவர்களைச் சுகப்படுத்தினார். பழைய உடன்படிக்கையின்படி, சுகம், ஜெபத்தின் பதிலாக இருக்குமானால் புதிய உடன்படிக்கையின்படி, அது மிகவும் வெளிப்படையான உண்மையாகப் புலப்படுகிறது.

திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்றார்கள்; அவர்களெல்லாரையும் அவர் சொஸ்தமாக்கினார். –மத்தேயு 12:15

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுதல்

சிலர் கூறுகிறவாறு கிறிஸ்து சுகம் அளிப்பது. அவர் தெய்வீகத் தன்மையை மட்டும் நிரூபிப்பதற்காக அல்ல, தேவனுடைய கட்டளையை – தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காகவேயாகும்

தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன். – எபிரெயர் 10:7

தேவனுடைய சித்தத்தின் வெளிப்பாடே இயேசு கிறிஸ்துவானார். அவர் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். அவர் தன்னிடம் வந்த அனைவரையும் சுகப்படுத்தினார். அவர் மாறாக ஆசாரிய ஊழியத்தைக் கொண்டவராக இருக்கிறார். இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக இருக்கிறார். (எபிரெயர் 13:8)

அன்பில் மாறாத தன்மையுடையவராக இருப்பதால், இரக்கத்தில், திரளான மக்களை சுகப்படுத்தினார். பெலனில் மாறாத தன்மையுடையவராக இருப்பதால் எல்லாவித நோய்களையும் அவர் சுகமாக்கினார்.

அன்றியும் அவர் (இயேசு கிறிஸ்து) ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. – எபிரெயர் 2:17

இந்தப் பூலோக ஊழியத்தில் இயேசு கிறிஸ்து இரக்க மிகுதியால் அசைக்கப்பட்டார்; சுகம் தேவைப்பட்ட அனைவரையும் சுகப்படுத்தினார். இன்று உண்மையும், இரக்கமும் நிறைந்த பிரதான ஆசாரியராய் இருக்கிறார்.

சுகமளிக்கும் கிறிஸ்துவின் கட்டளை

சத்திய வேதத்தில், கருணையும், இரக்கமும் ஒரே பொருளைத்தான் தருகிறது. 'ரச்சமின்' என்ற எபிரெய வினைச்சொல். மொழி பெயர்க்கப்பட்டு, கருணை, இரக்கம் என்ற இருபொருளையும் தருகிறது. 'எலிக்கோ' என்ற கிரேக்க பெயர்ச்சொல் 'இரக்கம் கொள்ளுதல்' 'கருணை காட்டுதல்' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'எலியேன்' என்ற பெயருரிச் சொல் 'இரக்கம் நிறைந்த', 'கருணை வாய்ந்த' என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

இயேசு பன்னிரெண்டு சீஷர்களுக்கும் சுகம் அளிக்கும் கட்டளையைக் கொடுத்தார். (மத்தேயு 10:7-8). பின்பு எழுபது பேருக்கு அந்தக் கட்டளையைக் கொடுத்தார். நம்பிக்கை கொள்கிற அனைவருக்கும் அந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது. (மாற்கு 16:17-18) சபைக்கு இந்த கட்டளை கொடுக்கப்பட்டது (யாக்கோபு 5:14-16) இந்தக் கட்டளை ஒருக்காலும் ரத்து செய்யப்படவில்லை.

சுகம் பெறுதலின் கயிறு

விசுவாச ஜெபத்தின் பதிலாகக் கிடைக்கும் சுகமே, ஒரே வழியான சுகம் என்பதை ஆதித்திருச்சபை அறிந்திருந்தது. இந்த வழியான சுகம், ஒரு கயிறு போன்று காலா காலமாக, இந்நாள் வரை தொடர்ந்து வந்திருக்கிறது. ஆன்மீக இருளின் மத்திய காலங்களில் மறைந்து போன இந்த உண்மை, பரிசுத்த ஆவி பொழிந்து வருகிற இந்தக் கடைசி காலங்களில் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தேவனே அவருடைய மக்களுக்கு சுகம் தருகிறவர் என்பதை, ஒவ்வொரு நாட்டிலுமுள்ள கிறிஸ்தவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவின் மீட்பின் கிரியைகள் மூலம் தேவன் சுகத்தை அருளியிருக்கிறார். (ஏசாயா 53:4-5, மத்தேயு 8:16-17) எபிரெய வார்த்தையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு ஏசாயா 53ம் அதிகாரத்தில் பாடுகள் என்று பயன்படுத்தப்படுகிற வார்த்தை, சத்திய வேதத்தின் மற்றெல்லாப் பகுதிகளிலும் 'நோய்கள்' என்றே குறிப்பிடப்படுகிறது. மேலும் அவருடைய தழும்புகளால் (காயங்களால்) நாம் குணமாகிறோம்.

'சுமந்தார்' என்று மத்தேயு 8:17ல் பயன்படுத்தப்பட்டிருக்கிற வார்த்தையில் 'ஒருவரின் பிரதிநிதியாக' என்ற பொருள் ஓங்கி நிற்கிற. அனுதாபம் கொண்டு மற்றொருவரோடு துன்பப்படுதல் என்பது இதன் பொருள் அல்ல. மற்றொருவருக்காக, அவர் பிரதிநிதியாக துன்பப்படுதல் என்றே. இது பொருள்படும். இயேசு கிறிஸ்து நம்முடைய நோய்களைச் சுமந்தாரானால், நாம் ஏன் அவற்றைச் சுமக்க வேண்டும்?

நாம் சுகம் பெறுவதற்காக, கிறிஸ்து செய்த மீட்பின் தியாக பலியின் பலவகைகள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன: குஷ்டரோகி சுகமாகுதல் (லேவியராகமம் 14); வாதையிலிருந்து சுகம் பெறுதல் (எண்ணாகமம் 16:46-48); கொள்ளிவாயச் சர்ப்பம் (எண்ணாகமம் 21:7-9); யோபு சுகமாகுதல் (யோபு 33:24).

உபாகமம் 28ஆம் அதிகாரத்தில் நோயும் பெலவீனமும் சாபத்தின் விளைவுகளே என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கலாத்தியர் 3:13 கிறிஸ்து சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் என்று பிரகடனப்படுத்துகிறது.

சுகம் பெறுதல் வாக்குப் பண்ணப்படுகிறது

பாவமும், பெலவீனமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புள்ளவைகளாக வேதத்தில் காணப்படுகிறது. (சங்கீதம் 103:3). இயேசு சிந்திய இரத்தின் மூலமாகவும், அவருடைய காயம்பட்ட தழும்புகள் மூலமாகவும், பாவத்திலிருந்தும், பெலவீனத்திலிருந்தும் நமக்கு மீட்பு கிடைக்கிறது. யாரெல்லாம் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு வார்த்தைகளை நம்புகிறார்களோ அவர்களுக்கு தேவன் கொடுத்த அனைத்தும் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் கிடைக்கிறது. "இது அவருடைய சித்தம் அல்ல" என்று கூறி நீங்கள் உங்களை விலக்கிக்கொள்ள விரும்பலாம். ஆனால் தேவன் ஒருவரையும் விட்டு விடுகிறவர் அல்ல. தேவன் தகுதி பார்த்து ஒருவரையும் மதிப்பவர் அல்லர். அவருடைய வாக்குறுதிகள் அனைவருக்கும் உரியது.

உங்களில் பிணியாளிகள் எவரும் (சிலபேர் மட்டும் அல்ல) உண்டா? (யாக்கோபு 5:14)

(45ம் பக்கம் பார்க்க...)

சிறந்த ஆலோசனைகளுக்கு எங்கள் முகவர்களில் ஒருவரை அழையுங்கள்

- Life Insurance
- Non-Medical Insurance
- Travel Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- RESP - Education Saving Plan
- Dental & Drug Insurance
- RRSP's & Investments
- Final Expense Products (Through Funeral Homes)

Mega Financial Group

416 293 5559 • 416 666 1120

PH28-4168 Finch Ave. E. Scarborough, ON

RBC Insurance Desjardins ASSURANT

www.amenfm.com
Galaxy 19 satellite at 97° West
Frequency: 12060 MHz (Ku band)
Polarization: Horizontal
Symbol Rate: 22,000Msyb/s
FEC: 3/4
GloryStar Satellite Ch 1550
IPhone • IPad • Android
Register your e-mail with us
to receive your newsletter

Learn Drums and become
a drummer!!!
Starts September !!!!!!!
AT
1110 Birchmount Rd. Unit #8
[Birchmount and Eglinton]
Register Now
Accepting Students of All Ages
Morning or Evening Sessions
Contact us at:
(647) 828-9499
(647) 864-4343

Century 21®
ROUGE REALTY INC.
Brokerage*
THAKSHAAN JAYARANJAN
Sales Representative
1265 Morningside Ave. Suite # 203
Toronto, ON M1B 3V9
Direct: 647.302.0909
Business: 416.282.4444
Fax: 416.282.4488
thakshaan.jayaranjan@century21.ca
www.century21.ca/thakshaan.jayaranjan

ROGERS
பண்டிகைக்கால
பிரத்தியேக சலுகைகள்
STARTING AT
1 தமிழ் CHANNEL + BASIC CABLE $36²²
4 தமிழ் CHANNELS + BASIC CABLE $57³⁷
BASIC CABLE $19⁹⁹
STARTING AT
HIGH SPEED INTERNET $27⁹⁹
STARTING AT
HOME PHONE $16⁹¹
3 மாதம் இலவசம்
• DIGITAL VIP
• HIGH SPEED INTERNET EXPRESS
• HOME PHONE
6 மாதம் இலவசம்
• DIGITAL VIP
• HIGH SPEED INTERNET EXPRESS
• HOME PHONE
*ONLY FOR BRAND NEW HOMES
தமிழ் மொழியிலும் சேவை
பலர் அனுபவிக்கும் இச்சலுகைகளை நீங்களும் பெற்றுகொள்ள நேரடியாக அழையுங்கள்!
DANIEL RAVINDRAN
Advisor, Rogers Cable Communications Inc.
(416)-817-7977 / 1-866-360-7977
நம் மக்கள் மத்தியில் 12 வருடங்களுக்கு மேலான சிறந்த சேவை
ROGERS

கல்வாரி சர்வதேச திருச்சபை
UNIT 40-50 WEYBRIGHT COURT SCARBOROUGH ONT (South of Sheppard on Midland)
ஞாயிறு காலை ஆராதனை
11:00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
பாஸ்டர். டாக்டர். ஜோன். ஆபிரகாம்
இந்தவாரம் வானொலியில் தேவசெய்தியை கேட்டீர்களா??
கல்வாரி சர்வதேச திருச்சபை வழங்கும்
"ஆசீர்வாதம்" வானொலி நிகழ்ச்சி.
கீதவாணி 24 மணிநேர வானொலியில் மாலை 5:30 மணிக்கு
பாஸ்டர். ஜோன் ஆபிரகாம் தேவ செய்தி வழங்கி உங்களுக்காக ஜெபிப்பார்
Go To www.secondtrumpet.com
Sponsored by Rev. Dr. John Abraham's Calvary International Church
END TIME NEWS :
BIBLICAL TRUTHS REVEALED
சத்திய வேத வெளிப்பாடுகளையும் அறிய
CALVARY INTERNATIONAL CHURCH
Presents
"ASEERVAATHAM"
Brought to you by:
WAVES OF POWER INTERNET RADIO
ON: TUESDAYS @12:30PM & 7:30PM
WEDNESDAY @2:30AM
SUNDAY @ 6:30AM & 6:30PM
CATCH IT @ WWW.WAVESOFPOWER.COM

Tom Enterprises Ltd.
Suppliers for Automotive, Restaurants, Bakeries, Industries, Banquet Halls, Pizza and Grocery Stores.
Industrial Cleaning & Paper Products
1. Floor Brite
Hardwood
Granite
Marble
Vinyl Floors
2. Tub & Tile Brightener
3. Foam, Aluminium, Paper Products for
Restaurants
Catering
Pizza
Bakeries
Industries
Grocery Stores



Tel: 416.754.4222
Fax: 416.754.3283
Tom Enterprises Ltd.

Century 21 Regal Realty Inc.
Brokerage
John Abraham, Broker
நேர்மை! நாணயம்!! திறமை!!!
வீடு வாங்க, விற்க...
இலவச ஆலோசனைகள்,
மதிப்பீடு பெற்றிட
தேவையான அடமான
ஒழுங்குகள் செய்திட
ஜோன் ஆபிரகாம்
Cell: (647) 839-8393
BUS: (416) 291-0929
e-mail:johnabraham@trebnet.com



PRACTICING CHRISTIAN

ANGEL MUSIC ACADEMY
சங்கீத இசை வகுப்புக்கள்
தமிழ் கிறிஸ்தவ பாடல்களை,ஸ்ருதி,தாள
பாவத்துடன் சிறந்த முறையில் பாட, இசைக்க
கற்றுக்கொடுக்கப்படும்
Vocal,Violin,Veena Classes



For Information Call
Mrs. Vinitha Kirupananthavajah
(416) 433 9134

நயம்மிகு பொருள் இணைப்புகளால் ஆங்கிலச் சொற்களின் உருவாக்கம்

உலகமொழியாகவும், இலக்கிய வளத்தோடு அறிவியல் தொழில்நுட்பச் செல்வங்களையெல்லாம் தன்னகத்தே கொண்டும் சிறப்புற்று விளங்கும் ஆங்கில மொழியின் தொன்மையினை பின்வரும் கருத்துக்களைக் கொண்டு அரண் செய்யலாம்.

இலங்கிலாந்தில் ஆங்கிலேயர் குடியேறுவதற்கு முன்பே அங்கே தாய்மொழியாக விளங்கியது ஆங்கிலம்.

கி.பி.5 ஆம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த ஆங்கிலோ சக்ஷன் (Anglosaxon) என்னும் மொழியிலிருந்து படிப்படியாக வளர்ச்சி பெற்றதொரு மொழியே ஆங்கிலம். இக்கருத்தினை ஏற்றுக்கொள்வோர் ஆங்கிலோ சக்ஷன் என்பதற்குப் பதிலாகப் பழைய ஆங்கிலம் (Old English) என்ற சொற்பிரயோகத்தையே கையாளுவர்.

14ஆம் நூற்றாண்டில் (Chawcer) என்பவரோடு (கி.பி.1340-1400) இன்றைய ஆங்கிலம் (Modern English) தோற்றம் பெற்றது என்னும் கருத்தும் உண்டு. இக்கருத்தினை ஏற்றுக் கொள்ளத் தயங்குவோர் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த (Caedmon) என்பவரின் காலத்திலேயே ஆங்கிலம் ஒரு மொழியாக இருந்தது என்பர்.

ஆயினும், உண்மையில் இன்றைய ஆங்கிலம் இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஜெர்மன் மொழி பெற்றெடுத்த குழந்தையாகும். இதனால் தான் ஆங்கிலம் (Teutonic) இனத்தைச் சேர்ந்தது என மொழியியல், அறிஞர் குறிப்பிடுவர். ஆங்கில மொழி, ஜெர்மன் மொழி பெற்றெடுத்த குழந்தையாக இருந்தாலும், அதன் வளர்ப்புத் தாயாக விளங்குவது லத்தின் மொழியாகும். இதனாலன்றோ ஆங்கிலச் சொற்கள் பல, லத்தின் வேர்ச் சொற்களை ஒட்டியவையாக விளங்குகின்றன.

ஆங்கிலத்தின் பழமை பற்றிய கருத்துக்கள் எவ்வாறாக இருப்பினும் அது சொல்வளம் மிக்க நவீன மொழியென்பதில் இரண்டு வித கருத்துக்கு இடமில்லை. இதில் ஒன்பது லட்சத்திற்கும் மேற்பட்ட சொற்கள் உண்டு. இச்சொற்களில் சிலவற்றை உற்று நோக்கும்போது, அவை உருவாகிய விதம் நமக்கு வேடிக்கையையும், அதே சமயம் வியப்பையும் ஏற்படுத்துகின்றன. அத்தகைய ஒரு சில சொற்களே இங்கு விதந்துரைக்கப்படுகின்றன.

'Dictionary' என்னும் சொல்லைக் கவனிப்பவர்கள் 'Dicere' என்னும் லத்தீன் சொல்லை அது அடிச்சொல்லாகக் கொண்டுள்ள போதும் இரண்டு ஆங்கிலச் சொற்களின் இணைப்பினை அதில் காணலாம். அதாவது Diction+tarray என்னும் இரண்டு சொற்களின் புணர்ச்சியாக விளங்கும் அச்சொல்லில் Array என்னும் சொல் அரைகுறையாக உள்ளது. எனினும் Dictionary என்பது சொற்களின் ஒழுங்கு வரிசையைக் குறிக்கும்.

Window என்பதும் இரண்டு சொற்களின் இணைப்பாகும். இதில் Wind என்பது காற்றையும், dow என்பது door என்பதன் திரிபாகக் கொண்டு அதற்கு வழி என்றும் பொருள் கொள்ளலாம். இதன்படி 'Window' என்பது காற்று வரும் வழியாகும். இச்சொல் தமிழிலுள்ள காலதர் (கால் - காற்று, அதன்-வழி) என்னும் சொல்லை நமக்கு நினைவூட்டுகிறது.

'Woman' என்பதிலும் இரண்டு சொற்கள் ஒளிந்துள்ளன. ஒன்று 'Womb; மற்றது 'Man! ஒரு பெண் தன் கர்ப்பத்தில் மனிதச் சிசுவைத் தாங்குவதைக் கருத்திற்கொண்டு இச்சொல் உருவாக்கப்பட்டிருக்கலாம். இதில் 'Womb' என்பது சிதைக்கப்பட்டு, 'Man' என்பதோடு சேர்க்கப்பட்டுள்ளது.

இதைப்போன்றதே 'Toilet' (இதன்பொருள் கழிவிடம்) என்பதும், குறிப்பிட்ட ஒரு மறைவிடத்திற்குச் சென்று, காலைக்கடனை முடி என்பது இதன்பொருள். 'To + ilet' என்னும் இரண்டு சொற்களின் சேர்க்கையே 'Toilet' என்பதாகும்.

கடவுள் நல்லவர், நன்மைத்தனமுள்ளவர் என்றே எல்லாச் சமயங்களும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன. இதன்படி நல்லது என்னும் பொருள் கொண்ட 'Good' என்னும் சொல்லின் குறைநிலையே 'God' என்பதாகும்.

இச்சொல்லின் அமைவைப் போன்றதே Devil என்னும் சொல். இதிலும் இரண்டு சொற்கள் இருக்கின்றன. D என்னும் எழுத்து, Devine என்னும் சொல்லையும். evil என்பது தீமையையும் குறிக்கும். இச்சொற்சேர்க்கை தெய்வத்தன்மையுள்ள (Divinity) சம்மனசுகள் இறைவனின் சாபத்தால் பேயாக மாறின என்னும் கதையை நமக்கு நினைவூட்டுகிறது. இதன்படி Devil என்பது பேய் என்னும் ஒருவகைச் சிருஷ்டியையே குறிக்கும்.

நாம் ஒருவரிடமிருந்து விடைபெறும்போது Good-Bye என்று சொல்கின்றோம் இதன்பொருள் இறைவன் உம்மோடு இருப்பாராக என்பதாகும். இது God be with you என்னும் ஆங்கிலச் சொற்றொடரின் குறைநிலையாகும்.

Literature என்பதிலும் இரண்டு சொற்கள் இருக்கின்றன. ஒன்று Letter மற்றது Letterf என்பதற்கு இலக்கியம் (உ-+ம் Man of Letters) Culure என்றும் இவற்றில் Culture என்பதற்கு பண்பாடு என்றும் அர்த்தம், கொள்வோமாயின் Literature என்பது பண்பட்ட இலக்கியம் எனலாம். Hortust + Culture என்னும் இரண்டு சொற்கள் இணைந்து 'Horticulture ஆனது போல Letter+Culture என்பவை Literature ஆனது எனலாம்.

'Pass' என்னும் சொல்லோடு 'age' என்னும் சொல் இணைந்ததால் Passage என்னும் சொல் உருவானது. இதில் Pass என்பதற்கு ஊடாக என்றும் age என்பதற்கு பயணம் என்றும் பொருள். அதாவது பயணம் செய்வதற்குரிய வழி என்பது இதன் சரியான கருத்து.

'November' என்னும் சொல்லிலும் இரண்டு சொற்கள் அடக்கம். இதில் 'Novem' என்னும் லத்தின் சொல்லுக்கு ஒன்பது என்று பொருள். இதில் இணைந்துள்ள மற்றுமொரு சொல் Number ஆகும். இதன் பொருள் அடையாளம் அல்லது குறியீடு என்பதாகும். இச்சொல் சிதைவுற்று Novem என்னும் சொல்லோடு இணைந்துள்ளது. ஒரு காலத்தில் November ஒன்பதாவது மாதமாக விளங்கிய வரலாற்றுண்மையை இன்றும் இச்சொல் நமக்கு உணர்த்தி நிற்கிறது எனலாம்.

Winnow என்பது தமிழில் சுளகு எனப்படும். அரிசி அல்லது வேறு தானியங்களைச் சுத்தம் செய்யும் பொருட்டு இதில் இட்டுப் புடைப்பர். அப்படிச் செய்யும்போது, காற்று தானாகவே எழும். இதனை நோக்கும்போது Winnow என்னும் சொல்லில் Wind என்னும் பதம் மறைந்திருப்பதைக் காணலாம். சுளகின், இரண்டு பக்கங்களையும் பிடித்துப் புடைப்பதனால் Wing என்னும் சொல்லும் அதில் இருக்கிறது என்றும் கொள்ள முடியும். எனினும் Wind என்னும் சொல்லே மிகப் பொருத்தம் போல் தோன்றுகிறது. இதில் உள்ள இன்னமொரு சொல் 'Now' என்பதாகும். இதற்கு இப்போது என்று பொருள் கொண்டு இரண்டு சொற்களையும் இணைத்துப் பார்க்கும் கால் சுளகை ஏந்திப் புடைக்கும் சமயம் காற்று எழுகின்றது எனக் கொள்ளலாம்.

'Chairman' என்பதும் இரண்டு சொற்களின் இணைப்பே. இதன் நேரடிப்பொருள் கதிரைக்கு (Chair) உரிய மனிதன் (man) என்பதாகும். ஒரு மக்கள் கூட்டத்திற்கு அல்லது நிகழ்வுக்குத் தலைமை வகிப்பவர் Chairman என்று அழைக்கப்படுவார்.

ஒரு காலத்தில் வரலாறு என்பது அரசர்களுக்குரியதாகவே இருந்து வந்தது. இதனால் தான் வரலாறு 'History' என்று குறிக்கப் படுகிறது. இதில் His (அவனுடைய) Story (கதை) ஆகிய சொற்கள் இணைந்துள்ளன. அதிலும் இரண்டில் ஏதாவது ஒரு சொல், சிதைவுற்றிரு க்கிறது என்பதைக் கண்டுணரலாம்.

நாம் இரவில் சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குச் செல்கிறோம். அதன்பின் காலையில் எழும்வரை நாம் எதுவும் சாப்பிடுவதில்லை. எனவே இந்நிலை நாம் இரவில் அனுசரிக்கும் ஒருவித உண்ணா நோன்பையே (Fast) குறித்து நிற்கிறது. காலையில் சாப்பிடும் போது அந்நோன்பு முடிவுக்குக் (Break) கொண்டு வரப்படுகின்றது. இதனால் தான் காலைச் சாப்பாட ஆங்கிலத்தில் 'Break Fast' எனச் சொல்லப்படுகிறது.

Business என்பதும் பிரபல்யமான சொல். ஒரு வியாபாரி எப்போதும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டியவன். அத்தகையவனால்தான் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும். எனவே 'Business' என்னும் சொல் 'Busy' என்னும் சொல்லைக் கொண்டிருப்பது ஆச்சரியமல்ல.

BI-Cycle என்பதிலும் இரண்டு சொற்கள் இருக்கின்றன. 'BI' என்பதற்கு இரண்டு என்றும் 'Cycle' என்பதற்குச் சில்லு என்றும் பொருள். ஆக 'Bicycle' என்பது இரண்டு சில்லுகளைக் கொண்ட வாகனமாகும்.

நான்கு சொற்களின் (Left+In+Navy+Let) சங்கமமாக விளங்குவது 'Lieulenant' என்னும் சொல், அதாவது படைத் தளபதியின் (குறிப்பாகக் கடற்படைத் தளபதியின்) இடதுகரமாக விளங்கும் ஓர் இராணுவ அதிகாரியையே இப்பதம் குறிக்கும்.

'Inter-View' என்னும் சொல்லும் இரண்டு பதங்களின் இணைப்பாகும். இச்சொல் தமிழில் நேர்காணல்-நேர்முகம் என்று குறிக்கப்படுகின்றன. ஆனால் உண்மையில் இச்சொல் ஒரு மனிதனின் உள்ளப்பார்வையைக் குறித்து நிற்கும்..

மேலேதரப்பட்ட சொற்களின் மூலங்களை பழைய ஆங்கிலம் ஜெர்மனி, கிரேக்கம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் ஆகிய இந்தோ ஐரோப்பிய மொழிகளில் கண்டறியக் கூடுமெனினும் ஆங்கிலச் சொற்களைத் தனித்தெடுத்து அவற்றைக் கூர்ந்து பார்க்கும் ஒருவர், அவற்றில் பல, ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமையைக் கண்டறிய முடியும். □

□□
'Dictionary' என்னும் சொல்லைக் கவனிப்பவர்கள் 'Dicere' என்னும் லத்தீன் சொல்லை அது அடிச்சொல்லாகக் கொண்டுள்ள போதும் இரண்டு ஆங்கிலச் சொற்களின் இணைப்பினை அதில் காணலாம்.
□□

தமிழர்களின் நிர்வாகத்தில்

அனைத்து வசதிகளுடனும் கூடிய

FUNERAL HOME

- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Pre-plan funeral arrangements

MARANAM.COM

HEAVEN CARES

ONE STOP PEACEFUL FINAL ARRANGEMENTS

Fax: 416-292-5139
www.maranam.com, E-Mail: info@maranam.com

Call: **Vilosan Sivatharman**
Funeral Counsellor
416-431-3600

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor
416-258-6759

(விசுவாசத்திற்கான...)

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் (மத்தேயு 7:7).

என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவான் 14:14).

நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும். (மாற்கு 11:24)

சுகம், பரிசுத்த ஆவியின் பெலனால் வாக்களிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 8:11).

மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து சத்தியங்களும், தேவனிடம் விசுவாசத்தோடு வரும் எவருக்கும் சுகம் அளிக்க அவர் சித்தம் உள்ளவராயிருக்கிறார் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இது அவருடைய சித்தம். அவருடைய வழி. வேறு எந்த வழியான சுகமும் வேதத்தில் அறிவுறுத்தப்படவில்லை. அவருடைய பிள்ளைகளுக்காக தேவன் வேறு எந்த வழியையும் வைக்கவில்லை.

கிறிஸ்துவில் நமக்கு சுகம். ஆரோக்கியம், பெலன் தர அவர் சித்தம் கொண்டவராக இருக்கிறார். இது அவரில் நமக்குக் கிடைத்திருக்கிற உரிமையும், சுதந்திரமும் ஆகும். அவருடைய வழியை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவரை நாம் வணங்குகிறோம், போற்றுகிறோம். நாம் சுகம் உள்ளவர்களாக இருக்கும்படி அவர் சித்தம் கொள்கிறார். அவருடைய இந்த அன்பின் அனுகூலத்தை நாம் ஏற்றுக் கொள்வோமா? அவருடைய சித்தம் நம்முடைய வாழ்வில் நிறைவேறவும், நம்முடைய சரீரத்திலே தேவனை மகிமைப்படுத்தவும், அவருடைய வழியை ஏற்றுக் கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிவோமா?

ஜெபத்தில் உறுதியான அறிவு

தேவனுடைய சித்தத்தைப்பற்றிய உறுதியான அறிவு இல்லாமல், நாம் ஜெபிக்கக் கூடாது. "தேவனே, உமக்குச் சித்தமானால், என்னை சுகப்படுத்தும்" என்ற ஜெபம், சந்தேகத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. சந்தேகம் விசுவாசத்தை தகர்க்கிறது.

ஒரு ஊனமுள்ளவர் "தேவனுக்குச் சித்தமானால் சுகம் தரும்படி தேவனிடம் மன்றாடுவதில் நான் நம்பிக்கையுள்ளவனாக இருக்கிறேன்" என்று என்னிடம் கூறினார். அவருடைய இந்த சிந்தனையை விளக்கும் விதமாக இவ்வாறு கூறினார். "ஒரு குழந்தை பெற்றோரிடம் ஒன்றைக் கேட்கிறது. அது அக்குழந்தைக்கு நன்மையானதாக இருந்தால் மட்டுமே பெற்றோர் அதை அந்தக் குழந்தையிடம் கொடுக்கின்றனர். இதைப் போன்று தான் நானும் சுகத்திற்காக ஜெபிக்கிறேன்" என்றார்.

"ஒரு பெற்றோர் குழந்தையிடம் ஒன்றைக் கொடுப்பதாக வாக்களித்திருந்தால், அதை பெறும்படி எதிர்பார்க்க அதற்கு உரிமை இருக்கிறது. நம்முடைய தேவன் நமக்கு சுகத்தை வாக்களித்திருக்கிறார். அவர் அதை நிறைவேற்றும்படி அதை எதிர்பார்க்க நமக்கு உரிமை இருக்கிறது" என்று நான் பதிலுரைத்தேன்.

ஒரு காரியத்தில் தேவனுடைய சித்தம் என்ன என்பதை நாம் அறியாமல், அந்தக் காரியத்தை அவர் சித்தமானால் செய்யும்படி அவரை நோக்கி நாம் ஜெபிக்கக் கூடும். எது நமக்கு நன்மை தருமோ அதை அவர் செய்வார்.

ஆனால் ஒரு காரியத்தைச் செய்வதாக, அவருடைய சித்தத்தை உறுதியாக வெளிப்படுத்திய பிறகு நாம் அறிவீனமாயிருக்கவோ, அதைக் குறித்துச் சந்தேகப்படவோ அவசியம் இல்லை.

நாம் அவருடைய நிபந்தனைகளை நிறைவேற்றி, அவருடைய வார்த்தையை நம்பும்போது ஆன்மீக சுகத்தைத் தருவது அவருடைய சித்தமாயிருக்கிறபோது, சரீர சுகத்தைத் தருவதும் அவருடைய சித்தமாயிருக்கிறது என்ற உண்மையை சத்திய வேதம் வெளிப்படுத்துகிறது.

தேவனுடைய வாக்குத்தத்தத்தை உரிமையாக்குகிற விசுவாசம், அவருடைய சித்தத்தை அறிகிற அறிவில் நிலைத்திருக்கிறது. அவருடைய வெளிப்படையான, அறியப்பட்ட சித்தமே நம்முடைய விசுவாசத்தின் ஆதாரமாக இருக்கிறது. சுகம் பெறுதல் நமக்குரியதா இல்லையா என்பதைக் குறித்த சந்தேகம் நம்முடைய இருதயத்தில் இருக்கிற வரையில். சுகத்தைப் பெற்றுக் கொண்டோம் என்ற நம்பிக்கையோடு, விசுவாசத்தில் சுகத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது

தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டும். பின்பு, நாம் கேட்பதைப் பெற்றுக் கொள்கிறோம் என்ற நம்பிக்கையில், அவருடைய வார்த்தையின் மூலம் அவர் வாக்களித்தபடி விசுவாசத்துடன் சுகத்தைப் பெற்றுக் கொள்கிறோம்.

சுகம் பெறுதலில் நம்முடைய விருப்பமும் அடங்கியிருக்கிறது. நமக்காக தேவன் சித்தம் கொண்டதை நாம் பெற்றுக் கொள்கிறோமா?

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும். (யோவான் 15:7)

நம்முடைய விருப்பம் அவருடைய சித்தத்தோடு இடைபடும் போது காரியம் நடைபெறுகிறது. □

IN THE HANDS OF THE POTTER

The bible says in **Jeremiah 18:6** that we are like clay in the hands of the Potter. The Potter is our God who created us. ….If we have watched how the pots being made and shaped at a potter's house we will know how the potter works with his hands to shape the pots to his desire. As the wheel turns with the lump of clay he watches and carefully shapes and moulds with his hands. Sometimes the clay does not take the shape the potter intended, but the potter takes the clay and remakes another pot….

Our lives are in the hands of the Potter? It may be hard for us to understand or comprehend the hand of the Potter in our lives and we being the clay in His hands, but we cannot deny the fact that our heavenly Father is in the shaping and pruning business in our lives. He is the almighty God who loves us unconditionally and desires to have a personal relationship with us. The words from the popular hymn 'In Christ alone' say **'from life's first cry to final breath Jesus commands my destiny'.** As much as we may want to be in control of our lives the Hymn says He commands our destiny. The all knowing, all powerful God is with us. The bible says He is Immanuel-God with us. He also works all things in our lives for our own good **Romans 8:28.** Isn't it amazing to know that our God is not someone who is far away and is hard to find but someone who is with us. We may ask why He is interested in my life. He is interested in your life and mine because He created us and wants us to be more like Him. As we surrender to His authority, He manifests Himself in us.

Shaping I believe happens to all of us but the intense or the length of the shaping and pruning can be different to each individual. Many times we are confused, desperate and heartbroken about many situations but we are clay in His hands and who are we to ask Him or contend with Him about His doings? **Isaiah 45:9**. So the next time when we are in a dry confusing situation; instead of allowing all the negative thoughts to cloud our minds we can be certain that God has allowed it to happen for a reason. He loves us and will certainly carry us through it and our response should be as of Job's – **"But as for me, I would seek God, and to God I would commit my cause" Job 5:8.** David wrote in **Psalm 31: 14-15 "But as for me, I trust in You, O Lord, I say, "You are my God" My times are in Your hand.** The bible also says in **James 4:8 "draw near to God and He will draw near to you".** We may have begun this year with many plans and resolutions but as our heavenly Father leads and guides us we should be bold enough to say "have thine own way Lord, have thine own way; thou art the Potter I am the clay"

Nalayini Vyravipillai

(திருமணச்சேவை...)

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும் கனடாவில் வசிக்கும் 1986இல் பிறந்த இந்து மத மணமகனுக்கு மணமகள் தேவை. 416-752-0965

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், கனடாவில் வசிக்கும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. 647-502-4273

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், கனடாவில் வசிக்கும் 1982இல் பிறந்த இந்துமத மணமகளுக்கு மணமகன் தேவை 416-744-9895

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், கனடாவில் வசிக்கும் இந்துமத மணமகனுக்கு மணமகள் தேவை
416-297-7121

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், கொழும்பில் வசிக்கும் தற்பொழுது கனடாவில் விடுமுறையில் வந்து நிற்கும் 1966இல் மணமகளுக்கு மணமகன் தேவை
416-726-4186

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், கனடாவில் வசிக்கும் 1986இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை
647-772-6279

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், ஜேர்மனியில் வசிக்கும் 1990இல் பிறந்த இந்துமத மணமகளுக்கு மணமகன் தேவை 647-772-6279

யாழ்ப்பாணத்தைப்பிறப்பிடமாகவும், இந்தியாவில் வசிக்கும் 1981இல் பிறந்த பட்டதாரி இந்துமத மணமகளுக்கு மணமகன் தேவை
647-772-6279 □

சிறகில்
விளம்பரம்
செய்ய
அழையுங்கள்!
647 – 866 – 9464

தேவனே, சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்

ஆக்கம்: பாமினி தங்கராஜா

“என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்.” (சங்கீதம் 23:6) அன்பானவர்களே, ஒரு புதிய வருடத்தினில் பிரவேசிக்கக் கர்த்தர் கிருபையளித்திருக்கின்றார். அநேகர் இந்த வருடத்தினைக் காணமுடியாதவாறு மரணத்தைத் தழுவியிருக்கலாம், ஆனாலும் “நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே.” (புலம்பல் 3:22) ஒன்றுக்குமே தகுதியில்லாத நம்மை தம் திருஇரத்தத்தைச் சிந்தி மீட்டுக்கொண்டுள்ளார். பிரியமானவர்களே, கடந்த வருடம் நமக்கு வனாந்தரம் போலிருந்திருக்கலாம், போகிற பாதை தெரியாது தடுமாறிக் கொண்டிருந்திருக்கலாம், வாழ்க்கையில் இன்னல்களினால் துவண்டு போயிருக்கலாம், மழை இல்லாது ஒரு வறண்ட நிலமாக நம் வாழ்வு அமைந்திருக்கலாம். நன்மையும் கிருபையும் நம்மைத் தொடராத வண்ணம் வாழ்வினில் சூழ்நிலைகள் காணப்பட்டிருக்கலாம். ஆனாலும் இந்த வருடத்தினில் நம் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் தொடரும் வகையினில், தேவனின் சம்பூரண மழை பெய்யும்படி நம்மை அவர் கரத்தினில் ஒப்புக்கொடுப்போம்.

தேவவார்த்தையில் நிலைத்திருக்கும் போது

“உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.” (சங்கீதம் 119:105) அன்பானவர்களே, உலகம் பாவமாகிய காரிருளினில் மூழ்கிக் கிடக்கின்றது. ஜனங்கள் பாவஞ்செய்கின்றோம் என்கிற உணர்வே இல்லாது மனம் போன போக்கினில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். யாரும் கெட்டுப்பாதாளம் போய்விடக்கூடாது என்பதற்காகத் தன் ஜீவனை நமக்காக ஒப்புக்கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார் இரட்சகர் இயேசு. “அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு எனப்பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.” (மத்தேயு 1:21) ஆனாலும் அவர் அளிக்கும் இரட்சிப்பினை அறிந்து கொள்ளாதோர் அநேகருண்டு. ஏனெனில் தேவவார்த்தைகளை அவர்கள் அறியவில்லை. ஏன் அறிந்து கொள்ள வேண்டும்? என்கிற கேள்விகள். பிரியமானவர்களே, இப்புதிய வருடம் ஆரம்பித்த நாட்களிலேயே அநேக விபத்துக்கள், பல கொலைகள், மரணங்கள், துக்கங்கள், என்பவற்றை நாம் கண்கூடாக காணமுடிகின்றது. ஆனாலும் தேவனுடைய வார்த்தை நம் கால்களுக்குத் தீபமாக இருந்து பாதுகாக்கின்றது அவர் வார்த்தையாக இருந்து வழிநடத்துகின்றார். அவர் வார்த்தையில் அற்புதம் நிகழ்கின்றது, “அவர் எழுந்து காற்றை அதட்டி, கடலைப் பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார், அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று.” (மாற்கு 4:39) காற்றையும் கடலையும் அதட்டி அமரச் செய்த வார்த்தை.

> அன்பானவர்களே, உலகம் பாவமாகிய காரிருளினில் மூழ்கிக் கிடக்கின்றது. ஜனங்கள் பாவஞ்செய்கின்றோம் என்கிற உணர்வே இல்லாது மனம் போன போக்கினில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். யாரும் கெட்டுப்பாதாளம் போய்விடக்கூடாது என்பதற்காகத் தன் ஜீவனை நமக்காக ஒப்புக்கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார் இரட்சகர் இயேசு.

பிணியாளிகளைச் சொஸ்தமாக்கிய வார்த்தை, “ஆண்டவரே நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல, ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.” (மத்தேயு 8:8) நாம் பாவஞ்செய்யாதபடி நம்மைக் காக்கும் தேவவார்த்தை, “நாம் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.” (சங்கீதம் 119:11)

நமக்கு நித்திய சந்தோஷத்தைக் கொடுக்கின்ற வார்த்தை, ஜனங்கள் தம் சந்தோஷங்களுக்காக எத்தனையோ வழிகளை நாடிப் போகின்றார்கள், ஆனாலும் சிலசமயங்களில் அவையெல்லாம் பலனளிக்காமல் போகலாம், சொற்ப நேர சந்தோஷமாக இருக்கலாம். ஆனாலும் நம் தேவன் கொடுக்கும் சந்தோஷம் மட்டுமல்ல, அவர் வார்த்தை அளிக்கும் சந்தோஷம், அதை யாராலும் விபரிக்க முடியாதது.

“உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்.” (சங்கீதம் 119:92)

தேவவார்த்தை நமக்கு சந்தோஷத்தை மட்டும் அளிப்பதில்லை, சமாதானத்தைக் கொடுக்கின்றது. இந்நாட்களில் மனிதர்கள் மட்டுமல்ல, தேசங்கள் கூட சமாதானமின்றி தவிக்கின்றது. குடும்பங்களில் நிம்மதியான ஜீவியம் இல்லை. அநித்தியமான, நிரந்தரமற்ற சமாதானத்திற்காக ஜனங்கள் எத்தனையோ வழிகளில் பிரயாசப்படுகின்றனர். ஆனாலும் நமக்கு நிரந்த, நித்திய சமாதானத்தைத் தருபவர் நம் தேவன், அவர் வார்த்தை, “உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை.” (சங்கீதம் 119:165) அன்பானவர்களே, நாம் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு தேவவார்த்தையின்படி நடப்பது மிக அவசியம். இன மொழி மத வேறுபாடின்றி நம் ஆண்டவர் யாவருக்கும் வார்த்தையாக இருந்து நம்மை வழிநடத்துகின்றவர். அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரது வார்த்தையின் படி நடக்கும் போது. இப்புதிய வருடத்தினில் நம் வாழ்க்கையில் தேவன் சம்பூரணமான மழையைப் பெய்யப்பண்ணுவார் என்பது நிச்சயம்.

ஜெபத்தில் நிலைத்திருக்கும் போது

“தேவனே, என் ஜெபத்தைக் கேட்டருளும், என் விண்ணப்பத்திற்கு மறைந்திராதேயும்.” (சங்கீதம் 55:1) ஜெபம் என்பது நாம் தேவனோடு உறவாடுவது, பேசுவது. சிலசமயங்களில் நமக்கு கர்த்தரோடு உரையாடுவதற்கு, அதாவது ஜெபிப்பதற்கு நேரங்கள் கிடைப்பதில்லை. ஜெபங்களை தவிர்க்கின்றோம். ஆனால் மணிக்கணக்காக மற்றவர்களோடு நேரத்தைச் செலவழிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். உலகக்காரியங்களில் ஈடுபடுவதற்கு காலங்களை ஒதுக்குகின்றோம். நண்பர்களோடு சேர்ந்து அரட்டை அடிப்பதற்கு அகமகிழ்கின்றோம், நேரம் போவது தெரியாமல் தொலைக்காட்சிக்கு முன் அமர்ந்திருக்கின்றோம். ஆனாலும் நம்மை சிருஷ்டித்த தேவனோடு பேசுவதற்கு நேரமில்லை என்று சாட்டுச் சொல்கின்றோம். சிலசமயங்களில் ஜெபத்தை தள்ளிப்போடுகின்றோம். பிரியமானவர்களே, தேவன் நம் ஜெபங்களை எதிர்பார்க்கினறார், நாம் அவரோடு உரையாடுவதை விரும்புகின்றார். பிள்ளைகள் தங்களோடு உரையாடுவதை எவ்வளாய் பெற்றோர் விரும்புகின்றனரோ, அதைவிட மேலாக தேவன் நம்மோடு பேசுவதை விரும்புகின்றார். நாம் ஜீவனுள்ள தேவனோடு பேசுகின்றோம், நம்மை உருவாக்கிய கர்த்தரோடு சம்பாஷிக்கின்றோம், நம் ஜெபத்தைக் கேட்டு மறுஉத்தரவு கொடுப்பவரோடு பேசுகின்றோம். பிரியமானவர்களே, “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்.” (மாற்கு 14:38) அன்பானவர்களே. உலகத்தினில் நமக்கு உபத்திரவங்கள் உண்டு, சோதனை உண்டு, வேதனையான காரியங்கள் நம் வாழ்க்கையில் உருவாகலாம், நோய்களின் தாக்குதலினால் நிலைகுலைந்து போகலாம், ஆனாலும் ஜெபத்தில் ஜெயம் உண்டு, வல்லமை உண்டு. கர்த்தர் கேட்கின்றவராக இருக்கின்றார். நம்மைக் கைவிடாது வழிநடத்துகின்றவர். தேவன் சர்வவல்லரா இருந்து சகலத்தையும் அறிந்திருந்தாலும், நாம் நம் காரியங்களை அவரிடத்தில் சொல்லும்படியாக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார். வாழ்க்கையில் ஜெபம் இன்றியமையாதது. நம் உலக வாழ்க்கை நமக்கு மிக சௌகரியமானதாக இருக்கலாம், எதிலுமே குறைவில்லாதவர்களாய், பல பட்டங்கள், புகழ், சமுதாயத்தில் மேன்மை, பணம் என்பன வாழ்க்கையில் நிறைந்திருக்கலாம். அதின் பிரகாரமாய் ஜெபம் செய்ய வேண்டிய அவசியம் எமக்கில்லை என்கிற வகையினில் நாம் நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனாலும் அன்பானவர்களே, நமக்கு எதிர்பாராத சூழ்நிலைகள் வாழ்க்கையில் ஏற்பட சாத்தியமுண்டு. வீசிடும் தென்றல் கூட புயலாக மாறிடும் நிலைகள் உருவாகலம் “ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்” (சங்கீதம் 65:2) மாம்சமான யாவரும் தேவனைத் தேடும் வகையினில் ஜெபத்தில் தரித்திருத்தல் அவசியம். சிலருக்கு அது அவசியமாகப்படுவதில்லை. ஏனெனில் அவரோடு உறவாடும், உரையாடும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புவதில்லை. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே பலமணி நேரங்கள் ஜெபத்தில் தரித்திருந்தார். நமக்கு முன்மாதிரியாக வாழ்ந்து விட்டுச் சென்றுள்ளார். “ஆதலால், நீங்கள் ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.” (மாற்கு 11:24) அன்பானவர்களே, ஜெபம் பண்ணும் போது நம் சிறையிருப்பை ஆண்டவர் மாற்றுகின்றார். ஜெபத்தினில் உறுதியாக தரித்திருக்கின்ற வேளையில், இப்புதிய வருடத்தினில் தேவன் நம் வாழ்க்கையில் சம்பூரணமான மழையை பெய்யப்பண்ணுவார் என்பது நிச்சயம்.

தேவனுடைய வழிகளில் நடக்கும் போது

“அதற்கு இயேசு, நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்.” (யோவான் 14:7) அன்பானவர்களே, இவ்வுலகத்தினில் நமக்கு பலவழிகள் உண்டு நாம் வாழ்வதற்கு, அல்லாமலும் பல வழிகளைக் கையாளுகின்றோம் நம் தேவைகள் சந்திக்கப்பட, நல்லவழி எது? தீயவழி என்று தெரியாது செயற்படுகின்றோம். ஆனாலும் அவையெல்லாம் சிலசமயங்களில் நமக்கு நன்மையாக அமைவதில்லை. இறுதியில் துன்பங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைகள் உருவாகலாம். ஆனாலும் நம் தேவன் காட்டும் வழி எந்தத் துன்பத்தின் பாதையிலும் நம்மை வழிநடத்துவதில்லை. “நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன், உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.” (சங்கீதம் 32:8) அவர் நமக்கு ஆலோசனை சொல்லி வழிநடத்தும் போது எந்த தீங்கும் நம்மை அணுகமுடியாது. சிலசமயங்களில் போகிற வழி தெரியாது, அன்றியும் தெரிந்தும், தெரியாதது போல் பலவழிகளில் நாம் நடந்து கொண்டிருக்கலாம். வழி

(52ம் பக்கம் பார்க்க...)

அன்பானவர்களே, புதிய வருடத்தில் புதிய புதிய எதிர்பார்ப்புகளா?

அதிசயங்களைக் காணச்செய்யும் கர்த்தரை நோக்கிப்பாருங்கள்

சகோதரி: பிரிஸ்கில்லா-சாமுவேல்

இனி வரப்போகும் நாட்களில் கர்த்தர் அதிசயங்களைச் செய்ய வேண்டுமானால், எமது கண்கள் அவரது அதிசயங்களை இன்னும் நோக்கிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் அதிசயமானவராக இருந்தார். இப்போது அதிசயமானவராக விளங்குகிறார். இனிவரும் காலங்களில் நமக்கு அதிசயமானவராக விளங்குவார்.

அன்பானவர்களே, இன்று நாம் அறியாத ஓர் ஆரம்பத்துக்குள் வந்திருக்கிறோம். ஒரு புது வருடம் நமக்கு முன்பாக இருக்கிறது. அதை நாம் சுதந்தரித்துக் கொள்ளப்போகிறோம். அதில் நாம் என்ன காண்போம். என்று யார் சொல்லக்கூடும்? என்ன புது அனுபவங்கள், என்ன மாறுதல்கள் ஏற்படப்போகின்றனவோ? நமக்குத் தெரியாது. இச்செய்தி பரம பிதாவிடமிருந்து வருகிறது. உங்கள் தேவனாகிய கர்த்தர் அதை விசாரிப்பார். வருடத்தின் முடிவு மட்டும் கர்த்தரின் கண்கள் அதன் மேல் நோக்கமாய் இருக்கும். நமக்குத் தேவையான யாவும் பரத்திலிருந்து வர வேண்டும். கவலை கொண்டிருப்பவரே, இதோ பரமபிதாவின் கிருபை நிறைந்த வாக்குத்தத்தம் இருக்கிறது. நாம் பெறுகிற கிருபைக்கு ஆதாரம் அவரே. ஆகையால் அது தவறாது. கர்த்தருடைய பட்டணத்தை மகிழ்ச்சியடையச் செய்யும் நீரோடை வெப்பத்தினாலோ மழையினாலோ வற்றுவதில்லை. வெப்பமும் வறட்சியும் வற்றவைக்க முடியாது. வாழ்க்கை ஒரே சமபூமிபோன்று இருந்தால் நாம் சலித்துப் போவோம். நமக்கு மலைகளும், பள்ளத்தாக்குகளும் தேவை. அவை மக்கள் பலன்தரத்தக்க அநேக பள்ளத்தாக்குகளுக்கு மழைத்தண்ணீரைச் சேகரிக்கின்றன. ஆம் அதுபோலவே நாமும் இருக்கிறோம். மலைபோன்ற கஷ்டங்களே நம்மைக் கிருபாசனத்தண்டைக்கு ஓடச்செய்து மலைபோன்ற ஆசீர்வாதங்களைக் கொண்டு வரச் செய்கின்றன. நாம் வாழ்க்கையில் எந்த மலைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு அவை வெறுமையானவை, பயனற்றவை, முடியாதவை, என்று எண்ணுகிறோமோ அவைகளே மழையைக் கொண்டு வருகின்றன. கர்த்தர் அனுப்பும் மலைகளான கஷ்டங்கள் நம்முடைய எதிரிக்கு முன்பாக நம்மைப் பாதுகாக்கும் அருள் மலைகளாகும். நமக்கு வரும் சோதனைகளும் கஷ்டங்களும் நமக்கு என்ன செய்கின்றன என்று சொல்லமுடியாது. நாம் நம்பிக்கையோடு மாத்திரம் இருந்தால் நம்முடைய அழிவில் நம்முடைய கரத்தைப்பிடித்து வழிகாட்ட பிதா நம்மண்டையில் வருகிறார். இது நமக்கு நன்மையும் ஆசீர்வாதமும் ஆன புதிய வருடமாயிருக்கும். நாம் அறியாத பாதையில் நம்மை அழைத்துச் செல்கிறார். நம் நடை மெதுவானாலும் மேல் நோக்கி நடத்துகிறார். நாம் வழியில் களைத்துத் தங்குகிறோம். இருட்டும் புயலும் நம் பாதையை மறைக்கின்றன. ஆனாலும் மேகம் நீங்கும் போது கர்த்தரின் நடத்துதலைக் காண்போம். **கலக்கம் நிறைந்து இருக்கும் ஆண்டுகளிலும் நம்மை நடத்துகிறார்.நம்முடைய நம்பிக்கை, பயம், சந்தேகம் ஆகியவற்றைத் தாண்டி, சேதம், கவலை நிறைந்த இருண்ட நாள்களிலும் நம்மை வழி நடத்துகிறார். அவர் சித்தம் நிறைவேறுகின்றது என்று நாம் அறிவோம்.** அவர் தொடர்ந்து நம்மை நடத்துவார். **நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார். நமது பாதங்கள் தாங்கக்கூடிய அளவிற்கு மேல் எம்மை ஒரு அடியும் எடுத்து வைக்கச் செய்யமாட்டார். அடுத்த அடி எடுத்து வைக்க இயலாது என்று நாம் கவலை கொள்ளும் போது கர்த்தர் எம்மைப் பலப்படுத்துவார். அல்லது திடீரென்று அடுத்த அடி எடுத்து வைக்கத் தேவையில்லாதபடி செய்வார்.**

மீகா: 7:15: நீ எகிப்து தேசத்தில் இருந்தது போலவே அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்.

இனி வரப்போகும் நாட்களில் கர்த்தர் அதிசயங்களைச் செய்ய வேண்டுமானால், எமது கண்கள் அவரது அதிசயங்களை இன்னும் நோக்கிப் பார்க்க வேண்டும். கடந்த காலத்தில் அதிசயமானவராக இருந்தார். இப்போது அதிசயமானவராக விளங்குகிறார். இனிவரும் காலங்களில் நமக்கு அதிசயமானவராக விளங்குவார். வேதத்தில் மனோவா என்ற தம்பதிகளை பார்ப்போம் என்றால் அவர்கள் புத்திரபாக்கியமற்றவர்கள், ஒரு தேவதூதன் வெளிப்பட்டு நீ கர்ப்பம் தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய் என்று மனோவாவின் மனைவியிடம் கூறினார். அதை மனோவாவின் மனைவி தனது கணவனிடம் கூறுகிறாள். மனோவாவோ கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான் திரும்பவும் அந்தத் தேவ தூதன் வந்து பிறக்கப் போகும் தங்கள் பிள்ளைக்கு என்ன செய்ய வேண்டும் என்று கற்பித்துத் தரும்படி வேண்டினான். தேவன் மனோவாவின் சத்தத்திற்கு செவிகொடுத்தார். திரும்பவும் அவர்கள் இருவருக்கும் தேவதூதன் தரிசனமானார். அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் காணும்படி, உம்முடைய நாமம் என்ன என்று கேட்டான். அதற்கு கர்த்தருடைய தூதன் என் நாமம் என்ன என்று நீ கேட்க வேண்டியது என்ன? **அது அதிசயம் என்றார்.** (நியாயாதிபதிகள்:13: 17,18) இதேபோல் தான் எமக்கு ஒன்றுமே ஆசீர்வாதமாய் இல்லை என்று நினைக்கும் போது தேவன் எமது வாழ்வில் அதிசயங்களைக் காணச் செய்வார். மனோவா தம்பதிகள் தங்களுக்கு ஒரு குழந்தை கிடைக்கும் என்றோ, தேவதூதன் தரிசனமாவார் என்றோ, நினைத்தே இருக்கமாட்டார்கள். அதேபோல் எமது வாழ்விலும் நாம் நினைப்பதற்கும் வேண்டுவதற்கும் அதிகமாய் செய்ய அதிசயமான தேவன் உண்டென்று நாம் விசுவாசித்து எதிர்பார்க்க வேண்டும். இதேபோல் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எகிப்தை விட்டு புறப்பட முன் பல அதிசயங்களை மோசே, ஆரோன் மூலம் செய்தார். அதன் பின் இயற்கையின் பொருளினால் கூட அதிசயம் செய்தார். கடலைப் பிளந்தார், கன்மலையைப் பிளந்தார், வானத்தின் கதவுகளைத் திறந்தார், கீழ்க்காற்றை வரப்பண்ணி காடைகளை அனுப்பினார். இவையெல்லாவற்றையும் கண்டும் கூட இஸ்ரவேல் மக்கள் ஆண்டவருடைய செயல்களையும், அவர் தங்களுக்குக் காண்பித்த அதிசயங்களையும் மறந்தார்கள்.(சங்கீதம்: 78:11) இஸ்ரவேல் மக்களுக்கு வந்த தடைகளை அனைத்தையும் நீக்கினார். அவர்களுடைய எதிரிகளோடு அவர்களுக்காய் யுத்தம் பண்ணினார்.

யாத்திராகமம்:14: 13,:- இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.

யாத்:14:14: கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார் நீங்கள் சும்மா இருப்பீர்கள்.

பார்வோன் கர்த்தர் செய்த அதிசயத்தால் துன்பம் அநுபவித்த படியால் இஸ்ரவேலரை எகிப்தைவிட்டு புறப்பட்டுச் செல்ல அனுமதியளிக்கிறான். சிறிது நேரத்திற்குள் தங்களுக்கு பணிவிடை செய்யாது இஸ்ரவேலரை அனுப்பிவிட்டோமே என்று கோபத்தோடு அவர்களைப் போர் வீரரோடும், இரதங்கள் குதிரை வீரரோடும், பின்தொடர்ந்தான்.ஆனால் அதிசயங்களைச் செய்கிற கர்த்தரோ கையால் செய்யப்பட்ட ஈட்டி, வாள், அம்பு போன்ற எந்த ஒரு ஆயுதத்தையும் யுத்தத்திற்கு பயன்படுத்தவில்லை. தான் சிருஷ்டித்தவைளையே கொண்டு இஸ்ரவேலரை அதிசயங்களை காணப் பயன்படுத்தினார். இவற்றை எல்லாம் கண்டும்கூட ஆண்டவருடைய அதிசயங்களை மறந்து முறுமுறுத்தார்கள். எமது தேவைகளை முறுமுறுக்காமல் ஆண்டவரிடம் கூறும் போது அவருடைய சித்தத்தின்படி செய்வார். வேதத்தில் எலியா என்ற தீர்க்கதரிசியைப் பார்ப்போம் என்றால் அவன் தனக்கு வந்த பிரச்சனையை ஆண்டவரிடம் கூறும் போது அவர் அவனை காப்பாற்றி. அவனை போஷித்தார். ஒரு வற்றிப்போகிற ஆற்றுக்கு அருகில் காகம் கொண்டு வந்து ஆகாரத்தைக் கொடுக்குமானால் நமக்கு எப்படி செய்வார். காகத்தை எடுத்துக் கொண்டால் காகம் போஷிக்கும் என்று ஒருவராலும் நம்ப முடியாது. ஏனென்றால் அது நோவா பேழையை விட்டு அனுப்பும் போது செய்தியை கொண்டு வராமல் பிணங்களை கண்டு அங்கேயே தங்கி விட்டது. அதனால் அப்படிப்பட்ட ஒரு பறவையை வைத்து யாருமே நம்பமுடியாத அளவிற்கு தேவன் செயல்பட்டார் என்றால், எமது தேவைகளை, எதிர்பார்புகளை, தேவன் சந்திக்கமாட்டார் என்பது என்ன நிச்சயம். அதுதான் அவர் நாமம் அதிசயம். **ஆண்டவர் வெகுமதிகள் அளிக்கும் நாள் ஒன்று வரும். உங்களைப் பற்றி கேள்விப்படாத சிலர். நாம் இவர்களை அறியோமே, இவ்வெகுமதிகளை பெறும் தகுதி இவர்களுக்கு எங்கிருந்து வந்தது என்று கூறக்கூடும். ஆனால் ஆண்டவர் என்றும் தவறுகள் செய்வதில்லை. அவர் அதிசயங்களைச் செய்கிற தேவனாய் உள்ளார். ஆண்டவருடைய வாக்குத் தத்தங்களைப் பொருத்தமட்டில் நமக்குச் சுதந்தரித்துக் கொள்ளும் விசுவாசம் இருக்க வேண்டும். நாம் அவருடைய வார்த்தைகளை நமக்குச் சொந்த உடமைகள் ஆக்கிக் கொள்ளவேண்டும்.**

(1) யோசேப்பின் புத்திரராகிய மானாசேயும், எப்ராயீமும் சுதந்தரித்தார்கள்.(யோசுவா: 16:4)

(2) யாக்கோபின் வம்சத்தார் தங்களுடைய சுதந்திரங்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் (ஒப:1:17)

(3) உத்தமர்களோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள் (நீதி: 28:10)

அன்பானவர்களே, உங்கள் வழிகளை அடைத்திருக்கும் இரும்புக் கதவுகள் ஏதாகிலும் உங்கள் வாழ்வில் இருக்கலாம். கூண்டில் அடைக்கப்பட்ட பறவை போல கம்பிகளில் நீங்கள் மோதிக் கொண்டு இருக்கலாம். அதனால் எவ்வித பலனும் பெறமுடியாது. அதனால் களைப்படைந்து விழுந்துவிடவும், மனமடிவினால் இருதயம் புண்படவும் செய்யும். ஆனால் ஆண்டவர் கூறுகிற வாக்குத்தத்தம் என்னவென்றால், மகனே, மகளே, நீ எப்போதும் என்னோடு இருக்கிறாய், எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாய் இருக்கிறது.

(52ம் பக்கம் பார்க்க...)

(தொடர்ச்சி)

பரிசுத்தராய் இருங்கள்

பாஸ்டர் **அல்பிரட் செருபிம் - மீட்பர் கிறிஸ்து சபை**

கடைசிநாட்களில் கொடிய காலங்கள்

எம்மைச் சூழ்ந்து வாழ்பவர்கள் ஒன்றில் தேவனை அறியாதவர்களாகவும் அல்லது பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டவைகளுக்கு எதிராக செயற்படுகிறவர்களாகவும் இருப்பதைக் காணலாம். உதாரணமாக அப்படிப்பட்டவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை கீழ்காணும் வேதப் பகுதிகளில் விபரமாக வாசித்து அறியலாம்.

□□

செய்கிறவர்கள் திடப்படுகிறார்கள், அவர்கள் தேவனைப் பரிட்சைபார்த்தாலும் விடுவிக்கப்படுகிறார்களே என்று சொல்லுகிறீர்கள். அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொள்வார்கள்: கர்த்தர் கவனித்துக் கேட்பார், கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத் தியானிக்கிறவர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது.

□□

"மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள்."- **2 தீமோ. 3: 1-7**

"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்."- 1 **கொரி. 6: 9-11**

"மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்."- **கலாத். 5: 17- 21**

